# KARPAGAM ACADEMY OF HIGHER EDUCATION

*(Deemed to be University Established Under Section 3 of UGC Act 1956)*

**Coimbatore – 641 021.**

## LECTURE PLAN DEPARTMENT OF TAMIL

STAFF NAME: Dr. B. Umarani
SUBJECT NAME: TAMIL SUB.CODE:18LAU201
SEMESTER: II CLASS: I BBA

| Month | Topics to be Covered | Lecture Duration Period | Support Material/Page Nos |
|---|---|---|---|
| நவம்பர் 2018 | பாடத்திட்டத்தின் இன்றியமையாமையும், பயன்பாட்டு நோக்கும் | 01 | |
| | பக்தி இலக்கியம் - அறிமுகம் | 01 | T1:09 |
| | சைவம் (பெரியபுராணம்) அறிமுகம் | 01 | W1:01 |
| | திருமூலநாயனார் புராணம் | 02 | T1:09 |
| | சங்க இலக்கியம் – எட்டுத்தொகை - அறிமுகம் | 01 | T1:20 |
| | நற்றிணை | 02 | T1:21 |
| | வைணவம் அறிமுகம் | 01 | T1:14 |
| | பெரியாழ்வார் திருமொழி | 02 | T1:15 |
| | சிறுகதை தோற்றம், வளர்ச்சி | 01 | W1:1 |
| | குளத்தங்கரை அரசமரம் - சிறுகதை | 02 | T1:53 |
| | புறநானூறு | 02 | T1:34 |
| | திருப்புதல் | 01 | |
| | **மொத்த மணிநேரம்** | **17** | |
| டிசம்பர் 2018 | காப்பியம் – சிலப்பதிகாரம் - அறிமுகம் | 01 | W1:2 |
| | மங்கல வாழ்த்துப் பாடல் | 01 | T1:43 |
| | நடுகற் காதை, வாழ்த்துக் காதை | 01 | T1:42 |
| | வழக்குரை காதை | 01 | T1:43 |
| | பரிபாடல் – வையை- சிறப்பு | 01 | T1:28 |
| | மதுரை நகர்ச் சிறப்பு | 01 | T1:28 |
| | குறுந்தொகை | 01 | T1:22 |
| | காட்டில் ஒரு மான் - சிறுகதை | 01 | T1:69 |

| | | | |
|---|---|---|---|
| | நாற்காலி - சிறுகதை | 01 | T1:76 |
| | ஐங்குறுநூறு | 01 | T1:23 |
| | பத்துப்பாட்டு- திருமுருகாற்றுப்படை - அறிமுகம் | 01 | W1:02 |
| | முருகன் இருப்பிடங்கள் | 01 | T1:36 |
| | குறமகளின் வெறியாட்டு | 01 | T1:36 |
| | முருகன் அருள்புரிதல் | 01 | T1:37 |
| | திருப்புதல் | 01 | |
| | **மொத்த மணிநேரம்** | **15** | |
| **ஜனவரி** 2019 | அகநானூறு | 02 | T1:32 |
| | பதிற்றுப்பத்து | 02 | T1:24 |
| | கலித்தொகை | 02 | T1:30 |
| | எஸ்தர் - சிறுகதை | 02 | T1:93 |
| | நகரம் - சிறுகதை | 02 | T1:86 |
| | மரப்பாச்சி- சிறுகதை | 02 | T1:107 |
| | சூளாமணி - அறிமுகம் | 01 | T1:44 |
| | அரசியல் சருக்கம் | 02 | T1:45 |
| | துறவுச் சருக்கம் | 02 | T1:47 |
| | மொழிப்பயிற்சி | 01 | |
| | திருப்புதல் | 02 | |
| | **மொத்த மணிநேரம்** | **20** | |
| **பிப்ரவரி** 2019 | மொழிப்பயிற்சி | 05 | |
| | திருப்புதல் | 03 | |
| | **மொத்த மணிநேரம்** | **08** | |
| | **மொத்த மணிநேரங்கள்** | **60** | |

**TEXT BOOK**

**பாட நூல்: கற்பகச்சோலை – தமிழ் ஏடு.**

கற்பகம் உயர்கல்வி கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு.

**WEBSITES**

**W1**: www.tvulibrary.org.in

**W2:** http://www.maduraitamilproject.com

## UNIT-I

## SYLLABUS

**பக்தி இலக்கியம் -** சைவ, வைணவ இலக்கியங்கள் - தோற்றம் ,வளர்ச்சி, வரலாறு.

1. **சைவம் -** பெரியபுராணம் - திருமூலநாயனார் புராணம்
2. **வைணவம் -** பெரியாழ்வார் திருமொழி: 10 பாடல்கள்.

KAHE

## பெரியபுராணம்: திருமூலநாயனார் புராணம்

### 1.சிவயோகியின் பொதிகை மலைப்பயணம்:

திருக்கையிலாயத்தில் சிவபெருமானது திருக்கோயிலுக்கு முதற்பெரும் காவல்பூண்ட திருநந்தி தேவரது திருவருள்பெற்ற மாணாக்கருள் அணிமா முதலிய எண்வகைச் சித்திகளும் (அட்டமா சித்திகள்) கைவரப்பெற்ற சிவயோகியார் ஒருவர் இருந்தார். அவர் அகத்திய முனிவரிடத்திற் கொண்ட நட்பினால் அவரோடு சிலகாலம் தங்குவதற்கு எண்ணி அம்முனிவர் எழுந்தருளிய பொதியமலையை அடையும் பொருட்டுத் திருக்கயிலையினின்றும் புறப்பட்டுத் தென்திசை நோக்கிச் சென்றார். செல்லும் வழியில் திருக்கேதாரம், பசுபதிநாத், கோவில்,அவிமுத்தம் (காசி), விந்தமலை, திருப்பருப்பந்தம்,திருக்காளத்தி, திருவாலங்காடு ஆகிய திருத்தலங்களைப் பணிந்தேத்திக் காஞ்சி நகரையடைந்து திருவேகம்பப்பெருமானை இறைஞ்சிப்போற்றி, அந்நகரிலுள்ள சிவயோகியார்களாகிய தவமுனிவர்களுடன் அன்புடன் அளவளாவி மகிழ்ந்தார். பின்னர்த் திருவதிகையையடைந்து முப்புரமெரித்த பெருமானை வழிபட்டுப் போற்றி, இறைவன் அற்புதத் திருக்கூத்தாடியருளும் திருவம்பலத்தினைத் தன்னகத்தே கொண்டு திகழும் பொற்பதியாகிய பெரும்பற்றப்புலியூரை வந்தடைந்தார். எல்லாவுலங்களும் உய்யும்படி ஐந்தொழில் திருக்கூத்து இயற்றியருளும் கூத்தப்பெருமானை வணங்கித் துதித்துச் சிந்தை களிகூர்ந்தார். பசுகரணங்கள் சிவகரணங்களாகிய தூய நிலையில் தம்முள்ளத்தே பொங்கியெழுந்த சிவபோதமாகிய மெய்யுணர்வினால் சிவானந்தத் திருக்கூத்தினைக் கண்டுகளித்து ஆராத பெரு வேட்கையினால் அத்திருத்தலத்தில் தங்கியிருந்தார்.

### 2. திருவாவடுதுறையை நோக்கிப் பயணம்:

தில்லைத் திருநடங் கண்டு மகிழ்ந்த சிவயோகியார், அங்கிருந்து புறப்பட்டுக் காவிரியில் நீராடி அதன் தென்கரையினை அடைந்து, உமையம்மையார் பசுவின் கன்றாக இருந்து இறைவனை வழிபாடு செய்து அம்முதல்வனுடன் எழுந்தருளியிருந்து அருள் புரியும் திருவாவாடு துறையை அடைந்தார். திருக்கோயிலை வலம் வந்து பசுபதியாகிய இறைவனை வழிபட்டு, அத்திருப்பதியினை விட்டு நீங்காதொரு கருத்தும் தம் உள்ளத்தே தோன்ற அங்கே தங்கியிருந்தார்.

**3. பசுக்கூட்டத்தின் கண்ணீர்: ஆயன் (மாடு மேய்ப்பவனின் இறப்பு)**

ஆவடுதுறையிறைவரை வழிபடுதலில் ஆராத பெருங்காதலையுடைய சிவயோகியார், அத்தலத்தை அகன்று செல்லும் பொழுது காவிரிக் கரையிலுள்ள சோலையிடத்தே பசுக் கூட்டங்கள் கதறி அழுவதைக் கண்டார். அந்தணர்கள் வாழும் சாத்தனூரிலே தொன்றுதொட்டு ஆனிரை மேய்க்கும் குடியிற் பிறந்த ஆயனாகிய மூலன் என்பவன் விடம் தீண்டி இறந்தமையால் அதனைத் தாங்காத பசுக்கள் உயிர் நீங்கிய அவனது உடம்பினைச் சுற்றிச் சுழன்று வந்து மோப்பனவும் கதறுவனமாகி வருந்தின.

**4. பசுக்களுக்கு உதவுதல்:**

மேய்ப்பான் இறந்தமையால் பசுக்களைடைந்த துயரத்தினைக் கண்ட அருளாளராகிய சிவயோகியாரது உள்ளத்தில் 'இப்பசுக்கள் உற்ற துயரத்தினை நீக்குதல் வேண்டும்' என்றதோர் எண்ணம் திருவருளால் தோன்றியது. 'இந்த இடையன் உயிர்பெற்றெழுந்தாலன்றி இப்பசுக்கள் துயரம் நீங்கா' எனத் திருவுளத்தெண்ணிய தவமுனிவர், தம்முடைய திருமேனியைப் பாதுகாவலானதோரிடத்து மறைத்து வைத்து விட்டுக் கூடுவிட்டுக் கூடு பாய்தல் (பரகாயப்பிரவேசம்) என்னும் பவன வழியினாலே தமது உயிரை அவ்விடையனது உடம்பிற் புகுமாறு செலுத்தித் திருமூலராய் எழுந்தார். எழுதலும் பசுக்களெல்லாம் தம் துயரம் நீங்கி அன்பினால் அவரது உடம்பினை நாத்தழும்ப நக்கி மோந்து கனைத்து மிகுந்த களைப்பினாலே வாலெடுத்து துள்ளிக்கொண்டு தாம் விரும்பிய இடத்திற் சென்று புல் மேய்ந்தன. திருமூலநாயனார் அதுகண்டு திருவுளம் மகிழ்ந்து ஆனிரைகள் மேயுமிடங்களிற் சென்று நன்றாக மேய்த்தருளினார். வயிறார மேய்ந்த அப்பசுக்கள், கூட்டமாகச் சென்று காவிரியாற்றின் முன்துறையிலேயிறங்கி நன்னீர் பருகிக் கரையேற, அப்பசுக்களைக் குளிர்ந்த நிழலிலே தங்கி இளைப்பாறும்படி செய்து பாதுகாத்தருளினார்.

**4. மாலையில் சிவயோகியாரின் நிலை:**

சூரியன் மேற்றிசையை அணுக மாலைப்பொழுது வந்தது. பசுக்கள் தத்தம் கன்றுகளை நினைத்துத் தாமே மெல்ல நடந்து சாத்தனூரை அடைவனவாயின. அப்பசுக்கள் செல்லும் வழியிலே தொடர்ந்து பின்சென்ற சிவயோகியார். பசுக்கள் யாவும் தத்தமக்குரிய வீடுகளிற் சென்று சேர்ந்த பின்னர் அவ்வூர் வழியில் தனியே நிற்பாராயினர்.

**5. மூலனது மனைவியின் பெருந்துன்பம்:**

அந்நிலையில், மூலனுடைய மானமிகு மனையறக் கிழத்தியாகிய நங்கை, 'என் கணவர் பொழுது சென்ற பின்னரும் வரத் தாழ்ந்தனரே அவர்க்கு என்ன நேர்ந்ததோ' என்று அஞ்சியவளாய்த் தன் கணவனைத் தேடிக் கொண்டு சென்று, சிவயோகியார் நின்ற இடத்தையடைந்தாள். தன் கணவது உடம்பிற் தோன்றிய உள்ளுணர்வு மாற்றத்தைக் கண்டு 'இவர்க்கு ஏதோ தீங்கு நேர்ந்திருத்தல் வேண்டும்' என்று எண்ணி அவரைத் தளர்வின்றி இல்லத்திற்கு அழைத்துச் செல்லும் கருத்துடன் அவருடம்பைத் தொடுவதற்கு நெருங்கினாள். திருமூலராகிய சிவயோகியார், அவள் தம்மைத் தீண்டவொண்ணாதவாறு தடுத்து நிறுத்தினார். தன் கணவனையன்றி மக்கள் முதலிய நெருங்கிய சுற்றத்தார் ஒருவருமின்றித் தனியாளாகிய அவள், அவரது தொடர்பற்ற நிலைகண்டு அஞ்சி மனங் கலங்கினாள். 'உமது அன்புடைய மனைவியாகிய எளியோனை வெறுத்து நீங்குதலாகிய இதனால் எனக்கு எத்தகைய பெருந் துன்பத்தைச் செய்து விட்டீர்' என்று கூறிப்புலம்பி வாட்டமுற்றாள். அந்நிலையில் நிறைதவச்செல்வராகிய திருமூலர், அவளை நோக்கி 'நீ எண்ணியவாறு இங்கு உனக்கு என்னுடன் எத்தகைய உறவேதும் இல்லை' எனக் கூறிவிட்டு, அவ்வூரில் அருந்தவர் பலரும் தங்கியிருந்தற்கென அமைந்துள்ள பொதுமடத்திற் புகுந்து சிவயோகத்தில் அமர்ந்திருந்தார்.

தன் கணவனது தன்மை வேறுபட்டதனைக் கண்ட மூலன் மனைவி, அது பற்றி யாரிடத்தும் சொல்லாமலும், தவ நிலையினராகிய அவர் பால் அணையாமலும் அன்றிரவு முழுவதும் உறங்காதவராய்த் துயருற்றாள். பொழுது விடிந்ததும் தன் கணவர் நிலையை அவ்வூரிலுள்ள நல்லோரிடம் எடுத்துரைத்தாள். அதுகேட்ட சான்றோர், திருமூலரை அணுகி அவரது நிலைமையை நாடி, 'இது பித்தினால் விளைந்த மயக்கமன்று' பேய் பிடித்தல் முதலாகப் பிறிதொரு சார்பால் உளதாகியதும் அன்று; சித்த விகாரக் கலக்கங்களையெல்லாம் அறவே களைந்து தெளிவு பெற்ற நிலையில் சிவயோகத்தில் அழுந்திய கருத்து உடையவராய் இவர் அமைந்துள்ளார். இந்நிலைமை யாவராலும் அளந்தற்கரியதாம்' எனத் தெளிந்தனர். "இவர் இருவகைப் பற்றுக்களையும் அறுத்து ஞானோபதேசத்தால் பரமர் திருவடியைப் பெற்ற சீவன் முத்தர்களைப் போன்று எல்லாவற்றையும் ஒருங்கே அறியவல்ல முற்றுணர்வுடையவராக விளங்குகின்றார். ஆகவே முன்னை நிலைப்படி உங்கள் சுற்றத்

தொடர்பாகிய வாழ்வில் ஈடுபடுவார் அல்லர்' என மூலன் மனைவிக்கு எடுத்துரைத்தார்கள். அதுகேட்ட அவள், 'அளவிலாத் துயரத்தால் மயக்கமுற்றாள். அருகேயுள்ளவர்கள் அவளைத் தேற்றி அவளது மனைக்கு அழைத்துச் சென்றார்கள்.

**6. சிவயோகத்தில் திருமூலர்:**

சாத்தனூரில் பொதுமடத்தில் சிவயோக நிலையில் அமர்ந்திருந்த திருமூலர், யோகம் கலைந்து எழுந்து முதல் நாளிலே பசுக்கள் வந்த வழியே சென்று தம் உடம்பினைச் சேமமாக வைத்த இடத்திற்குச் சென்று பார்த்தார். அங்கு அதனைக் காணாதவராகி, அதுமறைந்த செயலை மெய்யுணர்வுடைய சிந்தையில் ஆராய்ந்து தெளிந்தார். பிறைமுடிக்கண்ணிப் பெருமானாகிய இறைவன், உயிர்களிடம் வைத்த பெருங்கருணையாலே அருளிய சிவாகமங்களின் அரும் பொருள்களை இந்நிலவுலகில் திருமூலரது வாக்கினால் தமிழிலே வகுத்துரைக்கக் கருதிய திருவருட்றிறத்தால் சிவயோகியாரது முந்தைய உடம்பினை மறைப்பித்தருளினார். இம்மெய்மையினைத் திருமூலர் தமது முற்றுணர்வினால் தெளியவுணர்ந்தார். அந்நிலையில் தம்மைப் பின் தொடர்ந்து வந்த ஆயர்குலத்தவர்கட்கும் தமக்கும் எத்தகைய தொடர்பும் இல்லையென்பதை அவர்கட்கு விளங்க அறிவுறுத்தருளினார்; அவர்கள் எல்லாரும் தம்மைவிட்டு நீங்கியபின் சிவபெருமான் திருவடிகளைச் சிந்தித்து அவ்விட்டத்தை விட்டகன்று திருவாவடுதுறைத் திருக்கோயிலை அடைந்தார். அத்திருக்கோயிலில் வீற்றிருந்தருளும் அம்மையப்பராகிய இறைவரை வணங்கி அத்திருக்கோயிலின் மேற்கில் மதிற்புறத்தேயுள்ள அரச மரத்தின்கீழ்த் தேவாசனத்தில் சிவயோகத்து அமர்ந்து, உள்ளக் கமலத்தில் வீற்றிருந்தருளும் அரும்பொருளாகிய சிவபுரம் பொருளோடு இரண்டறக்கூடி ஒன்றியிருந்தார்.

இங்ஙனம் சிவயோக நிலையில் அமர்ந்திருந்த திருமூலநாயனார் ஊனோடு தொடர்ந்த இப்பிறவியாகிய தீய நஞ்சினாலுளவாம் துயரம் நீங்கி இவ்வுலகத்தார் உய்யும் பொருட்டு சரியை, கிரியை, யோகம்ஞானம் என்னும் நால்வகை நன்னெறிகளும் நால்வகை மலர்களாக விரிந்து விளங்கும் நல்ல திருமந்திரமாலையாகிய நூலை இறைவன் திருவடிக்கு அணிந்து போற்றும் நிலையில், 'ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்' என்னும் திருப்பாடலைத் தொடங்கி ஓராண்டுக்கு ஒரு திருப்பாடலாக இவ்வாறு மூவாயிரம் ஆண்டுகள் இவ்வுலகில் சிவயோக நிலையில் அமர்ந்திருந்து மூவாயிரம் திருப்பாடல்கள் அருளிச்

செய்தார். எல்லாம் வல்ல பரம்பொருள் அன்பே உருவானவர் என்பதை தம் பாடல் மூலம் விளக்குகிறார். அப்பாடல் பின்வருமாறு: **அன்பும்** சிவமும் இரண்டென்பர் அறிவிலார் **அன்பே** சிவமாவது யாரும் அறிகிலார் **அன்பே** சிவமாவது யாரும் அறிந்தபின் **அன்பே** சிவமாய் அமர்ந்திருந்தாரே.

### *பெரியாழ்வார் திருமொழி - முதற்பத்து*

### *ஐந்தாம் திருமொழி – உய்யவுலகு*

***(தலையை நிமிர்த்தி, முகத்தை அசைத்து ஆடும் செங்கீரைப்பருவம்)***

**1. எண்ணிலடங்கா யுகங்களாக, உலகிலுள்ள உயிரினங்கள் மற்றும் உயிரற்ற பொருள்கள் அனைத்தையும் உருவாக்கியதோடு, ஊழிப் பேரழிவின் போது அவற்றையெல்லாம் தன் அழகிய வயிற்றினுள் வைத்து பாதுகாத்து, ஆலிலை மேல் மெல்ல சயனித்து அறிதுயில் கொண்ட முழுமுதற் கடவுளே! வெண்தாமரை மலரின் இதழ்களைப் போல் நீண்ட கண்களையுடைய கருமேக தேகங்கொண்டவனே! நின் சின்னஞ்சிறு காதுகளில், விளக்கமாய் அமைந்து, மிகுவாய் பொலிகின்ற அந்த அழகிய குண்டலங்கள் அசைந்து ஆடும் வண்ணம், உன் இதயத் தாமரையில், என்றும் நீக்கமற நிறைந்துள்ள திருமகளை எண்ணிக் கொண்டே, எங்கள் குலத் தலைவனே, எனக்கு ஒரு முறை செங்கீரை ஆடிக் காட்டுவாயாக. ஆயர் குலத்தில் தோன்றிய, போர் செய்ய வல்ல காளையைப் போன்றவனே ஒரே ஒரு முறை செங்கீரை ஆடுவாயாக!**

2. **உன் பக்தனும், இரணியனின் மைந்தனுமான பிரகலாதனின் வார்த்தைகளை மெய்ப்பிக்கவும், அவனை இரணியனிடமிருந்து மீட்கவும், வலிமையான ஆண் சிங்கத்தின் உருவமெடுத்துவந்து, தன் கூரிய நகங்களாலேயே, இரத்தம் பொங்கி எழுமளவுக்கு அசுரனான இரணியனின் உடலைக் கிழித்தாய்! விண்ணுலகத்தில் வாழ்கின்ற தேவர்களின் தலைவனான இந்திரன் மிகுந்த சினங்கொண்டு பொழிந்த கல்மழையிலிருந்து, ஆநிரைகளையும், ஆயர்களையும் காப்பதற்காக கோவர்த்தன மலையையே குடையாகப் பிடித்தவனே! என் தலைவனே! உன் அன்னைக்கு ஒரு முறை செங்கீரை ஆடிக்காட்டுவாயாக. ஆயர்கள் குலத்திலுதித்த வலிமைமிக்க காளையைப் போன்றவனே செங்கீரை ஆடுக, ஆடுகவே**

3. **நம்முடை நாயகனே! நான்மறையின் பொருளே! நாவியுள் நற்கமல நான்முகனுக்கு ஒருகால் தம்மனை ஆனவனே -** எம் ஆயர் குலத்தரசே! முழுமுதற் கடவுளே! வேதங்கள் நான்கின் மெய்ப்பொருளாய் இருப்பவனே! நின் கொப்பூழ்கொடி பந்தம் கொண்ட, படைப்புத் தொழிலைச் செய்யும் செந்தாமரைமலர் மேல் வீற்றிருக்கின்ற நான்முகனுக்கும் அன்னையாய் இருப்பவனே! அதுமட்டுமல்லாது, உலக நன்மைக்காக பிரம்மனிடமிருந்து மது, கைடபன் என்ற இரு அசுரர்களால் கவர்ந்து செல்லப்பட்ட நான்கு

வேதங்களையும், அவர்களிடமிருந்து மீட்டு, மீண்டும் பிரம்மனிடம் கொடுத்து நான்முகனுக்கு அன்னையாய் ஆதரித்தவனே! (நாயகன் - தலைவன், இறைவன்; நான்மறை - நான்கு வேதங்கள்~ ரிக்வேதம், யசூர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம்; நாவி - கொப்பூழ்; நான்முகன் - பிரம்மன்; மனை - நற்றாய்)

4. விண்ணுலக தேவர்கள் மகிழும் வண்ணம், தீய எண்ணம் கொண்டு சக்கரவடிவில் வந்த சகடாசுரனை தூள் தூளாக நொறுங்கிப் போகும் வண்ணம் உன் பிஞ்சுக் கால்களால் உதைத்தழித்தாய்; வஞ்சக எண்ணம் கொண்டு உனக்குத் தாயமுது கொடுப்பது போல் நஞ்சமுது கொடுக்கத் துணிந்த பூதனை என்னும் அரக்கியின் உயிரைக் குடித்தவனே! காட்டிலிருந்த, வலிமையான விளா மரத்தின் காய்கள் உதிரக் கல்லெறிவது போல்,பசுங் கன்றின் உருவில் உருமாறி வந்த வத்சாசுரன் என்னும் அசுரனை மரத்தில் எறிந்து கொன்ற மைவண்ண தேகங்கொண்ட என் இளங்கன்றே! தேனுகாசுரன், நரகாசுரனின் அண்ணனான, ஐந்து தலைகளைக் கொண்ட முராசுரன் மற்றும் வலிமையும் துணிவும் மிகுந்த சினமெனும் செந்தீயைத் தன்னிடத்தே கொண்ட நரகாசுரன் மற்றும் பல அசுரர்களை எல்லாம் அவர்களுக்கு மரணபயத்தைத் தந்து நடுக்கங்கொள்ளச் செய்து, அழிக்கவல்ல வலிமை மிக்க ஆண் யானை போன்றவனே! ஆயர்கள் போரேறே எனக்காக ஒருமுறை செங்கீரை ஆடுக ஆடுகவே.

5. என் குட்டிக் கண்ணனே! அடர்த்தியான, நீண்ட கருங்கூந்தலை உடைய, சிறந்த குணங்களைக் கொண்ட ஆயர்குல பெண்கள் சிரத்தையுடன் தயாரித்து, சேமித்து வைத்திருந்த தயிர், மோர் மற்றும் வெண்ணெய் ஆகியவற்றையெல்லாம் தன் பெரிய கைகளால் அள்ளி, அவற்றை எவரும் கண்டறிவதன் முன்னம் சுவைத்து,ஒரே விழுங்கில் அவசர அவசரமாக உட்கொண்டாய்.உன் கள்ளத்தனத்தைக் கண்டறிந்ததும், கோபங்கொண்ட யசோதையன்னை, உன்னை நீண்ட பழந்தாம்புக் கயிற்றால் உரலில் கட்டிப்போட்டாள்.பெரிய கனமான உரலில் உன்னைப் பிணைத்திருந்தும், வலிமைமிகுந்த உன் கால்களினால் அந்த உரலையும் சேர்த்து இழுத்துக் கொண்டே, மாளிகையை விட்டு, வெளியே வந்து, ஆங்கே மாளிகையின் பின்புறத்தில், ஒன்றாக அருகருகே நின்றிருந்த இரண்டு மருத மரங்களுக்கிடையே உரலுடன் ஊர்ந்து செல்ல முயலுகையில், அவற்றை உன் வலிமையான தோள்களினால் இடித்துக் கீழே தள்ளிவிட்டு அவற்றிற்கிடையில் புகுந்து சென்ற, மிகுந்த வலிமையுடையவனே!என்னைப் பெற்ற என் அப்பனே! முத்தினும் சிறந்த உன் வெண்பற்கள் வெளியில் தெரியும் வண்ணம் நீ சிரிக்கும் முன்னமேயே, உன் கருங்கூந்தல் ஊர்ந்து உன் முகத்தின் முன் வந்தாடும் வண்ணம் எனக்காக ஒரு தடவை செங்கீரை ஆடுவாயாக. போர்செய்ய வல்ல காளையைப் போன்றவனே, எனக்காக ஒரு முறை செங்கீரை ஆடுக ஆடுகவே.

6. கருநீல காயாமலரின் வண்ண தேகங்கொண்டவனே! குளிர்மழைப் பொழிகின்ற கருமேகத்தைப் போன்ற உருவங்கொண்டவனே! பிருந்தாவனத்திற்கருகில் உள்ள காட்டிலிருந்த பெரியமடுவில் வசித்து வந்த நூறு தலைகளைக் கொண்ட காளியன் என்ற பெரிய கருநாகத்தை அடக்கி, அதன் தலைகளின் மேல் நல் நடனம் புரிந்த அழகனே! என் மைந்தனே! அரச குலத்தவரை மட்டும் ஏற்றிச் செல்லக்கூடிய

பெருமைமிகுந்த பட்டத்து யானையின் கொம்புகளைப் பறித்தவனே! கம்சனிடமிருந்து பெறக்கூடிய நன்மைக்காக, உன்னை எதிர்க்க வந்த மல்யுத்தவீரர்களை எல்லாம்,மிகவும் எளிமையாக, எவ்வித பதற்றமோ பரபரப்போ இல்லாமல் அழித்து, உன் இரு திருவடிகளாலும் மதுராபுரியில் வெற்றித் திருநடனம் புரிந்தவனே! உன் கருமேக தேகம், காண்பவரைப் பொறுத்தது. நல்லவர்களுக்குக் குளிர்மழையாகவும், பொல்லாதவர்களுக்குக் கடும் புயல் மழையாகவும் பொழிய வல்லவனே, எனக்கு ஒரு பொழுது செங்கீரை ஆடிக்காட்டுவாயாக! காளியன் மீதும், மதுராபுரியிலும் வெற்றித்திருநடம்புரிந்த வலிமை மிகுந்த காளையைப் போன்றவனே எனக்காக ஒரு முறை செங்கீரை ஆடுக ஆடுகவே!

7. வலிமை மிகுந்த ஆயர்கள், உன் சிறு வயதில் முடிவு செய்திருந்த சொல்லை மெய்யாக்கும் வண்ணம், தோகை மயிலனைய சாயலுடைய நப்பின்னையை மணம் முடிப்பதற்காக, அவள் தகப்பனாரின் ஏழு காளைகளையும் அடக்கி நப்பின்னையைக் கரம்பிடித்த தலைவனே! காணாமல் சென்ற பிள்ளைகளை எல்லாம் தனியாளாகச் சென்று மீட்டு வந்து பாதுகாப்பாக அவர்கள் அன்னையிடம் ஒப்புவித்த என் அப்பனே! எனக்காக ஒருமுறை செங்கீரை ஆடுவாயாக! வலிமை மிகுந்த காளையைப் போன்றவனே ஒரே ஒரு முறை செங்கீரை ஆடுகவே!

8. பாலகன் கண்ணனைத் தங்கள் மடிமேல் இருத்தி, சிறுமியரும், பெண்களும் தங்கள் இல்லத்திற்கு அவனை அழைத்துச் சென்று, அவனுக்கு விருப்பமானவற்றை அளித்து, அவனுடன் விளையாடி மகிழும் காட்சியைக் காண்பவர்கள் தங்கள் கண்கள் குளிர கண்டு மகிழ்கின்றனர்; கற்றவர்களோ சொல்வதற்கு வார்த்தையின்றி அவன் மழலைச் சொல்லின் மயக்கத்தில் தடுமாறி நிற்கின்றனர். அத்தகைய ஒரு பேரானந்தத்தை உன்னைப் பெற்ற எனக்கும் அருள்வாயாக! பேரருளாளா! திருக்குறுங்குடி வாமனா! திருவெள்ளறையின் செந்தாமரைக்கண்ணா! திருமாலிருஞ்சோலை அழகா! திருக்கண்ணபுரத்தமுதா! என் துயரம் களையமாட்டாயா? என்னிடத்தே ஒரு முறை செங்கீரை ஆடிக்காட்டுவாயாக! ஏழுலகினுக்கும் இறைவா! ஒரே ஒரு முறை செங்கீரை ஆடுக ஆடுகவே!

9. வேதத்தின் வித்தானவனே! விளங்கும் பரம்பொருளே! உன் திருமேனி மேல், நீ உண்ட பாலும் தயிரும் நெய்யும் ஆகியவற்றின் சுகந்தமணம் வீசிவர, அரைத்த சந்தனமும், மணக்கும் செண்பக மலரும், அழகிய செந்தாமரையுடன் நல்ல பச்சைக்கற்பூரமும் உன் மேனியில் படர்ந்து மணம் பரப்ப, வடிவான செம்பவள வாயினுள் வெள்ளி முளைத்ததைப் போன்று விளங்கும் பால்வெண்பற்கள் வெளியில் தெரியும் வண்ணம், உன் இதழில் புன்னகை தவழ, உன் வாயமுதத்தில் நனைந்து நனைந்து வீடுபெறு கொள்ளும் திருமார்பில் தவழ்ந்தாடும் ஐம்படையின் நடுவே பூத்திருக்கும் உன் பூமுகம் காற்றிலாட, அதைக் கண்டு என் மனமாட நீலமணிவண்ணனே செங்கீரை ஆடுவாயாக! ஏழுலகும் ஆள்பவனே, அன்னைக்கொரு முறை செங்கீரை ஆடிக்காட்டி அருள்வாயாக!

**10.** ஆயர்குல மன்னவா! உன் சிவந்த செங்கமலப்பாதத்தில் அணிந்துள்ள கிண்கிணிகள் ஒலி இசைக்க, அச்சிறு பாதத்தில் அரும்பிய சிறிய விரல்மொட்டுகளில் அணிந்துள்ள மோதிரங்கள் மின்ன, உன்

சிற்றிடையில் ஒட்டியுள்ள பொன்னாலான அரைஞாண்கயிறும் அதனுடன் கோர்க்கப்பட்டுள்ள நல்ல மாதுளம்பூவினோடு, பொன்மணிகள் கலகலக்க, கைகளில் - விரல் மோதிரங்களுடன், முன்கையில் உள்ள பவள வளையல் பளபளக்க, மார்பில் அணிந்துள்ள ஐம்படையும் ஆட, காதில் மகரக் குண்டலத்துடன், வாளியும் சேர்ந்தாட, உச்சியில் நெற்றிச்சுட்டித் தானாட செங்கீரை ஆடுகவே! ஏழுலகும் ஆள்பவனே ஆடுக ஆடுகவே!

**பாட நூல்: கற்பகச்சோலை – தமிழ் ஏடு.**

கற்பகம் உயர்கல்வி கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு.

## இன்றியமையாத வினாக்கள்

## இரு மதிப்பெண் வினாக்கள்

‘செங்கீரைப் பருவம்’ என்றால் என்ன?.

‘ஆ உற்றதுயர் இவை நீங்க ஒழிப்பன்’- இடம் சுட்டிப் பொருள் தருக?

பெரியபுராணம் - சிறு குறிப்பு வரைக.

## பெரு வினாக்கள்

1. ‘அன்பே சிவம்’ என்பதனைப் பாடப்பகுதி கொண்டு விளக்குக.
2. குழந்தைக் கண்ணனைப் பெரியாழ்வார் போற்றுகின்ற நிலைகளைக் குறிப்பிடுக.
3. திருமூலநாயனாரின் பக்திநெறியை விவரி?
4. கண்ணனின் செங்கீரைப்பருவ நிகழ்வுகளைப் பெரியாழ்வார் பாடல்கள் வழிநின்றுவிளக்குக?
5. திருமூலரான சிவயோகியாரின் வரலாற்றை விளக்குக?.
6. கண்ணனின் சிறப்பினை, பெரியாழ்வார் திருமொழியின் வழி விளக்குக.
7. திருமூலநாயனார் புராணக் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

## பகுதி – அ ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. பெரியபுராணத்தின் வேறு பெயர் யாது?.

(அ). திருமந்திரம் (ஆ). திருத்தொண்டர் புராணம் (இ). திருமொழி (ஈ). பிரபந்தம்

2. ‘அந்தி இளம்பிறைக் கண்ணி அண்ணலார்’ யார்?.

(அ). சிவபெருமான் (ஆ). கண்ணன் (இ). திருமூலர் (ஈ). சேக்கிழார்

3. ‘ஒன்று அவன்தானே’ என்று தொடங்கிப் பாடியவர் யார்?.

(அ). சேக்கிழார் (ஆ). குறுமுனிவர் (இ). சுந்தரர் (ஈ). திருமூலர்

4. ‘உய்ய உலகு படைத்துண்ட மணி வயிறன்’ - யார்?.

(அ). சிவபெருமான் (ஆ). கண்ணன் (இ). திருமூலர் (ஈ). சேக்கிழார்

5. பெரியாழ்வார் வாழ்ந்த ஊர் எது?.

(அ). திருவில்லிப்புத்தூர் (ஆ). திருஅதிகை (இ). தில்லை (ஈ). திருக்காளத்தி

6. மூலன் பிறந்த ஊர் எது?

அ) புலியூர் ஆ) திருக்கயிலை இ) சாத்தனூர் ஈ) பொதியமலை

7. பொாpயபுராணத்தின் ஆசிரியர் யார்?

அ)பெரியாழ்வார் ஆ)சேக்கிழார் இ) வ.வே.சு.ஐயர் ஈ) கபிலர்

8. ‘ஆ’ என்பதன் பொருள் என்ன?

அ) ஆடு ஆ) பசு இ) யானை ஈ) குதிரை

9. பெரியாழ்வாரின் இயற்பெயர் என்ன?

அ) திருமூலர் ஆ) பிரம்மன் இ) விசுணுசித்தர் ஈ) மூலன்

10. பெரியபுராணத்தை இயற்றியவர் யார்?.

(அ) சுந்தரர் (ஆ) சேக்கிழார் இ) பெரியாழ்வார் (ஈ) நக்கீரர்

11. பெரியபுராணத்தில் உள்ள காண்டங்கள் மொத்தம் எத்தனை?.

(அ) 2 (ஆ) 13 (இ) 5 (ஈ) 8

12. குறுமுனி என்றழைக்கப்படுபவர் யார்?.

(அ) நந்தி (ஆ) அகத்தியர் (இ) திருமூலர் (ஈ) சிவன்

13. திருமூலர் யோகத்தில் இருந்த திருத்தலம் எது?.

(அ) தில்லை (ஆ) திருஆவடுதுறை (இ) திருக்காளத்தி (ஈ) சாத்தனூர்

14. ‘கரி’ என்பதன் பொருள் கூறுக?.

(அ) யானை (ஆ) குரங்கு (இ) புலி (ஈ) குதிரை

15. சேக்கிழார் அருளிய நூல் எது?

அ)சீறாபுராணம் ஆ)பெரியாழ்வார் திருமொழி  இ) கல்லாடம் ஈ)பொரpயபுராணம்

16. ‘ஆ’ என்பதன் பொருள் என்ன?

அ) ஆடு ஆ) பசு இ) யானை ஈ) குதிரை

17. மூலன் பிறந்த ஊர் எது?

அ) புலியூர் ஆ) திருக்கயிலை இ) சாத்தனூர் ஈ) பொதியமலை

18. சைவத்திருமுறைகளின் மொத்த எண்ணிக்கை எத்தனை?

அ) 10 ஆ) 11 இ)12 ஈ) 13

## பகுதி –அ ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. பிரசம்' என்னும் சொல்லின் பொருள் யாது?.

(அ). பால் (ஆ). தேன் (இ). பந்து (ஈ). தண்ணீர்

2. 'சாரல் நாடன்' என்பவன்இ எந்நிலத்தைச் சேர்ந்தவன்?.

(அ). குறிஞ்சி (ஆ). முல்லை (இ). நெய்தல் (ஈ). மருதம்

3. பரிபாடலில்இ வையை ஆறு பற்றிக் கிடைத்துள்ள பாடல்களின் எண்ணிக்கை யாது?.

(அ). 22 (ஆ). 8 (இ). 6 (ஈ). 12

4. 'பிணிமுகம்' என்பதன் பொருள் யாது?.

(அ). யானை (ஆ). மயில் (இ). சேவல் (ஈ). மாமரம்

5. திருமுருகாற்றுப்படையின் ஆசிரியர் யார்?.

(அ). நக்கீரர் (ஆ). கௌதமனார் (இ). நல்லுருத்திரனார் (ஈ). கடுந்தோள் கரவீரன்

6. 'புகார் நகரம்' எந்த நாட்டைச் சேர்ந்தது?.

(அ). சேரநாடு (ஆ). சோழநாடு (இ). தொண்டைநாடு (ஈ). பாண்டியநாடு

7. எட்டுத் தொகை நூல்களில் முதலாவதாகக் குறிக்கப்படுவது எது?

அ) குறுந்தொகை ஆ) நற்றிணை இ)பரிபாடல் ஈ) கலித்தொகை

8. குறுந்தொகையின் அடிவரையறை யாது?

அ) 7-10 ஆ) 6-9 இ) 8-11 ஈ) 4-8

9.'அன்னாய்வாழி பத்து' எத்திணையில் வரும் பாடல்?

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்

10. பத்து சேர அரசர்களைப் பற்றிப் பாடும் சங்க இலக்கியம் எது?

அ)பதிற்றுப்பத்து ஆ) புறநானூறு இ)பரிபாடல் ஈ) கலித்தொகை

11. நெடுந்தொகை என்று அழைக்கப்படும் சங்க இலக்கியம் எது?

அ) அகநானூறு ஆ) புறநானூறு இ)பரிபாடல் ஈ) கலித்தொகை

12. 'சுடர்த்தொடீஇ! கேளாய்!' என்ற பாடல்வரி இடம்பெற்ற நூல் எது?

அ) அகநானூறு ஆ) புறநானூறு இ)பரிபாடல் ஈ) கலித்தொகை

13. திருமுருகாற்றுப்படை குறிப்பிடும் முருகப் பெருமானின் இருப்பிடங்கள் எத்தனை?

அ) 3 ஆ) 5 இ) 7 ஈ) 6

14. திருமுருகாற்றுப்படையின் தலைவன் யார்?

அ) கபிலர் ஆ) அம்மூவனார் இ) நக்கீரர் ஈ)முருகபெருமான்

15. ‘கரி’ என்பதன் பொருள் கூறுக?.

(அ) யானை (ஆ) குரங்கு (இ) புலி (ஈ) குதிரை

16. ‘திணை’ என்ற பெயரில் அமைந்த நூல் எது?.

(அ) ஐங்குறுநூறு (ஆ) அகநானூறு (இ) புறநானூறு (ஈ) நற்றிணை

17. ‘வன்பறழ்’ -எனக் குறிக்கப்படுகின்ற விலங்கு எது?.

(அ) குரங்கு (ஆ) யானை (இ) மான் (ஈ) ஆடு

18. ‘அடுக்கம்’ என்பது எதனைக் குறிக்கும்?.

(அ) மலை (ஆ) சுனை (இ) ஆறு (ஈ) கடல்

10. ‘மஞ்ஞை’ என்பதன் பொருள் யாது?.

(அ) மான் (ஆ) மயில் (இ) குயில் (ஈ) சேவல்

19. அகநானூற்றுக்கு வழங்கும் வேறுபெயர் என்ன?.

(அ) குறுந்தொகை (ஆ) நெடுந்தொகை (இ) புறப்பாட்டு (ஈ) சிறிய நூல்

20. திருமுருகாற்றுப் படையில் முருகனைப் பாடியவர் யார்?.

(அ) திருமூலர் (ஆ) நக்கீரர் (இ) கபிலர் (ஈ) சேக்கிழார்

21. ‘சேவற் கொடியோன்’ யார்?.

(அ) திருமால் (ஆ) பிரம்மா (இ) முருகன் (ஈ) விநாயகர்

22. மதுரையின் வேறுபெயர் யாது?.

(அ) புகார் (ஆ) ஆவடுதுறை (இ) தில்லை (ஈ) நான்மாடக்கூடல்

23. நற்றிணையின் அடிவரையறை யாது?

அ) 4-8 அடிகள் ஆ) 9-12 அடிகள் இ) 6-14 அடிகள் ஈ) 13-31 அடிகள்

24. பிரசம் என்பதன் பொருள் யாது?

அ) உணவு ஆ) பால் இ) தேன் ஈ) நீh;

25. சேர அரசா;களைப் பற்றிய வரலாற்றினை அறிய உதவும் நூல் எது?

அ) பதிற்றுப்பத்து ஆ) நற்றிணை இ) குறுந்தொகை ஈ) கலித்தொகை

26. தாமரை இதழிற்கு ஒப்புமையாகக் கூறப்படுவது எது?

அ) ஊர் ஆ) அரண்மனை இ) தெரு ஈ) மக்கள்

27. ‘உண்ணு நீர் வேட்டன்’-என்ற பாடல்வரி இடம்பெறும் பாடப்பகுதி எது?

அ) பதிற்றுப்பத்து ஆ) கலித்தொகை இ) குறுந்தொகை ஈ) நற்றிணை

28. அகநானூற்றில் 6,16,26,36…. என்ற எண்ணிக்கையிலான பாடல்களின் திணை யாது?

அ)குறிஞ்சி  ஆ)முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்

29. சங்ககாலத் தமிழகத்தின் வரலாற்;று நூலாகத் திகழ்வது எது?

அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) பரிபாடல் ஈ) புறநானூறு

30. பக்குவமடைந்த ஒருவனை வீடு பெற்ற ஒருவன் வழிப்படுத்துவது …….

அ) ஆற்றுப்படுத்தல் ஆ) ஆயத்தப்படுத்தல்  இ) இன்பப்படுத்தல் ஈ) அறிவுறுத்தல்

31. சிறப்புடை கம்மியர் என்று அழைக்கப்படுபவர் யார்?

அ) அந்தணர் ஆ) சிற்பிகள்  இ) ஆசான் ஈ) நிமித்திகன்

32. நற்றிணையின் அடிவரையறை யாது?

அ) 7-10 ஆ) 6-9 இ) 8-11 ஈ) 9-12

33. குறுந்தொகையைத் தொகுத்தவர் யார்?

அ) கபிலர் ஆ) அம்மூவனார் இ) பூரிக்கோ ஈ) மாங்குடிகிழார்

34. பதிற்றுப்பத்து எந்த அரசர்களைப் பற்றிப் பாடப்பட்டது?

அ) சிற்றரசர் ஆ) சேரர் இ) சோழர் ஈ) பாண்டியர்

35. 'சுடர்த்தொடீஇ! கேளாய்!' என்ற பாடல்வரி இடம்பெற்ற நூல் எது?

அ) அகநானூறு ஆ) புறநானூறு இ)பரிபாடல் ஈ) கலித்தொகை

36. நெடுந்தொகை என்று அழைக்கப்படும் சங்க இலக்கியம் எது?

அ) அகநானூறு ஆ) புறநானூறு இ)பரிபாடல் ஈ) கலித்தொகை

37. திருமுருகாற்றுப்படையின் ஆசிரியர் யார்?

அ) கபிலர் ஆ) அம்மூவனார் இ) பூரிக்கோ ஈ) நக்கீரர்

38. திருமுருகாற்றுப்படை குறிப்பிடும் முருகப் பெருமானின் இருப்பிடங்கள் எத்தனை?

அ) 3 ஆ) 5 இ) 7  ஈ) 6

## UNIT-2

## SYLLABUS

**அலகு – II : சங்க இலக்கியம் :** சங்க இலக்கியங்கள் அறிமுகம் - அ). **எட்டுத்தொகை ஆ). பத்துப்பாட்டு**

அ). **எட்டுத்தொகை**

**நற்றிணை** : 1. பிரசம் கலந்த – பாலை-110
2.தடமருப்பு எருமை- மருதம்-130

**குறுந்தொகை** : 1. கருங்கட்டாக் கலை – குறிஞ்சி- 69
2. உள்ளது சிதைப்போர்- பாலை-283

**ஐங்குறுநூறு** :1. நெய்தல்-தொண்டிப்பத்து:
திரைஇமிழ் இன்னிசை-171
2. அன்னாய் வாழி வேண்டன்னை-203

**பதிற்றுப்பத்து** : 1. சிதைந்தது மன்ற-27
2. மீன்வயின் நிற்ப-90

**பரிபாடல்:** பரிபாடல் திரட்டு-மதுரை நகர்ச்சிறப்பு:
உலகம் ஒரு நிறையாத்தான்-6, மாயோன் கொப்பூழ்-7, செய்யாட்கு இழைத்த-9, கார்த்திகை காதில்-10, ஈவாரைக் கொண்டாடி-11.

**கலித்தொகை** : 1.குறிஞ்சிக்கலி-சுடர்தொடீ -15
2. முல்லைக்கலி-தீம்பால் -11

**அகநானூறு** : 1.அன்னாய் வாழி வேண்டன்னை-குறிஞ்சி-17

**புறநானூறு** : 1. யாதும் ஊரே யாவருங் கேளிர்-பொதுவியல்-192
2.கெடுக சிந்தை கடிதிவள் துணிவே -279

**ஆ). பத்துப்பாட்டு**

**திருமுருகாற்றுப்படை - பழமுதிர்ச்சோலையின் சிறப்பு**
முருகன் இருப்பிடங்கள்: சிறுதினை மலரொடு:218-275.
முருகன் அருள்புரிதல்: 286-295.

அ). எட்டுத்தொகை

## நற்றிணை - பாடல் - 1

**திணை :** பாலை. **துறை :** மகள் நிலையுரைத்தது

**கூற்று: நற்றாய் கூற்று** **ஆசிரியர்: போதனார்**

தலைவி தலைவனுடன் உடன்போக்கு மேற்கொண்டாள். தந்தையின் இல்லத்தில் செல்வச்செழிப்போடு செல்லமாக வளர்ந்தவள் தலைவி. அவள் தலைவனின் இல்லத்தில் அறிவுமுதிர்ச்சியோடு, தலைவனுக்கேற்றபடி நடக்கும் தன்மையுடையவளாகத் திகழ்கின்றாள் என்பதைக் கண்டு வந்த செவிலித்தாய் கூறியதைக் கேட்ட நற்றாய் அவளது இயல்பை வியந்து கூறுவதாக அமைந்துள்ளது இப்பாடல்.

### செல்வச் சிறுமகள்

நற்றாய், தலைவியை அவளது குழந்தைப் பருவத்தில், தேன் கலந்த நல்ல சுவையையுடைய இனிய பாலுணவை ஒளியையுடைய பொன்னாலாகிய கலத்திலிட்டு அதனை ஒரு கையிலேந்தி நின்று, மற்றொரு கையில், புடைப்பாகப் பூவைச் சுற்றிய சிறிய கோலை ஓச்சி 'நீ உண்ணுவாய்!' என்று மிரட்டுகிறாள். மெல்லிய நரைத்த கூந்தலையுடைய முதுமையடைந்த செவிலியர் பின்தொடர்ந்து ஓட, ஒளியையுடைய முத்துக்கள் இடப்பட்ட பொன்னாலாகிய சிலம்பு ஒலிக்குமாறு அவர்கள் சோர்ந்துபோகும் வகையில், பற்ற முடியாமல், வீட்டின் முற்றத்தில் உள்ள பந்தலின் கீழோடி 'நீ உண்ணுவாய்' என்றதன் விடையாக, 'யான் உண்ணேன்!' என்று மறுத்து உரையாடும் சிறிய விளையாட்டினையுடைய செல்வச் சிறுமகள் அவள்.

### அறிவு முதிர்ச்சியும், ஒழுக்கமும் பெற்றனள்

இத்தகைய செல்வக் குடியில் செல்லமாக வளர்ந்தவள் தற்பொழுது தலைவனின் இல்லத்தில், அவனது குடி வறுமையுற்ற போதும் தனது தந்தையினது செல்வமிக்க உணவை நினையாது, ஓடுகின்ற நீரிலே இடையிடையே கிடக்கும் நுண்ணிய மணல் போல ஒரு பொழுதின்றி ஒருபொழுது உண்ணும் சிறிய வறுமையுடையவளாயினாளே, அவளது இந்த மாற்றம் வியப்பளிக்கக்கூடியதாக உள்ளது. உணவு உண்ணவும்

வெறுக்கும் சிறுவிளையாட்டினை உடையவள் இத்தகைய அறிவு முதிர்ச்சியும், ஒழுக்கமும் எங்கு பெற்றனளோ? என வியந்து கூறுகிறாள் நற்றாய்.

## நற்றிணை - பாடல் - 2

**திணை** : மருதம்.. **துறை** : விருந்து வாயிலாகப்புக்க தலைவன் சொல்லியது

**கூற்று: தலைவன் கூற்று** **ஆசிரியர்: மாங்குடி கிழார்**

பரத்தையிற் பிரிந்த தலைவன் தலைவியின் கோபத்தைத் தணிக்க விருந்தொடு புகுந்தான். அதனைக்கண்டு, அவள் தன் ஊடலை விடுத்து விருந்தெதிர் கொண்டாள். அதனால் தலைமகன், இவள் விருந்து படைத்தலில் ஈடுபாட்டுடன் இருக்கின்றாள்; அவளது இனிய முகத்தைப் பார்ப்பதற்கு இவ்விருந்தே காரணமாயிற்று என மகிழ்ந்து கூறுவதாக அமைந்தது இப்பாடல்.

**தலைவியின் இன்முகத்தைக் காண்பதற்கு வாய்ப்பாயிற்று**

வளைந்த கொம்பினையுடைய எருமையின் இளநடையையுடைய கன்றுகளைத் தூண்கள்தோறும் கட்டியிருக்கின்ற நல்ல இல்லம். அங்கு குண்டலத்தைக் காதிலணிந்த அழகிய தோற்றமுடைய தலைவி, சிறிய மோதிரம் அணிந்த அவளது மெல்லிய விரல் சிவக்கும்படியாக; வாழையிலையைக் கொய்துவந்து அடிக்காம்பு பருத்திருத்தலின் அதனை வகிர்ந்து உணவுக்கலம் அமைத்தாள். உணவு சமைத்தலாலே புகைபடிந்து கலங்கிய கண்களையுடையவளாய், அழகிய பிறைபோன்ற நெற்றியில் உண்டாகிய சிறிய வியர்வையை அழகிய முன்றானை நுனியாலே துடைத்துக்கொண்டு, தலைவன்மீது கோபம் கொண்ட மிகுதியினாலே அடுக்கலையிலேயே நின்றாள். அப்பொழுது விருந்தினராய் வந்தவர், தலைவனுடன் வருகைபுரிந்தார். அதனால், இந்த அழகிய மாமைநிறத்தையுடைய தலைவி தலைவன்மீது கோபம்கொண்டு கண்சிவக்காது, மென்மையான புன்னகையைக் கொண்ட முகத்தினளாய்த் திகழ்ந்தாள்.

**மனையறம் அறிந்தவள் தலைவி**

தலைவனது பிரிவால் கோபம் கொண்ட தலைவி, தன் கோபத்தை வெளிப்படுத்தாது, விருந்தோம்பலின் சிறப்புக் கருதி இன்முகத்தோடு விருந்தினரை எதிர்கொள்கிறாள். மனை வாழ்க்கைத் தர்மமாகிய விருதோம்பலை சிறப்புறச் செய்யும் தலைவியின் மாண்பு இங்கு எடுத்துக்கூறப்படுகிறது.

## குறுந்தொகை பாடல் -1

**திணை – குறிஞ்சி** **கூற்று - தோழி கூற்று**

**ஆசிரியர் – கடுந்தோட் கரவீரன்** **துறை – தோழி இரவுக்குறி மறுத்தது**

இரவுக்குறி என்பது தலைவன் தலைவியை இரவில் சந்திக்கும் இடம். இரவுக்குறியை விரும்பிய தலைவனை நோக்கி, "நீ இரவில் வருவதால் உனக்குத் தீங்குண்டாகுமோ என எண்ணித் தலைவியும், நானும் வருந்துவோம்; ஆதலால் நீ இரவில் தலைவியைக் காண வரவேண்டாம்" என்று தோழி மறுத்துக் கூறுவதாக அமைந்தது இப்பாடல்.

கரிய கண்ணையும் தாவும் தொழிலையும் உடைய ஆண்குரங்கு, இறந்துபட்டது. அதனால், தனிமைத் துன்பத்தைத் தாங்க இயலாத அன்புடைய பெண்குரங்கானது, மரமேறுதல் முதலிய தம் தொழிலைக் கல்லாத வலிய குட்டியை, தன் சுற்றத்திடம் ஒப்படைத்துவிட்டு ஓங்கிய மலைப்பக்கத்தில், தாவி உயிரை மாய்த்துக்கொள்ளும். இத்தகைய மலைநாட்டுக்குத் தலைவனே!, அன்புடையோரைப் பிரிந்து தனித்து வாழும் தன்மையற்ற விலங்குகள் வாழும் மலையில் உள்ள, பண்பில் மேம்பட்டவள் தலைவி. நீ நள்ளிரவில் தலைவியைக் காண வராதே!. வரும்பொழுது உனக்குத் தீங்குண்டாகுமாயின், உன்மீது அளவற்ற அன்புடைய தலைவி தொடர்ந்து வாழ்வதை விரும்பமாட்டாள். வாழ்க்கை என்பது மகிழ்ச்சியாக வாழ்வதற்கே! என இரவுக்குறி மறுத்துக் கூறுகிறாள் தோழி.

## குறுந்தொகை பாடல் -2

**திணை – பாலை** **கூற்று - தலைவி கூற்று**

**ஆசிரியர் – பாலை பாடிய பெருங்கடுங்கோ** **துறை – தலைவனின் பிரிவை ஆற்றாத தலைவி வேறுபட்டுக் கூறியது**

*தலைவன் பொருளீட்டச் சென்ற காலத்தில் வருந்தும் தலைவியைப் பார்த்து, வருந்தாதே எனக் கூறிய தோழியை நோக்கி, "பெற்றோரது பொருளைச் செலவுசெய்து வாழ்வது வாழ்வாகாது, எனவே போருளீட்டி வரும்வரை காத்திரு எனக் கூறிச் சென்றார் தலைவர். எனவே அவரது பிரிவு கருதி வருந்தவில்லை; அவர் சென்ற கொடிய பாலை நிலத்தின் தன்மையை எண்ணி அஞ்சினேன்" என்று தலைவி கூறியதாக அமைந்தது இப்பாடல்.*

தோழி, நாமாக ஈட்டிய பொருளின்றி, நம்முடைய முன்னோரால் தேடி வைக்கப்பெற்ற செல்வத்தைச் செலவழிப்போர், செல்வர் என்று உலகத்தாரால் சொல்லப்படார். அப்பொருளைப் பயன்படுத்தி வாழ்தல், இரத்தலைக் காட்டினும் இழிவு உடையது. எனவே வாழ்விற்கான பொருளைத் தாமே சம்பாதிப்பதே தலைவனது கடமை என, தெளிவாக எடுத்துக் கூறி, அதனை ஈட்டுவதற்காகச் சென்றுள்ளார் தலைவர். எனவே அவரது பிரிவை எண்ணி நான் வருந்தவில்லை. தலைவன் சென்ற பாதையானது, அவ்வழியில் செல்வோரை மறைந்திருந்து வேல்கொண்டு, தாக்கிக் கொல்லும் எமனைப் போன்ற கள்வர்கள் வாழும் கொடிய பாலை நிலம். அங்கு கிடைக்கும் மாமிசத்தை எதிர்நோக்கிப் பருந்துகள் பார்த்திருக்கும். அத்தகைய நெடிய, பழைய, நீர் இல்லாத பாலைநிலத்தின் வழியிலே தலைவர் பொருளீட்டச் சென்றுள்ளார் என்பதே எனது மிகுந்த துன்பத்திற்குக் காரணமாக உள்ளது, எனத் தோழியிடம் தனது ஆற்றாமைக்கான காரணத்தை எடுத்துக்கூறுகிறாள் தலைவி.

### 3. ஐங்குறுநூறு
### பாடல் - 1
### தொண்டிப்பத்து

திணை – நெய்தல்
ஆசிரியர் - அம்மூவனார்
கூற்று – தலைவன் கூற்று
துறை – சுற்றத்தாரோடு செல்லும் தலைமகளைக் கண்டு தலைவன் சொல்லியது.

தலைவி சுற்றத்தாரோடு கூடிச் செல்லும் பொழுது, தலைவன் மறைந்து நின்று அவளது அழகினையும், அருமையும் வியந்து பாராட்டித் தலைவன் கூறியது இப்பாடல்.

தோண்டி என்னும் பட்டினத்தில். கடலினது அலைகள் ஒலிக்கதின்ற இனிய இசையொடு கலந்து மத்தளம் முழங்குகின்ற இனிய இசையானது தெருக்கள் எங்கும் முழங்குகின்றது. இந்நகரத்தைப் போன்ற அழகுடைய, மூங்கில் போன்ற தோள்களையும் ஒளி பொருந்திய வளையல்களையும் அணிந்த இந்நங்கை

என்னுடைய மனம் முழுதும் நிறைந்தவள் ஆவாள். குடலின் இசையைப் போல இயற்கை அழகினையும், முழவின் இசையைப் போல செயற்கை அழகினையும், முழவின் இசையைப் போல செயற்கை அழகினையும் ஒருங்கே பெற்றவள் தலைவி எனப் பாராட்டிக் கூறுகிறாள்.

பாடல் - 2

அன்னாய் வாழிப்பத்து

திணை – குறிஞ்சி

ஆசிரியர் - கபிலர்

கூற்று – தலைவி கூற்று

துறை - தலைவனோடு வாழும் தலைவி தன் தாயின் இல்லத்திற்கு வந்த பொழுது, தலைவனின் ஊர்ச்சிறப்பபைத் தோழிக்குக் கூறியது.

தலைவகோடு தலைவி இல்லறம் நடத்துகிறாள்.மீண்டும் தன் தாயின் இல்லத்திற்கு வந்த பொழுது, தோழி- உன் தலைவனுடைய ஊர் நன்னீர் இல்லாத ஊர், அந்நீரை எவ்வாறு பருகினாய் என்று வினவிய பொழுது, தலைவி தன் தலைவனின் ஊர்ச்சிறப்பபைக் கூறும் வகையில் அமைந்தது இப்பாடல்.

அன்னாயே! (தோழியே) நான் கூறுவதை விரும்பிக் கேட்பாயாக. ஏம் தலைவனுடைய நாட்டில் உள்ள , அலையுதிர்ந்து மூடப்பட்ட குளங்களின் அடிப்பகுதியில் உள்ள விலங்கினங்களால் உண்ணப்பட்டு எஞ்சிக் கிடந்த கலங்கல் நன்னீரானது. நமது தோட்டத்தில் கிடைக்கும் தேன் சுவையுடைய பாலை விடவும், பருகுதற்கு இனியதாக உள்ளது. ஆவற்றால் குறைவேதும் இல்லை, எனத் தலைவி குறிப்பிடுகிறாள்.

தலைவனோடு இருந்து விருந்தோம்பி, நல்லறம் செய்யும் தலைவியின் வாழ்க்கை நலம் இங்கு சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

## 4. பதிற்றுப்பத்து

### சிதைந்தது மன்ற

இடையறாது மலருங் குவளையின் தூய வெளிப்புறத்து இதழொத்த மலரைக் கூந்தலில் செருகி மலர்ந்த ஆம்பல் மலரின் அகஇதழை நடுவே வைத்துத் தொடுக்கப்பட்ட தழையாடை அணிந்தவராய், சுருண்ட மயிரையுடையதும் பூவாற் செய்த கண்ணியைச் சூடிய தலையை உடையவரும், கள்ளாகிய உணவை உண்டவரும், சுருதியோடு இனிதே சேர்கின்ற வாத்தியத்தையுடையயோருமாகிய இயவர் தங்கும் நீர்த்துறைக்குப் பக்கத்தில் மருதமரத்தில் உள்ள பறவைகளை விரட்டும் பொருட்டு ஒளியையுடைய வளையலணிந்த மகளிர் தெளிந்த ஓசையைச் செய்வர். ஆவ்வோசையைக் கேட்டு வயல்களருகில் உள்ள சோலைகளில் பசிய மயில்கள் ஆடும்.

பொய்கையின் நீா் வருவதற்குரிய வாய்க்காலையும் அதன்கண் நீா் வந்து மோதுகின்ற கதவினையும் கொண்ட முன்பிருந்தே எப்போதும் பூத்து வரும் நெய்தற் பூக்களையும், அம்மலா்களில் வந்து படியும் வண்டுகளையும் கொண்ட வயலின் வழியே சென்ற வலிய வாயையுடைய சக்கரத்தையுடைய வண்டி சேற்றில் அகப்பட்டு அழுந்திற்று. உடனே வண்டி ஓட்டுபவா் அவ்வண்டியினைத் துள்ளிச் செலுத்தி எருதினை அதட்டி ஓட்டினா். அந்நல்ல எருதுகளும் சேறிறலிருந்து நீங்குவதற்கு முயலுகின்ற துன்பத்தையுடையனவாயின. இவ்வாறு வண்டியை ஓட்டுவோரது முழக்கத்தையன்றி அந்நாடு வேறு மாறான போா் ஆரவாரத்தினை அறியாதது ஆகும். புது வருவாயினை இடையறாது உடையதும், விருப்பம் பொருந்திய அழகினை உடையதுமான பகைவா் நாட்டு அழகு நீ சினந்து நோக்கலின் சிதைந்தது.

**மீன் வயின் நிற்ப**

1-13 விண்மீன்கள் தாம் இருத்தற்குரிய இடங்களிலே இருப்ப, அதனால் மழையானது பருவம் பொய்யாமல் காலத்தில் பெய்ய, உயிா்க்கு அச்சம் இல்லாமல் காவலாகித் துன்பம் தீா்ந்து இன்பம் உண்டாகிப் பெருகும்படி, அந்தணா் முதலியோா் தமக்கு அளவான துறை நூல்களைக் குறையாதபடி நிறையக் கற்று வன்மையில் மிக்கோா் போா் செய்யும் மிக்க வன்மைக்கு அஞ்சாத, விளங்குகின்ற வாளையுடைய வலிய அரசா் ஆண்யானைகளோடு அணிகலன்களைத் திறையாகக் கொடுத்துத் தம்முடன் பழமையைச் சொல்லி நீ ஏவிய தொழிலைச் செய்ய, அகன்ற பூமியில் நடுவுநிலைமையோடு ஆட்சி செய்தவனும் அழியாத பல வகையான புகழ் அகன்ற ஆகாயத்திலே பரவ, வானின் வலியைப் பகைவா் அறியுமாறு செய்து, செவ்வையான குணங்களை மேற்கொண்டு அறக்கடவுள் வாழ்த்தும்படி நன்கு ஆண்ட வெற்றியையுடைய மாந்தரனென்னும் சேர அரசனது வெற்றியையுடைய வழித்தோன்றலாக உள்ளாய்.

14-30 அன்புடைமையினால் நீரோடு ஒத்தனை, நின் சூழ்ச்சி அளப்பதற்கு அருமையின் பெரிய ஆகாயத்தைப் போன்றனை: வறியோா் தாமே கொள்ளச்செல்வம் குறைவு படாமையால் மேகம் முகந்து கொள்ளக் குறைபடாத கடலைப் போன்றாய். பல நட்சத்திரங்களுக்கு நடுவே சந்திரனைப் பேல பொலிவுபெற்ற சுற்றத்தோடு விளங்கித் தோன்றுதலையுடையை, அச்சம் பொருந்திய இயல்பினையுடைய அயிரைமலையில் எழுந்தருளியிருக்கும் துா்க்கையை வழிபட்டும் கடலின் வன்மையைத் தாழ்க்க வேண்டி வேலினை ஏற்றி நடப்பித்தும் மலையிலுள்ளனவும், மருதத்திலுள்ளனவும் ஆகிய அரண்களைக் கைப்பற்றி, மாறுபட்டுப் போா்செய்ய வந்தோருடைய வலிமையைக் கெடுத்தும் அவ்வரண்களிலே பெற்ற பெருமையுள்ள பொருட்களைப் பரிசில் பெறும்படி இரவலா்க்கு ஈந்த வெற்றியால் வரும் செல்வத்தையுடைய வலியோருடைய வழித்தோன்றலே! சா்க்கரைக் கட்டியோடு கூட்டின அவரை முதலியவற்றின் விதையாகிய உணவினையுடைய கொங்கா்க்குத் தலைவனே! கள்ளாகிய உணவினையுடைய குட்ட நாட்டிலுள்ளாா்க்குத் தலைவனே. போாில் முதுகுகாட்டி ஓடினாா் மேல் செல்லாத இணையான தோள்களையுடைய பூழிநாட்டாா்க்குக் கவசம் போன்றாய்! ஒலிக்கின்ற நீா்ப்பரப்பினையுடைய மரந்தை நகரத்திலுள்ளாா்க்குத் தலைவனே! வெள்ளிய பூவையுடைய வேளைச் செடியோடு சுரைக்கொடி இடந்தோறும் கலந்துள்ளதும் பலவாக வேறுபடுதலையுடைய மொழிகளைப் பேசும் வீரா்கள் நிறைந்துள்ளதுமான பாசறையிலுள்ள வீரா்க்கு அரசே!.

31-40 சேரன், கரையிலே வந்து உலாவுதலையுடைய கடலைப் போன்ற பகைவரால் தடுத்தற்கு அரிய சேனையோடுங் கூடியவன். மாட்சிமைப்பட்ட தொழிலையுடைய வில்லை மாா்பிற்

பொருந்த வளைத்து, நாண் உராய்தலால் தழும்பு விளங்கிய வன்மை பொருந்திய பெரிய கைகளையும் நீண்டு அலங்கரித்தாற் போன்ற ஏந்திய திரண்ட தோள்களையுமுடையவன். நட்சத்திரங்கள் பூத்தாற் போன்ற விளங்குகின்ற மணிகளையுடைய வட்டமான சேணத்தையும் மெல்லிய மயிரையுடைய கவரியையும் சூட்டிய குதிரையின்மேல் ஏறிக் கொண்டு காம்பையுடைய வேலைப் பிடித்து எறிந்து பகைவர்க்குத் துன்பத்தைச் செய்தலில் விருப்பம் நீங்காத வீரமுடைய பெரும! நிலையாமை தம் நெஞ்சிலே மிக்க வீரர்க்குத் தலைவனே! உயர்ந்த பெரிய சிறப்பினையுடைய மற்ற அரசரினும் மேம்பட்ட புகழையுடையோய்.

41-50 வயலிலுள்ள உழவன் தண்ணுமைப் பறையை முழக்கினால், பழனத்திலுள்ள மயில் அதனோசையை மேகத்தின் ஓசையென்று எண்ணி ஆடும். குளிர்ந்த நீரில் ஆடுவோரது ஆரவாரத்தோடு சேர்ந்து கொடிய போரைச் செய்யும் வீரரது வெளிந்த தடாரிப் பறை ஒலிக்கும். சோற்றையுடைய நல்ல வீடுகளில் ஏறுகள் ஒன்றோடொன்று மாறாது முழங்க, செழுமையான பலவாக இருந்த கொழுவிய பல குளிந்த வயல்களையுடைய காவிரிப் பக்கத்தையுடைய நல்ல சோழ நாட்டைப் போன்றவரும் தொழில் வளம் பொருந்திய சிலம்பினையும், அடங்கிய கொள்கையையும் அறக்கற்பினையும் தெளிவாக அறியப்பட்ட நல்ல புகழையும் வண்டுகள் ஒலிக்கும் கூந்தலையும் உடைய ஒள்ளிய கொடியை அணிந்தவளுமாகிய சேரமாதேவியின் கணவனே!

51-57 நின் வாழ்நாட்கள் மாதத்தைப் போன்றனவாகுக. மாதங்கள் ஆண்டைப் போல ஒருதன்மையவாகுக. ஆண்டுகள் ஊழி போன்றனவாகுக. ஊழிகள் வெள்ள மென்னும் பேரெண்ணின் எல்லையையுடையனவாக என நினைத்து யான் நின்னைக் காண்பேன் வந்தேன். போர்க்களத்தில் மேம்பட்டு இடியைப் பேல முழங்கும் முரசினையும் பெரிய நல்ல யானைகளையும் உடைய தலைமையாதற் தன்மையுடையோய்!

## 5. பரிபாடல் -வையை

### ஏழாம் பாடல்

இ-ள்.) தென்னவன் நான்மாடக்கூடல் நகர் - பாண்டியனது மதுரைநகர். புலவர் புலக்கோலால் - நல்லிசைப்புலவர்கள் தமது அறிவாகிய துலாக்கோலாலே, உலகம் ஒருநிறையா - இவ் வுலகத்தேயுள்ள நகரங்கள் அனைத்தினது பெருமைகளையும் ஒரு தட்டிலிடும் நிறையாகவும், தான் ஓர் நிறையா - தனது பெருமையை ஒரு தட்டிலிடும் நிறையாகவும் கொண்டு, தூக்க - சீர்தூக்குமிடத்து, உலகனைத்தும் வாட - உலகத்துள்ள ஏனை அனைத்து நகரங்களின் பெருமையும் மெலிந்தேறாநிற்ப, வாடாத தன்மைத்து - தன் பெருமை அங்ஙனம் மெலியாமல் தன் பொறையாலே தாழும் தன்மையுடைத்து;

### எட்டாம் பாடல்

இ-ள்.) எம் சீர் ஊர் - எமது அழகிய மதுரை, மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப் பூவொடு புரையும் - திருமாலினது திருவுந்தித்தடத்தின் கண் தோன்றி மலர்ந்த தெய்வத் தாமரைப் பூவினையே ஒப்பதாம், தெருவம் பூவின் அக இதழ் அனைய - அம் மதுரையிலமைந்த தெருக்கள் அத்தாமரை மலரினது அகவிதழ்களையே ஒப்பனவாம், அண்ணல் கோயில் - அம் மதுரையின் நடுவே அமைந்த எம் வேந்தனாகிய பாண்டியனது அரண்மனை, இதழ் அகத்து அரும்பொகுட்டு அனைத்து - அவ் விதழ்களின் நடுவே அமைந்துள்ள அரிய அழகுடைய பொன்பொகுட்டையே ஒப்பதாம், தண்தமிழ்க் குடிகள் - அவ் வேந்தனது அரண்மனையைச் சூழ்ந்திருந்து வாழாநின்ற குளிர்ந்த தமிழ்பேசும் குடிமக்கள், தாதின் அனையர் - அம் மலரின்கண் உள்ள மகரந்தத் துகளையே ஒப்பாவர், பரிசில் வாழ்நர் - அவரை நாடி வருகின்ற பரிசில்பெற்று வாழுமியல்புடைய இரவலர், தாது உண் பறவை அனையர் - அம் மலர்க்கண் தாதுண்டற்கு வந்து குழுமுகின்ற வண்டுகளையே ஒப்பாவர், எம் பேர் ஊர் - இத்தகைய எழிலுடைய எமது பெரிய மதுரையில் வாழ்வோர், பூவினுள் பிறந்தோன் நாவினுள் - பிறந்த நால்மறை கேள்வி நவில்குரல் ஏம இன் துயில் எடுப்ப எழுதல் அல்லதை - அத் தாமரைப் பூவினகத்தே தோன்றிய பிரமதேவனுடைய நாவின்கண் தோன்றிய நான்காகிய வேதங்களை வைகறைப் பொழுதில் அந்தணர்கள் ஓதாநிற்ப அவ் விசை தமது மிக்க இன்பமுடைய உறக்கத்தைப் போக்கி உணர்த்தி எழுப்புதலாலே நாடோறும் எழுதலன்றி, வஞ்சியும் கோழியும் போல - சேரன் தலைநகரமாகிய வஞ்சியில் வாழ்வாரையும் சோழன் தலைநகரமாகிய உறையூரில் வாழ்வாரையும் போல, கோழியில் துயில் எழாது - கோழியினது கூக்குரல் துயில் அகற்ற எழார், வாழிய - அது நெடிது வாழ்க.

**பத்தாம் பாடல்**

(இ-ள்.) மதுரை - மதுரைமாநகரம், புனை தேரான் வையை உண்டாகும் அளவு - ஒப்பனை செய்யப்பட்ட பாண்டியனுடைய வையைப் பேரியாறு

உளதாமளவும், சீர்க்கு ஒப்ப - தனது தலைமைத் தன்மைக்கேற்ப, செய்யாட்கு இழைத்த திலகம் போல வையம் விளங்கி - திருமகட்கு இட்ட திலகம் திகழுமாறு போல இவ் வுலகத்தே திகழ்ந்து, புகழ்பூத்தல் அல்லது - புகழ்பரப்பிப் பொலிதலன்றி, பொய்யாதல் உண்டோ - பொய்ப்படுதல் உண்டாகுமோ? ஆகாது.

**பதினொன்றாம் பாடல்**

(இ-ள்.) மதுரை - மதுரை நகரம், கொடித்தேரான் வார்த்தை உண்டாகும் அளவு - மீனக்கொடியையுடைய பாண்டியனுடைய செந்தமிழ்மொழி உளதாகும் காலமளவும், கார்த்திகை காதில் கன மகர குண்டலம் போல - கார்த்திகை மகளிரின் - செவியிலிடப்பட்ட பொன்னாலாகிய மகரக்குழை விளங்குமாறு, சீர்த்து விளங்கி - சிறந்து விளங்கி, திருப்பூத்தல் அல்லது - செல்வம் பெருகிப்பொலிதல் அல்லது, கோத்தை உண்டாமோ - குற்றம் உடைத்தாகுமோ? ஆகாது;

**பனிரண்டாம் பாடல்**

(இ-ள்.) ஈவாரைக் கொண்டாடி ஏற்பாரைப் பார்த்து உவக்கும் - வறியோர்க்கு அவர் வேண்டுவவற்றை வழங்கும் வள்ளன்மையுடையாரைப் பெரிதும் கொண்டாடித் தம்பால் வரும் இரவலரைக் கண்டு பெரிதும் மகிழாநின்ற மேன்மக்கள் வாழாநின்ற, சேய் மாடக் கூடலும் - பாண்டியனுடைய நான்மாடக் கூடலின் கண்ணும், செவ்வேள் பரங் குன்றும் - முருகப் பெருமான் எழுந்தருளியிருக்கும் திருப்பரங்குன்றத்தின் கண்ணும், வாழ்வாரே வாழ்வார் எனப்படுவார் - இருந்து வாழும் பேறுடையாரே பயன் கெழும் வாழ்பவர் என்று சான்றோரால் புகழப்படுபவர் ஆவர், மற்றையார் புத்தேள் உலகு போவார் யார் - அவ் விரண்டிடத்தினும் அன்றி வேறிடத்திருந்து வாழும் ஏனையோருள் வைத்துப் பயன்பட வாழ்ந்து வீட்டுலகினை எய்துவார் யாரே உளர்?

## 6. கலித்தொகை

**நகைக்கூட்டம் செய்த கள்வன் மகன்**

**பாடல்: 1 சுடர்தொடீஇ! கேளாய்!...,** **தலைவி, தோழியிடம் கூறியது**

**திணை: குறிஞ்சி, ஆசிரியர்: கபிலர்.**

வாலிபனாக வந்து, வீட்டு வாயிலில் நின்று, தண்ணீர் வேண்டும் என்று கேட்டான் ஒருவன். அவன், சிறுவயதில் நம்முடன் சேர்ந்து விளையாடிய சிறுவனே. அவனே இன்று தலைவனாக என்னைக் காணவந்தான்' என்று தலைவி, தோழியிடம் கூறுவதாக அமைந்த பாடல்.

**மணல் வீட்டைச் சிதைத்தவன்**

தோழி! நாம் சிறுவயதில் மணல்வீடு கட்டி விளையாடியதுண்டு. அங்கு தவறாமல் வந்து மணல்வீட்டைக் காலால் உதைத்துச் சிறுவன் ஒருவன் குறும்பு செய்வான்; எனது கூந்தல் மலர்களைப் பறித்தும், பந்தினைக் கவர்ந்து சென்றும் ஓயாமல் நமக்குத் தொல்லைகள் செய்வதே அவன் வழக்கம். அறியாத சிறுவயதில், அவன் சிறுநாயின் விளையாட்டுச் செயல்கள்போலக் குறும்புகளால் ஓயாமல் என்னைத் துன்புறுத்துவான். மேலும், அவனே இந்நாளில், 'காதலாகிய துன்பத்தையும் தரவேண்டி, எனது வீடுதேடி வந்தான்' என்று தலைவி, தோழியிடம் கூறுகிறாள்.

**தலைவன் வளர்த்த காதல்**

சிறுவயதில் சிற்றில் சிதைத்தும், பந்தினைக் கவர்ந்தும் சென்ற சிறுவனது உள்ளத்தில் சிறுவயது முதலாகவே சிறுமியாகிய தலைவியைக் குறித்த எண்ணம் அமைந்திருக்கவேண்டும். அதனால், அவனும் அவ்விளையாட்டுப்பருவத்திலும் வாய்ப்பு அமைகின்ற பொழுதிலெல்லாம் அவளுடன் சேர்ந்து விளையாடுவதையும், அவளது அருகாமையினையும் விரும்பி இருக்கவேண்டும்.

ஆனால், அவளது செல்வச்செழிப்பும், அவள் குடும்பத்தார் அவளைப் பாதுகாத்து வளர்த்த நடைமுறையும் அதற்கான வாய்ப்புகளைத் தடுத்திருக்கவேண்டும். இவ்வாறு, அறியாத பருவத்தில் அவளுடன் விளையாட்டின் வழியே மோதலாக அறிமுகமாகிய அவர்கள் உறவு, இளைஞனாகிய பருவத்தில் காதலாகிய அன்புறவாக மலர்ந்தது. உள்ளம் நிறைந்த காதலுடன் தலைவனாக அவளைப் பார்க்க அவன் வாய்ப்பினை எதிர்பார்த்தான். ஆயினும், தலைவியது இல்லத்தில் அமைந்த காவலால் அவன் இயல்பாகச் சென்று அவளைப் பார்ப்பது கடினம் என்பதை அறிந்தான். அவளைச் சந்தித்துக் காதலை வெளிப்படுத்திக்கொள்வதற்கான சூழலைத் தானே உருவாக்கிக்கொண்டான்.

**தலைவியைக் காண வந்தான்**

தம்மை நாடி வந்தவர்களுக்கு விருந்து உபசரித்தலைத் தவறாமல் செய்வது தலைவியின் வீட்டில் அன்றாடம் நிகழ்வது. அதனால் தலைவனும் விருந்தினனைப்போல உச்சிவேளையில் வந்தான். காவல் நிறைந்த வீட்டின் வாசலில் நின்று தாகம் தீரத் தண்ணீர் வேண்டும் எனக் கூவினான். வீட்டின் உள்ளே இருந்த தலைவியின் தாயும், இதைக் கேட்டாள். தலைவியை அழைத்தாள்; வாசலில் நின்றிருப்பவருக்கு தண்ணீர் தந்து, தாகம் தீர்த்து வா என்று கூறி அனுப்பினாள்.

**தலைவன் செய்த கள்ளத்தனம்**

தலைவியும் அவன் முன்னால் தண்ணீருடன் நின்றாள். நின்றவள் அவனிடத்தில் நீர்க் கலத்தை நீட்டினாள். ஆனால், அவனோ, அவளது கரத்தைப் பற்றி இழுத்தான். தீடீரென நிகழ்ந்த இச்செயலினால் தலைவி அதிர்ந்தாள். அதனால், பெருங்குரலெடுத்துக் கூச்சலிட்டாள். அத்துடன், தன்னிடத்தில் இவ்வாறு நடந்துகொள்ள யாருக்கு உரிமை இருக்கும்? என்று சிந்தித்த நொடிப்பொழுதில், அவள் மனதில் சிறுவயதுக் குறும்புக்காரச் சிறுவனது முகம் நிழலாடியது. அதை உறுதிப்படுத்துவதாகவே அங்கு நின்றிருந்த

தலைவனின் பார்வையும் அமைந்திருந்தது. சிறுவயதில் குறும்பாக விளையாடிய சிறுவனே, இன்று தலைவனாக தன்னைக் காணவந்ததை உணர்ந்தாள். ஆயினும் முன்னமே அதனை உணராமல் தான் எழுப்பிய அச்சக்குரலால் அவனுக்கு ஆபத்து ஏற்பட இருப்பதனைத் தடுக்க நுண்ணறிவுடன் யோசித்தாள். அதனால் தாயிடத்தில் பொய் கூறவும் முடிவுசெய்தாள். தன் மகளது அச்சக்குரலுக்குக் காரணம் என்ன என்பதை அறியவேண்டி, அவளது தாயும் வீட்டின் உள்ளிருந்து குரல்கொடுத்தாள். வாசலில் நின்றவனிடத்தில் தலைவி கொண்ட இனம்புரியாத அன்புணர்வு அவளைப் பொய்கூறத் தூண்டியது.

**காதலுக்காகக் கூறிய பொய்**

வந்தவன், தனது கரத்தைப் பற்றி இழுத்தான் என்று கூறினால், அங்கு தலைவனைத் தண்டிக்கின்ற சூழலே அமையும். இதை உணர்ந்த அவள், கண்களால் தலைவனது காதல் பார்வையைச் சுமந்து பொய்கூறத் துணிந்தாள். வந்தவன் நீர் அருந்தியபொழுதில், விக்கல் ஏற்பட்டதால் தடுமாறியதாகவும், தான் அதனைக் கண்டு, செய்வது அறியாமல் நடுங்கி, அச்சம்கொண்டு கத்தியதாகவும் தாய்க்கு விடைகூறினாள். இதைக் கேட்டு வாயிலுக்கு ஓடிவந்த அவளது தாயும், அவனருகில் வந்து, அவன் மார்பை நீவினாள். மெதுவாக நீருண்ணுக என அவனிடம் கூறியபடி அங்கு நின்றாள். அந்த நொடிப்பொழுதில் தாய்க்குத் தெரியாதபடி குறும்புப் பார்வையாகத் தலைவியைப் பார்த்தான். தலைவியும் அவனது காதல் பார்வைக்குத் தனது உள்ளத்தைப் பறிகொடுத்தாள். இவ்வாறு, தலைவன் தன்னிடம் செய்த காதல் குறும்பினைத் தலைவி தோழியிடத்தில் எடுத்துரைப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது. சிறுவயது முதலாகத் தலைவனின் மனதில் காத்துவைக்கப்பட்டிருந்த, தலைவி மீதான அன்பும், வளர்ந்த இளைஞனாகி, தலைவன் தனது காதலைத் தலைவியிடத்தில் எவரும் அறியாதவகையில் வெளிப்படுத்திய காதல்பண்பாடும் இப்பாடலில் உணர்த்தப்பட்டுள்ளன.

**சிற்றில் புனைகோ சிறிது!...,**

**பாடல்: 2, தீம்பால் கறந்த கலம் மாற்றி…, தலைவி, தோழியிடம் கூறியது.**

**திணை: முல்லை, ஆசிரியர்: சோழன் நல்லுருத்திரனார்.**

தலைவன், தன்னை மிக விரைவாகத் திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்கின்ற மனநிலையினை அவனுக்கு வலியுறுத்த வேண்டும் எனத் தலைவி, தோழியின் துணையை நாடுவதாக அமைந்த பாடல்.

தலைவி, முல்லை நிலத்தைச் சேர்ந்தவள். இளம் வயதே உடையவள். ஆயினும் வீட்டில் உள்ள பணிகளை முறையாகச் செய்து மனையறம் காக்கின்ற திறமை உடையவள். அன்றைய நாளிலும் தலைவி, அதிகாலையிலேயே எழுந்தாள். தனது அன்றாடப் பணிகளை முறையாகச் செய்தாள். தந்தையும், சகோதரர்களும் கறந்துகொண்டுவந்த பால்குடங்களை உரிய இடத்தில் பாதுகாத்துவைத்தாள். மேய்ச்சலுக்குச் செல்கின்ற தாய்ப்பசுக்களுடன் சென்றுவிடாதவாறு, இளங்கன்றுகளைக் கயிற்றால் கட்டி தனது வீட்டில் அமைந்த தூண்களில் அவற்றைக் கட்டிவைத்தாள். தனது பணிகளை முறையாக முடித்தாள். தனது தோழிகளுடன் கூடி விளையாடுகின்ற பொழுதும் வந்தது. அதற்கென்று அவளது தாய்

அவளை ஒப்பனை செய்து அனுப்பினாள். பூக்கள் உள்ளது போன்ற கரையும், நீலநிறமும் உடைய உடையினை அவளுக்குத் தாய் அணிவித்தாள். தலைவாரிப் பூவும் சூட்டினாள்.

**தலைவியின் மனவருத்தம்**

தனது வீட்டின் அருகில் உள்ள தோட்டத்தில் தோழியர்கள் சிறுவீடுகட்டி விளையாடுவதைக் கண்டு மகிழ்ந்தவளாகத் தலைவி அங்கு சென்றாள். அவளது மகிழ்ச்சியோ உண்மையான மகிழ்ச்சியாக இல்லாததை அவள் மட்டுமே அறிவாள். காரணம், அவள் மணல் வீடு கட்டி விளையாடுகின்ற பருவத்தையும் கடந்து, தலைவனுடன் திருமணம் புரிந்து, மனையறம் காக்கின்ற மனவுறுதி வாய்த்தவளாக வளர்ந்துவிட்டாள். அதற்கு வாய்ப்பாக, அவள் தலைவனுடன் உய்ர்ந்த காதலையும் வளர்த்துக்கொண்டுள்ளாள். ஆனால், தலைவனோ, விளையாட்டுச் சிறுவனின் மனநிலையில் திருமணம் குறித்த சிந்தனை இல்லாதவன்போலக் காலம் தாழத்தி வந்தான். அவ்வாறு அவன் காலம் தாழ்த்துவதனை அவளால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. காரணம், எவருக்கும் தெரியாத அவர்களது காதல் உறவு, தாய்தந்தை முதலானோருக்குத் தெரியவந்தால் அதனை எதிர்கொள்வதையும், அவர்களது எதிர்ப்பையும் மீறி தலைவனை அடைவதைக் குறித்தும் அவள் ஓயாமல் சிந்திக்கக் கூடியவளாகத் துடித்தாள். ஆனால், தலைவனோ, மேலும் பல நாள்கள் காதலை வளர்க்கின்ற மனநிலையிலேயே இருப்பது தலைவிக்குத் தீராத துன்பத்தைத் தந்தது. அத்துன்பம் அவளிடத்தில் தலைவன் மீதான பொய்யான வெறுப்புணர்வாக வெளிப்பட்டது. அவனுடன் பொய்யான கோபத்துடன், பொய்ச்சண்டை போடுகின்ற மனநிலையைத் தந்தது. தலைவி, தனது வருத்தமான மனநிலையினைத் தனக்குள் மறைத்தபடியே, தனது தோழியருடன் விளையாடுபவளைப்போல அங்கு வந்தாள்.

**விரைவில் திருமணம் செய்க**

சிறுவீடு கட்டி அவர்கள் விளையாடிய இடத்திற்கு, குருந்தம்பூக்களால் ஆன கண்ணியைத் தலையில் சூடியவனாகத் தலைவனும் வந்தான். ஆனால், தலைவி அவனைப் பார்க்காதவளைப்போல இருந்து, அவனைப் புறக்கணிப்பதுபோல நடித்தாள். அங்கு நின்றிருந்த தலைவன், ‘அழகிய அணிகலன்களை அணிந்து அழகுடன் விளையாடுகின்ற பெண்ணே!, உன்னுடன் நானும் சிறுவீடு கட்டி விளையாட வரலாமா? என்று கேட்டான். ஆனால், தலைவியோ அவனுடன் சிரித்துப்பேசி மகிழ்ந்து விளையாடுகின்ற மனநிலையில் இல்லை. அதனால், திருமணம் குறித்து அறிவுறுத்துபவளாகக் கோபத்துடன் அவனுக்கு விடை கூறினாள். ‘பெற்றோர் கட்டி வைத்துள்ள வீட்டில் இருப்பதையே சுகம் என்று கருதுபவன் நீ. அதனால் தான் என்னை விரைவில் மணந்துகொண்டு நாம் தனியே குடும்பம் நடத்தத் தனிவீடு வேண்டும் என்று நினைக்கவில்லையோ?’ என்று அவனிடத்தில் கோபித்துக்கொண்டாள். இதைக் கேட்ட தலைவன் மீண்டும் அவளிடத்தில் பேச எண்ணினான்.

**என்னை உரிமையாக்கிக்கொள்க**

பெண்ணே! உனது கூந்தலின் மலர்மாலைகள் சரிந்துள்ளன. அதனைச் சரிசெய்யவா? என்று அவளிடத்தில் கேட்டபடி, கூந்தலைத் தொடுவதற்குச் சென்றான். அதனால் அவள் மேலும் கோபம் கொண்டாள். ‘ஊரறிய என்னை மனைவியாக்கி, உரிமையுடன் கூந்தலில் பூச்சூட்டி மகிழ்கின்ற வாய்ப்பினைக் குறித்துச் சிந்திக்காமல், என் தாய் சூட்டி அனுப்பிய

மாலையினைச் சரி செய்ய வரவா என்று கேட்பதும் உனக்குச் சிறப்பாகுமா?' என்று தலைவனிடம் கேட்டாள்.

அவள் பேசியதைக் கேட்டும், தலைவனின் நம்பிக்கை குறையவில்லை. எப்படியாயினும் தலைவியை இனிமையாகப் பேசச் செய்யவேண்டும் என்று உறுதி கொண்டிருந்தான். தலைவியின் மார்பில் தாய் எழுதிய தொய்யில் விளையாட்டு ஆர்வத்தில், வியர்வையால் சிறிது அழிந்து இருந்ததனைக் கண்டான். அதனைச் சீர்செய்ய உதவிக்கு வரவா? என்றான். என் வயதுப்பெண்கள் தாய் எழுதுகின்ற தொய்யிலை விட, கணவன் அன்புடன் எழுதுகின்ற தொய்யிலையே மிகவும் விரும்புவார்கள். நீ என்னைத் திருமணம் முடித்திருந்தால், எனக்குத் தொய்யில் எழுதி அழகு பார்ப்பதும், அதனால் நான் மகிழ்வதும் சிறப்பாக அன்றாடம் நிகழ்ந்திருக்கும். ஆனால், நீயோ திருமணத்தைக் குறித்து சிந்திப்பதாக இல்லை. எனது தாய் எழுதிய தொய்யிலைச் சீர்செய்ய வரவா? என்று கேட்பதும் உனக்குச் சிறப்பாகுமா? என்று அவனிடத்தில் கேட்டாள்.

**தலைவியின் அறிவுறுத்தல்**

தலைவியின் வார்த்தைகளைக் கேட்ட தலைவன் உள்ளம் வாடி, அந்த இடத்திலிருந்து நகர்ந்து சென்றுவிட்டான். இன்றும் அவன் தனக்கு நம்பிக்கை தருகின்ற வார்த்தைகளைக் கூறாமல் சென்றது தலைவியின் மனவருத்தத்தை மேலும் அதிகரித்தது. தனது மனநிலையை அவனுக்கு முழுமையாக உணர்த்தி, காதலை, திருமணவாழ்க்கையாக மலரச்செய்வதற்குரிய துணையாகத் தோழியை நினைத்தாள். அவளிடத்தில், காதல் பற்றிய கொதிப்பையும், திருமணம் குறித்த தவிப்பையும், தலைவனின் மனநிலையினையும் எடுத்துரைத்தாள். தனது காதல், திருமணத்தில் நிறைவு பெற்றால் மட்டுமே தன்னால் உயிர் வாழமுடியும் என்பதனையும், தலைவன் விரும்புவதைப்போல, காதலியாக இருந்து இனியும் தன்னால் காலத்தைக் கடத்திக்கொண்டிருக்க முடியாது என்றும் கூறினாள். தனது காதலுக்கு எந்நேரத்திலும் தீங்கு நேரலாம் என்பதால், தலைவன் தன்னை விரைவிலேயே திருமணம் முடித்துக்கொள்ளவேண்டியதன் அவசியத்தைத் தோழி மூலமாக வலியுறுத்த நினைத்தாள். அதற்காக, முல்லை நில வழக்கப்படி, வலிமையான காளைகளை அடக்கித் தலைவன் தன்னை மணக்க வேண்டும் என்பதை, அவனுக்கு அறிவுறுத்துமாறு தோழியிடம் வேண்டினாள்.

தலைவனையே கணவனாக அடையத் துடிக்கின்ற தலைவியின் காதல் சிறப்பும், குடும்ப வாழ்க்கையை ஏற்று வாழ அவள் கொண்டுள்ள மனஉறுதியும் இப்பாடலில் உணர்த்தப்பட்டுள்ளன.

## 7. அகநானூறு

**கூற்றுவிளக்கும்**

காதல் விளக்கம் பல்வேறு இடையுறுகள் காரணமாகத் தலைவி தலைவனைக் காணாது உடல் மெலிந்து ஆற்றாத வருந்தி இருந்தாள். அதுகண்ட செவிலித்தாய் தலைவியின் உடல் வேறுபாட்டுக்குரிய காரணத்தைத் தோழியிடம் வினவுகிறாள். தோழி தலைவியின் திருமண விருப்பத்தினைச் செவிலிக்குக் குறிப்பாக அறிவுறுத்திக் கூறுகிறாள்.

**அறத்தொடுநிற்றல்**

தலைவன் –தலைவியரிடையே தோன்றிய காதல் வாழ்வில் பிழைநேராமல் இருக்கத் திருமணம் நிகழ்தல் பொருட்டு தன் வீட்டாரிடம் ஒப்புதல் பெறத் துணிவாள். இவ்வாறு தலைவி தன் திருமண விருப்பத்தைத் தோழியிடம் முதலில் கூறுவாள். தோழி அச்செய்தியைத் தன் தாய் செவிலியிடமும், செவிலி தலைவியின் தாயாகிய நற்றாயிடமும், நற்றாய் தனது கணவர் முதலிய சுற்றத்தாரிடமும் முறையாக வெளிப்படுத்துவர். இவ்வாறு காதல் வாழ்வு திருமணவாழ்வாக மாறவேண்டியது அறமாகும். ஆகவே அதனை உரியவரிடம் உரிய நேரத்தில் உரியவகையில் வெளிப்படுத்தும் செயல் அறத்தொடுநிற்றல் எனப்படும்.

நமது பாடப்பகுதியில் உள்ள அகநானூற்றுப் பாடலானது, தலைவியின் திருமண விருப்பத்தினைத் தோழி தன் தாய் செவிலியிடம் எடுத்தியம்புவதாக அமைக்கின்றது. அப்பாடல் விளக்கத்தினைப் பின்வருமாறுகாண்போம்.

தலைவியின் உடல் மெலிற்கான காரணத்தைத் தோழியிடம் செவிலி வினவுகின்றாள். அதற்கு தோழி கீழ்க்காணுமாறு பதில் உரைக்கின்றாள். அன்னையே வாழ்வாயாக! நான் கூறுவதை விரும்பிக் கேட்பாயாக! நின் மகள் பாலையும் பருகாள். துன்பமுற்று மேனியும் மிகவும் பசந்து இளைத்துள்ளாள் என நீ வினவுகின்றாய். அதற்குரிய காரணத்தையானும் தெளிவாக அறியேன். முன்பு ஒருநாள் பகற்பொழுது மாய்ந்து சூரியன் மறையும் அந்திமாலைப் பொழுதிலே, தழைத்த கிளைகளையுடைய வேங்கையின் பூக்களைப் பறிப்பதற்காக, என் தோழிய தொடுபூக்கள் நிறைந்த மலைச் சாரலுக்குச் சென்றோம். அப்போது ‘புலி,புலி’என்னும் ஆரவாரம் எங்களிடையே ஏற்பட்டது. அச்சமயம் அங்கு ஒரு மலைநாட்டு ஆண்மகன் தோன்றினான்.

அவன் மகளிர் கண்களைப் போன்ற ஒளிபொருந்திய அழகிய செங்கழுநீர்ப் பூக்களை ஊசியாற் கோத்துச் சுற்றிக் கட்டின மாலையை அணிந்திருந்தான். வெட்சிப் பூவாலான கண்ணியைத் தலையின் ஒருபக்கத்தே சூடியிருந்தான். மார்பில் சிவந்த சந்தனத்தைப் பூசியிருந்தான். வரிந்த கட்டிய வில்லினையுடையவனாய், ஒப்பற்ற அம்பினை ஆய்ந்து கைக் கொண்டு, அப்புலி எவ்வழியாகச் சென்றது என்று வினவி நின்றான். நாங்கள் அவனைக் கண்டுநாணி, எங்களுள் ஒருவர் முதுகிற்குப் பின் ஒருவர் மறைந்து, ஒடுங்கி நின்றோம்.

ஐவகையாக நெய் பூசப்பட்ட கரிய கூந்தலினையுடைய அழகிய நெற்றியினையும் உடைய மகளிர்களே! உங்கள் வாயில் பொய்ச் சொற்களும் பிறக்குமோ? என்று அவன் வினவினான். பின்புமலை நாட்டிற்குரியவனாகி அவன் குதிரைகளின் வேகத்தை அடக்கித் தனது தேரினை மெதுவாகச் செலுத்தினான். வந்தவழிச் சென்றவன் நின் மகளது மைபூசப்பட்ட கண்களையே எதிர்மறுத்துப் பலமுறை நோக்கிச் சென்றான். தலைவி அவன் சென்றுமறையும் திசையை நோக்கித் தோழியே‘இவன் ஓர் சிறந்த ஆடவனே’என்றாள். ஆராய்ந்து காணும் அறிவுடையோர்க்கு அவள் இப்படிக் கூறியவார்த்தையின் பொருள் புலப்படும் என்று தோழி செவிலிக்கு உரைத்தாள்.

## 8. புறநானூறு

**பாடல்: 1, யாதும் ஊரே; யாவரும் கேளிர்…, திணை: பொதுவியல்,**
**ஆசிரியர்: கணியன் பூங்குன்றன். துறை: பொருண்மொழிக்காஞ்சி**

அனைவரையும் உறவாக, அனைத்து ஊரையும் தன் ஊராகக் கருதுகின்ற சகோதரத்துவத்தை இப்பாடல் உணர்த்துகிறது.

**உயர்ந்தோரும் இல்லை; தாழ்ந்தோரும் இல்லை:**

இவ் உலக வாழ்க்கை அவரவரின் விதிப்படி நடப்பது. மழை வெள்ளம், பெரும் பாறைகளைப் பெயர்த்துக் கொண்டு பேரியாறு எனப் பெருகிவருகின்றது. ஓடம், அந்த

ஆற்றின் ஓட்டம் செல்லுகின்ற திசையில் இயல்பாகப் பயணிக்கும். அதுபோலவே, மனிதர்களாகப் பிறந்த அவரவரும், தமக்கு வாய்த்த விதிவழியே தமது வாழ்க்கையைச் செம்மையாக நடத்துகின்றனர். ஆனால், வாழ்கின்றபொழுதில், வாய்ப்பும், வெற்றியும், வசதியும் அமைந்த சிலர், பிறரை ஏளனமாகப் பார்த்து இகழ்வதும், பிழைக்கத்தெரியாதவர்கள் என்று தூற்றுவதும் வாழ்வியல் நடைமுறையாக உள்ளது. ஆனால், இயற்கை வெற்றி பெறுவோரை, உயர்ந்தோர் என்றும், பிறரைக் கீழானோர் என்றும் ஒதுக்குவதில்லை. எனவே, நமது சுற்றுப்புறத்தில் உயர்ந்தோர் என்று சிலரைப் போற்றுவதும், சிலரைக் கீழானோர் என்று இகழ்வதும், இயற்கைக்கு மாறானது. இயற்கைக்கு மாறான அச்செயலால், சமுதாயத்தின் அமைதியே குறையும்.

சமுதாயத்தில் அன்பும் அமைதியும் நிலவ, அவரவரும் தமது வாழ்க்கைக்குப் பொறுப்பானவர்கள் என்பதையும், அவரவரும் தமது வாழ்க்கையைத் தங்களது நிலையிலிருந்து சிறப்பாக வாழ்கிறனர் என்பதையும், சமுதாயத்தில் எவரையும் உயர்த்தியும், தாழ்த்தியும் பேசுகின்ற உரிமை எவருக்கும் இயற்கையால் வழங்கப்படவில்லை என்பதையும் உணரவேண்டும். அவ்வாறு எண்ணுகின்றபொழுதில், அனைவரிடமும் உள்ள நிறைவை மட்டுமே நம்மால் பார்க்க இயலும். 'குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை' என்கின்ற பரந்துபட்ட பார்வையுடன் குறைகளையும் நிறைகளாகக் கொண்டு, அனைவரையும் உறவாகக் கருதத் தோன்றும். அப்பொழுது, அனைத்து ஊரும் நமது ஊராகவே தோன்றும்.

**அனைவரும் வாழட்டும்:**

அனைவரையும் உறவாகக் கருதத் தொடங்கினால், பிறருக்காக வாழ்கின்ற பண்பாடும் நம்மிடத்தில் மலரும். நாம் பிறருக்காக மட்டுமே வாழவேண்டும் என்று உணரும்போது, நமக்கென்று தனிப்பட்ட நன்மை, தீமை என எதுவும் இல்லை என்று வாழ்வோம். நம்மால் நன்மை, தீமை உணரப்படுவனவற்றுக்கு, நாமே பொறுப்பு எனப் பொறுப்பு ஏற்கத் தோன்றும். வெற்றி பெற்றால், என்னால் மட்டுமே ஏற்பட்டது என்று மகிழ்வதும், தீமை ஏற்பட்டால் பிறராலேயே ஏற்பட்டது என்று பிறரைக் குறைகூறுவதும் அழகல்ல என்று சிந்திப்போம். அத்துடன், வெற்றியால் மகிழ்வதும், தோல்வியால் துன்பமடைவதும் அறிவற்ற செயல் என்பதை உணரஇயலும். வெற்றி, தோல்வி ஆகிய இரண்டையும் ஒன்றாகவே பார்க்கப் பழகினால், நாம் வாழவேண்டி பிறரை வீழ்த்துகின்ற கேவலமான செயலை நாம் செய்யமாட்டோம். அவரவரின் வாய்ப்புகளுடன், அவரவரும் அமைதியாக வாழட்டும் என்று அனைவரின் நன்மைக்காக மட்டுமே தன்னலமின்றிச் செயல்படுவோம். பிறருக்காக வாழ்ந்தோம் என்கின்ற மனநிறைவு, நமக்கு மரணத்தைக் கண்டும் அஞ்சாத மனஉறுதியைத் தரும். அத்தகைய மனஉறுதியால், உலகில் பிறந்தோர் இறப்பது உறுதி என்னும் இயற்கைத்தத்துவத்தை நம்மால் உணரஇயலும்.

இயற்கையின் நியதிப்படி, விதி வழியே பிறந்து வாழ்கின்றபொழுதில், இயற்கையை ஒட்டி அனைவருடனும், அன்பாகவும் அமைதியாகவும் வாழலாம். அப்பொழுது, 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்று மகிழலாம்.

**பாடல்: 2, கெடுக சிந்தை; கடிது இவள் துணிவே…, திணை: வாகை,**
**ஆசிரியர்: ஒக்கூர் மாசாத்தியார். துறை: மூதின் முல்லை**

பெண்ணின் தியாகம், வீட்டைக் காக்கின்றது. அவளது வீரம் மிக்க மனஉறுதி, நாட்டையும் காக்கவல்லது. சங்கத் தமிழ்ப் பெண்கள், தன்னலமற்ற வீரத்தாலும் சிறப்புற்றிருந்ததை இப்பாடல் உணர்த்துகிறது.

வீரப் பெண்ணொருத்தி, மிகுந்த மனஉறுதியும் உடையவளாக இருந்தாள். தன்னலம் இல்லாத அவளது வீரத்தால், தாய்நாட்டுக்குப் பெருமை ஏற்பட்டது. அவளது வீரத்தையும், அதை வெளிப்படுத்திய நிலையும் நினைத்துப்பார்க்கவும் முடியாததாக உள்ளது. எப்படி இவ்வாறு அவளால் துணிச்சலாகச் சிந்திக்க முடிந்தது?; எப்படி அவளால் தனது முடிவைத் தெளிவாகச் செயல்படுத்த முடிந்தது? என்றெல்லாம் எண்ணத் தோன்றுகிறது. இவள் வீரப்பெண் என்றும், தனது வீரத்தால் நாட்டையே வாழ வைத்தவள் என்றும் போற்றுவது மிகவும் பொருத்தம் உடையதாகும்.

முதல்நாள் போரில் இவளது தந்தை, யானையைக் கொன்று வீரமரணம் அடைந்தார். அதை எண்ணி அவள் பெருமிதம் கொண்டாள். மறுநாள் நடந்த போரில், பசுக்கூட்டங்களைக் காத்தலாகிய கரந்தைப் போரில் இவளது கணவனும் இறந்துபோனான். நாட்டுக்கு நன்மை சேர்த்து வீர மரணம் அடைந்த அவனது இறப்பையும் அவள் பெருமையுடையதாக ஏற்றுக்கொண்டாள். தன்னை ஆதரிப்பவர்களது மரணம் அவளைக் கலங்கச் செய்யவில்லை. அத்துன்பத்தையும் அவள் தனது மன உறுதியால் வென்றாள். நாட்டுக்கு நன்மை செய்வதற்கு மேலும் வாய்ப்பு அமைவதையே சிறப்பாகக் கருதினாள். அத்தகைய பெருமித உணர்வுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில் மறுநாள் பொழுது விடிந்தது. நாட்டின் வீரவரலாற்றில் தானும் இடம்பெறப்போவதை அறியாத அவள் மகன் தெருவில் விளையாடி மகிழ்ந்திருந்தான். அவ்வேளையில், போர்ப்பறை அதிரக் கண்டு அவன் தாய் மிகவும் மகிழ்ந்தாள். நாட்டுக்கு உழைக்க, மகனைப் போர்க்களத்துக்கு அனுப்ப முடிவுசெய்தாள். அவனோ, தலைமயிருக்குத் தானாக எண்ணெய் தேய்த்துக்கொள்ளவோ, தனது ஆடையினைத் தானே உடுத்திக்கொள்ளவோ அறியாதவன். அவ்வாறு மிகவும் சிறியவயதே உடையவன். ஆயினும், சிறு தீப்பொறியும் பெருங்காட்டையும் சுட்டெரிக்கும் வீரத்துக்குச் சான்றாக வளர்க்கப்பட்டவன். அத்தகைய வீரமகனை, தாய் வீதியிலிருந்து அழைத்தாள். அவனுக்கு வெள்ளை உடை அணிவித்து, தலைக்கு எண்ணெய் தடவி, வீரவேல் கொடுத்துப் போர்க்களத்துக்கு அனுப்பினாள். தனது வாழ்வைக் குறித்துச் சற்றும் சிந்திக்காத அவள், தனது மகனே தனக்கு ஆதரவு என்பதையும் குறித்துச் சிந்திக்கவில்லை. அவன் மட்டுமாவது தனது குடும்பத்தின் வாரிசாக உயிர்ப்பிழைத்திருந்து, தன்னைக் காக்கவேண்டும் என்னும் தன்னலம் அவளிடத்தில் இல்லை. தனது குடும்பம் முழுவதையும் நாட்டுக்காகத் தியாகம் செய்கின்ற பொதுநலமே அவளிடத்தில் அமைந்திருந்தது. நாட்டுக்காக மகனையும் தந்த அவள், தானும் போர்க்களம் புகுந்து உயிர்விடவும் தயங்கியிருக்கமாட்டாள். அவளது தலைசிறந்த வீரமே, 'மூதின்முல்லை' என்று போற்றப்படுகிறது.

## ஆ) **பத்துப்பாட்டு**

### திருமுருகாற்றுப்படை

**முருகன் இருப்பிடங்கள்**

ஒவ்வொரு குன்றிலும் இல்லாமல் ஒவ்வொரு ஊரிலும் முருகனுக்குக் திருவிழா நடைபெறும். மலையில் கிடைக்கும் தினை அரிசியால் செய்த பிரப்பரிசியை மலர்களுடன் விரவி, ஆடடுக்குட்டியை அறுத்து, அதையும் விரவி, கோழிக்கொடியை நிறுத்தி, ஒவ்வொரு ஊரிலும், முருகனுக்கு திருவிழாக் கொண்டாடுவர்.

**குறமகளின் வெறியாட்டு**

முருகன் மீது பற்றுள்ளவர்கள், அவனைப் புகழ்ந்து நினைக்கும் போது, அவர்கள் உள்ளங்களிலும் அவன் இருப்பான். முருகனைத் தன்பால் கொள்ளும் வேலன் இயற்றுகின்ற வெறியாடுகின்ற களத்திலும் அவன் இருப்பான். காடுகளிலும், சோலைகளிலும் அழகு பொருந்திய ஆற்று இடைக்குறைகளிலும், ஆற்று இடங்களிலும் குளங்களிலும், வேறுபல இடங்களிலும் நான்கு வீதிகள் சந்திக்கின்ற சதுக்கத்திலும் சில வீதிகள் சந்திக்கின்ற சந்தியிலும், கடம்ப மரத்தின் அடியிலும் பொது மன்றத்திலும் இறைவனுக்குக் குறியாக நடப்பட்ட கந்து எனக் கூறப்பெறும் கல்நிலைம் அவனுக்கு வழிபாடு நடைபெறும்.

குறமகள் மலைமீதுள்ள முருகன் கோவிலில் வழிபாடு செய்கின்றாள். முதலில் பெருமைபடத்தக்க முருகனுக்குரிய சேவல்கொடியை ஏற்றுகின்றாள். அதனுடன் அதற்குரிய அலங்காரங்களையும் செய்கின்றாள். கோவில் வாயிலில், நெய்யையும் வெண்சிறு கடுகையும் சேர்த்து அப்புகின்றாள். இறைவனை மென்மையாக அவன் நாமத்தை உரைத்து, இருகைகளையும் இணைத்து வழிபடுகின்றாள், வளமான செழுமையான மலர்களைச் சிதறுகின்றாள். அவள் நிறங்கள் முரண்பட்ட இரண்டு உடைகளையு உடுத்தியிருக்கின்றாள். கையில் காப்பாகச் சிவந்த நூலைக் கட்டியிருக்கின்றாள். வெண்மையான பொரியைச் சிதறுகின்றாள். வலிமை வாய்ந்த ஆட்டுக்கிடாயின் இரத்தம் கலந்த தூண்மையான, வெண்மையான அரிசியைப் பலியாக பல இடங்களில் வைக்கின்றாள். அதைப் பிரப்புஅரிசியாக்கி வைக்கின்றாள். சிறு பசுமஞ்சளையும் நல்ல மணப்பொருட்களையும், பல இடங்களில் தெளிக்கின்றாள். செவ்வரளி மாலையை ஒரே சீராக நறுக்கி, சுற்றிவர தொங்கவிட்டிருக்கின்றாள். செறிவான மலைப்பக்கங்களிலுள்ள நல்ல ஊர்களில் எல்லாம் வாழ்த்திப்பாடுகின்றனர். மணப்புகையை எடுக்கின்றனர். குறிஞ்சிப்பண்ணிலே பாடுகின்றனர். ஒலிக்கின்ற மலையில் இருந்து விழும் அருவியோடு இனிய ஒலிக்கருவிகளை இசைக்கின்றனர். பலவடிவமான அழகான பூக்களைத் தூவுகின்றனர். பார்க்கின்றவர்கள் அஞ்சும் நிலையில் இரத்தத்தோடு கலந்த தினை அரிசியைப் பரப்பிவைத்துள்ளனர். குறமகள் முருகனுக்கு விருப்பமான வாத்தியங்களை துடி, தொண்டகம், சிறுபறை போன்றவற்றை இயக்குகின்றாள். மாறுபட்டஉள்ளம் உடையவர்களும் அஞ்சும்படியாக அச்சூழ்நிலை அமைகின்றது. இவ்வாறு முருகனிடம் வழிபடுத்துகின்ற அழகு பொருந்திய அகன்ற ஊரில் உள்ள கோவில் அமைகின்றது.

**முருகனை வழிபடுதல்**

மலையில் வெறியாடுகின்ற இடத்தில் எதிர் ஒலிக்கும்படி முருகன் புகழைப்பாடிக் கொம்புகளை ஊதி மணிகளை ஒலிக்கச்செய்து கெடாத வலிமையை உடைய யானையை(மயிலை)வாழ்த்தி வேண்டுகிறவர்களுக்கு அவர்கள் விரும்பியதை எல்லாம் தருகின்ற நிலையில் அவனை வழிபடலாம். அவன் அந்தந்த இடங்களில் இருப்பான்.

**முருகன் அருள்புரிதல்**

நீ எங்கெங்குக் காண்கிறாயோ அங்கங்கெல்லாம் அவனைக் கண்டவுடன் அவனுடைய மனம் மகிழும்படியாகப் புகழ்ந்து கையால் தொழுது அவன் காலில் விழுந்து, வணங்குக. நீண்ட பெரிய இமயமலையில் தருப்பைகள் மிகுதியாக வளர்கின்ற சரவணப் பொய்கையில் ஐம்பூதங்களுள் ஒருவனாகிய அக்கினி சிவன் நெற்றிக்கண்ணால் வெளியிட்ட ஆறு பொறிகளையும் சுமந்து சரவணப்பொய்கையில் விட்டான். அந்த ஆறு பொறிகளும், ஆறு குழந்தைகளாக மாறின. அக்குழந்தைகளை ஆறு கார்த்திகைப் பெண்டிர் வளர்த்தனர். ஆதனால் அறுவர் பயந்த ஆறு அமர்செல்வ என்று அழைக்கப்பெற்றான். கல்லால மரத்தின்கீழ் இருந்து தட்சிணமூர்த்தி வடிவில் சிவன் உபதேசித்தான். அவன்புதல்வன், முருகன், இமவான் மகளாகிய

பார்வதியின் மகன். பகைவர்களுக்கு எமன் போன்றவன். போரிலே வெற்றிபெறுகின்ற ஆற்றலையுடைய சக்தியின் புதல்வன். பல அணிகளை அணிந்த சிறப்பினையுடைய சக்தியின் குழந்தை. அசுரர்களை வெல்ல அசுரர்களுக்கு உதவியதால் வானோர் அனைவரும் வணங்குகின்ற வில்படையை உடைய தலைவன், மார்பிலே மாலையை அணிந்துள்ளவன். எல்லா நூல்களையும் கற்றுத்தேர்ந்த புலவன். போர்க்களத்தில் ஒப்பற்றவீரன். பொருவதில் வெற்றி பெறுகின்ற வீரன். பண்புடைய அந்தணர்களுக்குச் செல்வம் போன்றவன். அவனை அறிந்தவர்கள் சொல்மாலையால் அவனைப் புகழ்வார்கள். தேவயானை, வள்ளி இவர்களின் கணவன், இளைஞர்களுக்கெல்லாம் தலைவன் போன்றவன் வேலைத் தன் பெரிய கையில் வைத்திருக்கின்ற எல்லா வளங்களையுமுடைய செல்வன். கிரௌஞ்ச மலையினைக்கொன்று வென்ற குறையாத பெருமையுடையவன். வானத்தை முட்டுகின்ற உயர்ந்த பெரியமலைகளிலே இருக்கின்ற குறிஞ்சி நிலத்தலைவன், உலகிலுள்ளோர் எல்லா மொழிகளிலும், புகழுகின்ற புகழுக்கெல்லாம் தலைவன் பெறுதற்கரிய பரம்பரையினையுடைய சிறந்த புகழினைப் பெற்ற இளைஞன், அழகன், அதனால் முருகன் என்ற பெயரைப் பெற்றவன். அவனை விரும்பிச் செல்கின்றவர்களுக்கு வேண்டியனவெல்லாம் தரும் கொடையால் புகழ் பெற்றவன். இல்லாதவர்களுக்குக் கொடுக்கின்ற பொன் ஆபரணங்களை அணிந்து சிவந்தவன். போர்க்களத்தில் வென்று பலரையும் கொன்ற பரந்த மார்பால், பரிசு பெற வருகின்றவர்களையெல்லாம் தாங்குகின்ற பிறருக்கு அச்சத்தை தருகின்ற தலைவன். பண்பால் பெரியவர்கள் ஏத்தும் தலைவன். சூரபன்மனின் வலிமையை அழித்து அவனை வென்ற ஆற்றல் உடையவன். போரில் வல்லவன், தலைவன் என்று பல வகைகளில் நான் அறிந்து கூறியநிலையில் அவனைத் துதித்து வணங்குக.

சென்ற புலவன் தான் கருதி வந்த கருத்தை முருகனிடம் கூறுகின்றான். உன்னை அளந்து அறிதல் என்னைப் போன்ற சாதாரண மனிதர்க்கு மிகவும் கடினமானது, எளிது அன்று. உன்னுடைய திருவடிகளை நினைத்து, உன்னைக் காண்பதற்காக வந்தேன். உன்னைப் போன்று ஒத்தோர் இவ்வுலகில் இல்லை என்று நீ நினைத்ததைக் கூறும் போது அத்திருவிழாக்கூட்டத்தில் இருக்கின்ற ஏவலாளர்கள் முருகனிடம் நேரே உன்னைப்பற்றிக் கூறுவர். இந்த முதியவன் நும்மைநோக்கி வந்துள்ளவன். இரங்குவதற்குரியவன். உன்னுடைய புகழை நயந்து வந்துள்ளான் என்று, இனிய சொற்களையும் நல்ல சொற்களையும் கூறுவர்.

முருகன் தோன்றுவான். தெய்வத்தன்மையுடன் தன்னுடைய ஆற்றலுடன், பெரிய ஊருடன் வானைத் தொடும் உயரத்தில் வருவான். ஆனால் பிறர் அஞ்சுதல் கூடாது என, தன்னுடைய அழகிய இளமையான பழைய வடிவில் தெய்வத்தன்மையோடு வருவான். நீ அஞ்சவேண்டாம். உன்னைப் பாதுகாப்பேன், உன்னுடைய வருகையை நான் அறிவேன் என்று அன்பான சொற்களைச் சொல்லி அழிவில்லாமல் இந்த இருள் சூழ்ந்த உலகத்தில் நீ ஒப்பற்றவனாக வாழ அருள்புரிவோம் என்று கூறி, பிறப்பறுத்தல் என்று பெறுதற்கு அரிய பரிசிலை நல்குவான்.

**பாட நூல்: கற்பகச்சோலை – தமிழ் ஏடு.**

கற்பகம் உயர்கல்வி கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு.

## இன்றியமையாத வினாக்கள்

## இரு மதிப்பெண் வினாக்கள்

1. தமிழச்சியின் வீரத்தைப் புறநானூறு வழியே சுட்டுக.
2. 'புகையுண்டு அமர்த்த கண்ணள்' - இடம் சுட்டிப் பொருள் தருக?
3. 'தீதும் நன்றும் பிறர் தர வாரா'- விளக்கம் தருக?
4. "மானுண்டு எஞ்சிய நீர்" இனித்ததைத் தலைவி கூற்று வழியே சுட்டுக.
5. செங்குட்டுவனுக்குக் கண்ணகி காட்சியளித்த நிலையினைக் குறிப்பிடுக.
6. விருந்து வாயிலாகப்புக்க தலைவன் சொல்லியதை நற்றிணைப் பாடல் வழி விளக்குக.
7. அன்னாய் வாழிப் பத்தில் கபிலர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.
8. வையை ஆற்றின் சிறப்பினைக் கூறுக.

## பெரு வினாக்கள்

1. கலித்தொகைப் பாடல் செய்திகளைத் தொகுத்துரைக்க.
2.முருக வழிபாட்டுச் சுவடுகளைத் திருமுருகாற்றுப்படை வழியே விவரி.
3. பாடப்பகுதியில் காணலாகும் புறத்திணைப் பாடல் செய்திகளைத் தொகுத்துரைக்க?
4. தலைவன் தலைவியின் அகவாழ்வியலைக் கலித்தொகை வழிஆராய்க?
5. புறநானூற்றுப் பாடல் செய்திகளைத் தொகுத்துரைக்க?
6. மதுரையின் சிறப்புகளை பரிபாடல் வழி விளக்குக.
7. மதுரை மாநகர்ச் சிறப்பினை விவரி.
8. பழமுதிர்ச்சோலை முருகப் பெருமானின் திருவருள் சிறப்பினைக் கட்டுரை வரைக.
9. நற்றிணைத் தலைவியின் மாண்புகளைக் குறிப்பிடுக?
10. தமிழரின் வீரவாழ்வியலைச் சங்கப்பாடல்களின் மூலம் ஆராய்க?
11. அறுபடைவீடுகளின் சிறப்புக்களைத் திருமுருகாற்றுப்படை வழி நிறுவுக?

# UNIT-III

## SYLLABUS

**அலகு - III : காப்பியம் : 1. சிலப்பதிகாரம் - மங்கல வாழ்த்துப் பாடல் – நடுகற்காதை – வாழ்த்துக்காதை - வழக்குரை காதை – வஞ்சினமாலை, 2. சூளாமணி: மந்திர சாலைச் சருக்கம் -**

## காப்பியம்

1. **சிலப்பதிகாரம்:**

**மங்கல வாழ்த்துப் பாடல்: (21-29) – கண்ணகியின் சிறப்பு:** ‘நாகநீள் நகரொடு’ என்பதிலிருந்து தொடங்கி, ‘கண்ணகி என்பாண் மன்னோ’ என்பது வரையிலான தொடர்கள்.

**நடுகற்காதை: (207-234) - சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எடுத்தல்:** ‘அருந்திறலரசர்’ என்பதிலிருந்து தொடங்கி, ‘மன்னவரேறென்’ என்பது வரையிலான தொடர்கள்.

**வாழ்த்துக்காதை: (482-485) - செங்குட்டுவனுக்குக் கண்ணகி காட்சியளித்தல்:** ‘என்னே’ என்பதிலிருந்து தொடங்கி, ‘விசும்பில் தோன்றுமால்’ என்பது வரையிலான தொடர்கள்.

**வழக்குரை காதை: பத்தினிப் பெண்டிர் எழுவர் கதை:** ‘நீர்வார் கண்ணை’ என்பதிலிருந்து தொடங்கி, ‘புகாரென் பதியே’ என்பது வரையிலான தொடர்கள்.

**வஞ்சினமாலை:** ‘வன்னி மரமும்’ என்பதிலிருந்து தொடங்கி, ‘பதிப்பிறந்தேன்’ என்பது வரையிலான தொடர்கள்.

2. **சூளாமணி:**

**மந்திர சாலைச் சருக்கம்** (தேர்ந்தெடுக்கப்பெற்ற 25 பாடல்கள்)

# 1. சிலப்பதிகாரம் -இளங்கோவடிகள்

**கண்ணகி அறிமுகம் (கண்ணகியின் சிறப்பு)** :-

சுவர்க்கத்தினும் மேலான சிறப்புக்களையுடைய நாகலோகத்தில் உள்ள நாகநாட்டிற்கு இணையான, நிலைத்தப் புகழை உடையது புகார் நகரம். அந்நகரில் மழைமேகத்தை ஒத்த கொடைவண்மை உடைய மாநாய்கன் என்பானது மகள், 12 வயதுடையவள். அவள் திருமகளை ஒத்த வடிவத்தை உடையவள், அருந்ததியை ஒத்த கற்புத்திறத்தை உடையவள். உலகினா் புகழும்படியான பெருங்குணத்தை உடைய அவளது பெயா் கண்ணகி என்பதாகும்.

**சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எடுத்தல் :**

**1. கற்புடைப்பெண்களே! பொற்புடைச் செல்வம் :** நாடாளும் மன்னன் நீதிநெறி தவறாது அரசாண்டால் மட்டுமே, பெருமைக்குரிய பெண்களின் கற்புத்திறம் சிறப்புடையதாகத் திகழும் என்பது முன்னோா் கூற்று. பூவுலகினா் போற்றும் பெருமையை உடையவள் கற்புடைச் செல்வி கண்ணகி. ஆதலின்,ஆத்திமாலை சூடிய ஆரசாளும் மன்னனுக்கு அத்தமிழ் உரை அறியச் செய்து செங்கோல் தவறினால் தன் உயிா் மாய்த்துக் கொள்ளும், தென்னாட்டு ஆட்சிக் காவலைப் பாண்டியனுக்குத் தந்து,

**2. கோட்டமும் கோயிலும் கும்பிடச் சிலையும் :** வீரமிகு அரசா்கள் தாம் உரைத்த சூளுரை நிறைவேறிய பின்னரே தங்கள் கோபத்தை விடுவா் என்பதை வடநாட்டு ஆரிய அரசா்கள் அறியச் செய்த, குடதிசைக் கோமான் சேர வேந்தனுக்குத் தந்து,மதுரை மாநகரம் அழிய,கோபக்கனல் பறக்கத் தன் மாா்பைப் பிய்த்தெறிந்துவிட்டு, தம்முடைய நாட்டுக்கு வந்து, குளிா்ந்த தளிருடைய கிளையோடு கூடிய பொன்மலா் பூக்கும் வேங்கை மரநிழலில், வந்து நின்ற பெண்ணுக்கு, அந்தணா், ஆசான், நிமித்திகன், சிற்பிகளோடு சென்று, வானவா்களும் விரும்பும் சிற்ப நூல் வல்ல கலைஞா்களால் சிறப்புறக் கட்டி முடிக்கப் பட்ட. பத்தினிக் கோட்டத்தில் வானவா் வாழும் இமய மலை உச்சியிலே எழுந்தருளியிருக்கும் கடவுளைப் போற்றி வணங்கி, சிற்பத்திறன் மிகுந்த வல்லுநா்களால் வடிவமைக்கப்பட்ட தெய்வத்திருவுருவை, கைத்தொழில் தோ்ந்தவா்கள் செய்த அணிகலன்கள் எல்லாம் சாத்தி விழாவும் வேள்விகளும் நடத்தி பிரதிட்டை செய்தான். வட நாட்டு மன்னா்கள் எல்லாரும் வணங்கிய பெரும் பெயா்ப் புகழ்ச் சேர வேந்தன் செங்குட்டுவன்.

**செங்குட்டுவனுக்குக்குக் கண்ணகி காட்சியளித்தல் (கண்ணகி தோன்றினாள்):** -‘‘என்ன அதிசயம்? இது என்ன அதிசயம்? ஆதிசயத்திலும் இது பேரதிசயமாக அல்லவா உள்ளது! பொன்னாலான சிலம்பும், மேகலை பூட்டிய இடையும், வளையல் அணிந்த கையும், நல்ல வயிரம் பதித்த பொன் தோடும், இன்னும் பொன்னாலான பல அணி மணிகளையும் சூடிய மின்னல் கொடி போலும் ஒரு பெண் உருவம் விண்ணில் தெரிகின்றதே’’ என்றான்.

**பத்தினிப் பெண்டிா் எழுவா் கதை, மன்னவன் வினாவும் கண்ணகி விடையும் :** -வாயில் காப்பவன் வந்து கண்ணகியை அரசன்முன் அழைத்துப் போய் நிறுத்திக் கண்ணகி அரசனைச் சென்று கண்டாள், தன் முன் அழுத கோலத்துடன் நிற்கும் கண்ணகியைப் பாா்த்த பாண்டியன், கண்ணீா் சிந்திக் கலங்கி என் முன் வந்து நிற்கும் பெண்ணே நீ யாா் எனக் கேட்டான். ஆராய்ந்து அறியாத மன்னவனே, நான் யாா் என்று சொல்கிறேன், கேட்டுக் கொள்வாயாக. போற்றக் கூடிய பெருமை உடைய விண்ணவா்களே கண்டு வியக்கின்ற சிறப்புடைய, ஒரு புறாவுக்கு உற்ற துன்பத்தைப் போக்கிய சிபி சக்கரவா்த்தியும், அரண்மனைவாசலில் கட்டிய ஆராய்ச்சி மணியின் நாக்கு நடுங்க, ஒலிஎழுப்ப,கண்ணின் கடைமணியில் கண்ணீா் வடிய நின்ற பசுவுக்கு உண்டான

துன்பத்தைப் போக்குவதற்காகத் தன்னுடைய அருந்தவப் புதல்வனைச் தேர்ச்சக்கரத்தின் கீழ் கிடத்திக் கொன்ற மனுநீதிச்சோழன் போன்ற பெருமைக்குரியவர்களும் ஆண்ட புகழ்மிக்க பேரூர் -பூம்புகார். பெருமை மிகு அப்புகாரில் பிறந்தவள் நான். அவ்வூரில் வாழந்த, குறையில்லாத சிறப்புடைய, மாசாத்துவான் எனும் பெருங்குடி வணிகனின் மகனாகப் பிறந்து, பொருளீட்டி வாழவேண்டி முன்செய்த தீவினை வந்து தீண்ட, வீரக் கழல் அணிந்த மன்னனே, உன்னுடைய நகருக்குள் வந்து என்கால் சிலம்பு ஒன்றை விற்க முயன்ற போது உன்னால் கொலை செய்யப்பட்ட கோவலன் மனைவி நான். என் பெயர்- கண்ணகியாகும் -என்று கூறியதும், மன்னன் கண்ணகியைப் பார்த்துப் பெண்ணே, கள்வனைக்கொல்வது குற்றம் அன்று, நல்ல ஆட்சி முறைமைக்கு அதுதான் அடையாளம் என்பதை நீ உணர வேண்டும் என்றான்.

## வஞ்சின மாலை

1. **கற்புடைப் பெண்கள் பெருமை** : ஒரு நல்ல பகல் பொழுதில் வன்னி மரத்தடியில் வந்து தங்கிய வழிப்போக்கன் ஒருவன் பாம்பு கடித்துச் சாக, அவனுடன் வந்த கன்னி, அழுது புலம்ப, இறைவன் அருளால் இறந்தவன் பிழைத்தெழுந்தான். இதைத் தன் ஊரில் உள்ளவர்கள் நம்ப மறுத்தபோது அவர் உயிர்த்தெழுந்த இடத்தில் இருந்த, வன்னி மரத்தையும், உணவு சமைக்கும் இடத்தையும் அருகிருந்த கிணற்றையும் தன் ஊருக்குச் சாட்சியாக வரவழைத்துக் காட்டினாள்.

இன்னொருத்தி, தோழிப் பெண்களுடன் காவிரிக்கு நீராடப்போனாள். அவளுடைய தோழிப் பெண்களில் ஒருத்தி கரையில் மணலால் பிடித்து வைத்த உருவத்தை இது தான் உன் கணவன் என்று விளையாட்டாகச் சொல்லி வைக்க, அவள் அதையே மெய்யாக ஏற்றுக் கொண்டு, தோழிப் பெண்களுடன் வீடு திரும்பாமல், காவிரி நீர் அலைகள் அந்த மண் உருவை அழித்துவிடாதவாறு அதனைச் சுற்றி மணலைக் குவித்து வைத்துக்கொண்டு அங்கேயே கிடந்தாள்.

மன்னன் கரிகால் பெருவளத்தான் மகள் ஆதிமந்தி. ஆவள் தான் விரும்பிய வஞ்சி நாட்டரசன் ஆட்டனத்தியை மணந்தாள். நீராடச் சென்ற அவனைக் காவிரி வெள்ளம் அடித்துச் சென்று விட்டது. ஆதிமந்தி அவனைத் தொடர்ந்து காவிரி நீர் ஓடும்வழியே ஓடினாள். முடிவில் காவிரி நீரோடு கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்டான். அதுகண்டு மனம் பதைத்த ஆதிமந்தி, மலை போன்ற தோளுடைய என் மன்னவனே என்று புலம்பித் துடித்தாள். கடல் ஆட்டனத்தியை, ஆதிமந்தி முன் கொண்டு வந்துவிட்டது. மீண்ட காதலனைத் தழுவிக் கொண்டு பொன் கொடி போலப்போனாள் ஆதிமந்தி.

இன்னொருத்தி, மணல் நிறைந்த கடற்கரைச் சோலையிலே, கரை நோக்கி வரும் கலங்களிலே தன் கணவன் வருவதைக் காணும் வரை கல்லாய் நின்று, தன் கணவன் வரக் கண்டதுமே கல்லுருவம் விட்டுப் பெண்ணுருவம் பெற்றாள்.

மற்றும் ஒருத்தி, தன் கணவனின் இன்னொரு மனைவியின் குழந்தை கிணற்றில் விழுந்து விடத் தன் குழந்தையையும் கிணற்றுக்குள் போட்டு, இரண்டு குழந்தையையும் பின் தன் கற்புத்திறத்தால் வெளியே எடுத்தால்

2. **பத்தினிப் பெண்களின் பட்டியல்** : மாற்றான் ஒருவன் தன்னைத் தொடர்ந்து பார்க்கும் பார்வையின் குறிப்பறிந்து, தன்னுடைய மதிபோன்ற அழகிய முகம் குரங்கினுடைய முகமாக மாறவேண்டிக் கொண்டு, அவ்வாறே வெளியூர் போன கணவன் வீடு திரும்பும் வரை குரங்கு முகத்துடனேயே இருந்து, கணவன் வந்தவுடன் குரங்கு முகம் விடுத்துத் தனது அழகிய திருமுகத்தை மீண்டும் பெற்றுக்கொண்டாள், பூப்போலும் பெண் ஒருத்தி.

சிறந்தவர் பெண்கள் என்றாலும், அவர்கள் அறிவுத்திறம் பழுதுடையதே என்று கற்றறிந்த பெரியோர்கள், கூறியதன் உண்மைப்பொருளை உணராமல், நான் சிறியவளாய்

இருக்கையில், தோழிப் பெண்களுடன் கூடி விளையாடிக் கொண்டிருந்த போது என் தோழியைப் பா்த்து எனக்கு ஒரு மகள் பிறந்து உனக்கொரு மகன் பிறந்தால், என் மகளுக்கு உன் மகனே கணவன் என்று விளையாட்டாகச் சொன்னதை அவள் தாய் நிசம் என்றே நம்பி இன்று என்னிடம் வந்து தன் மனவருத்தம் கூறக்கேட்டு என் உள்ளம் துடித்தது. இதைக் கேட்ட மற்றொருத்தி புத்தாடை உடுத்தி, பூ முடித்து அவனை நான் மணப்பேன் என்று கூறித் தவிக்கும் தாய் வருத்தம் தவிர்த்தாள். இப்படிப்பட்ட பத்தினிப் பெண்கள் பலர் பிறந்த பூம்புகார் நகரில் பிறந்தவள் நான்.

## 2. சூளாமணி - அரசியல் சருக்கம்

### தோற்றுவாய்

1. கத்தூரிமணங்கமழும் மலர்மாலையையும் விளங்குகின்ற வயிர மணியாலியன்ற அணிகலனையும் உடைய திவிட்டனுடைய , உயிரினுள்ளே உறைவாளும் அரிய மலைபோன்ற மார்பத்தே உறைவாளும் ஆகிய சுயம்பிரபையாகிய திருமகளே தன் மனைக்கிழத்தியாக சுயம்பிரபை இருக்கிறாள். அச்சுயம்பிரபையாகிய திருமகளோடு இரண்டு மனைவியர் ஆகும் பொருட்டு நிலமகளும் வந்து மணம் புணர்ந்த வரலாற்றினையும் கூறத் தொடங்குகின்றேன்.
2. கட்பொறியின் கண் மிக்குத் தோன்றும் இயல்பிற்றாய காதலால் விளைகின்ற காமத்துக்காழில் கனியைத் தோற்றுகிக்கின்ற செல்வந்தரும்போதன நகரத்தே இனிது நுகர்ந்திருந்த சடியரசனை , விசும்புவழி இயங்கி இறங்கி வந்தவனாகிய விச்சாதர ஒற்றன் தொழுது, கடல்போல் பரந்த அமிழ்த உணவின்மேல் ஒரு நஞ்சின் துளி சிதறி வந்து தெறித்ததைப் போன்று ஒரு கொடிய சொல்லாகிய செய்தியைக் கூறினான்.
3. விரைந்த செலவினையுடைய புரவிபூண்ட தேரையுடைய வேந்தனே , விச்சாதரர் உலகத்தை ஆளாநின்ற அரசர்கள் பலரும் ஆழியேந்திய வேந்தனாகிய அச்சுவ கண்டனுடனே ஏழு கடலும் ஒருங்கே திரண்டு அலைகள் விரைந்து செல்லுமாறு முழங்கி உலகத்தை விழுங்கும் பொருட்டு கரையின்மேல் படரவருவதைப் போன்று , நம்மீது போர் செய்ய வருதலை எண்ணுகின்றனர்.
4. அவ்வேந்தர்கள் நம்மேல் வருவார் எனின் வருக. அவர் அவ்வாறு வருவர் என்பது யாம் முன்னரே அறிந்ததொன்றே அன்றோ ஆதலால் அச்செய்தியை விட்டுவிட்டு நம் திவிட்ட நம்பிமலைக்குகையின்கண் உறைந்த ஆண்சிங்கத்தைப் பிளந்துகொன்றொழித்த பொழுது, மணம் நிறைந்த பெருமையுடைய சோலைசூழ்ந்த விச்சாதரர் உலகத்தே நிகழ்ந்ததனை சிறிது நீ கூறுக என்று சடிமன்னன் உரைத்தவுடனே அவ்வொற்றனும் கூறத்தொடங்கினான்.
5. அடிகளே!, செய்தபடி யான் சிறிது கூறுவ தைக் கேளுங்கோள் , திவிட்ட நம்பி அனைவரும் வியக்கும்படி சிங்க அரசாகிய அவ்விலங்கினை வாயைப் பிளந்து கொன்றமையாலுண்டான அப்புகழ் மொழி யை ஓர் ஒற்றன் விஞ்சையருலகத்தே வாழ்வோர் எல்லாம் தெளிந்து

கொள்ளும்படி சொல்லக் கேட்டவுடனே தத்தம் நெஞ்சம் எல்லாம் அஞ்சும் எல்லை முற்றும்படி அஞ்சி உடல் நடுக்கமடைந்தனர்.

6. விச்சாதரருலகமெங்கும் பரவிய இச்செய்தியை , குறைதலில்லாத புகழுடைய அச்சுவகண்டனுக்குக் கூற அமைச்சுத்தொழில் பூண்ட அரிமஞ்சு என்பவன் அஞ்சியவனாய் சிலநாள்வரை மறைத்து வைத்துப் பின்னர் மாயச்சிங்கமாகிச் சென்றவனாகிய நீண்ட வீரக்கழலணிந்த அரிகேதுவை அழைத்து இவ்வாறு அச்சுவகண்டனுக்கு உரைக்கும்படி ஏவினான்.
7. வீசுகின்ற சுடரையுடைய வயிரத்தாலாய பசிய அணிகலன் அணிந்த பல மன்னர்களும் சூழ சுடர்வீசும் ஆழிப்படையை ஆளுகின்ற அச்சுவகண்டன் இவ்விடத்தே இனிதாகக் கொலுவீற்றிருந்ததோர் அமையத்தே அரசர் பெருமான் கேட்டற்கரிய செய்தி ஒன்றை இப்போது யான் கூறக் கேட்டருள்க என்று கூறத் தொடங்கி அரிகேது என்பவன் திவிட்டன் சிங்கத்தை வாய்பிளந்த செய்தியைக் கூறலானான் . அவ்விடத்தே, அவ்வவையில் மிகப் பெரியதொரு வியப்பு உண்டாகியது.
8. கரிய மேனியை யுடையவனும் வெண்மையான பற்களையுடையவனும் பெரியதாகிய கரியமுகில் ஒன்று இரண்டு இளம் பிறைகளை வாயிடத்தே கவ்விக்கொண்டு இருந்ததை ஒத்து இருக்கின்றவனும் ஆகிய அச்சுவக்கண்டன் யாம் கேட்டற்கும் அரியதாய செய்தி என்னை என்னை என்று அடுக்கி வினவினனாக. அரிகேது அப்பொழுது கூறிய மொழிகளுக்கு முன்னர் அவ்வச்சுவகண்டனுடைய கபில நிறம் பொருந்திய வட்டவடிவமான கண்கள் தீயை உமிழ்ந்தன.
9. அச்சுவகண்டன் மடிக்கப்பட்ட உதட்டைப் பல்லாலே அதுக்கிக்கொண்டு பக்கத்தே நின்ற வயிர மணித் தூணைக் கையாலே புடைத்தான் அந்தப் பருத்துத் திரண்ட வயிரத்தூண் இடியேறு தாக்கிற்றாக அரிய மலை தகர்ந்து வீழ்வதைப்போன்று பூமி நடுங்கும்படி பூண்கட்டிய தன் தலை தகர்ந்து உதிர துகளாகப் பறந்து ஒழிந்தது.
10. அங்குள்ள விச்சாதரர்கள் அச்சினச் செயலைக்கண்டு உடல் நடுங்கி அச்சத்தாலே மனம் விம்மாநிற்ப அச்சுவகண்டன் மீளவும் வெகுளியால் மனம்கனன்று அவ்வரிகேது என்பானைப் பார்த்து இடியேற்றை ஒத்து முழங்குவானாய் அடே அரிகேது! , நீ மனிசரைப் பெரிதும் அஞ்சிவிட்டாய் போலும் ஆதலானன்றோ , வஞ்சனை மனமுடையரான எளிய மானிடரை மிக்க வலிமையுடையோர் என்று புகழாநின்றனை, என்று கூறினான்.

## 11.துறவுச் சருக்கம்

பயாபதி மன்னனின் துறவு நெறி

நிலை நின்ற பெரும் புகழ் படைத்தவனாகிய பயாபதி என்னும் அரசர்கட்கு அரசன் தன் மகனாகிய திவிட்டனுடைய மரபிற் றோன்றிய மக்களினுடைய இனிய நகைப்புடன் கூடிய மழலைச் சொற்களைச் செவிமடுத்து இனிதாக மகிழ்ந்து நெடிது நாளிருந்து பிறகு மெய்ந் நூல்களால் ஆராய்ந்து கூறப்பட்ட மெய்யுணர்தற்குக் காரணமான துறவு நெறியிலே

செல்வானாயினான். அவ் வரலாற்றின் பகுதியை யான் அறிந்த துணையானே கூறத் தொடங்குகின்றேன்.

திருமகள் மகிழ்ந்து வதிகின்ற மாலையணிந்த மார்பினையுடைய சிவந்த கண்களையுடைய திவிட்ட மன்னன தன் அடிகளிலே வணங்கா நிற்ப செல்வமுடைமை காரணமாகப் பெரியதொரு மகிழ்ச்சியையடைந்து பயாபதி மன்னன் பெரிய வாள் போலும் கண்களுடைய உரிமைத் தேவியோடு வீற்றிருந்த அமையத்தே பெறற்கரிய ஆழிப் படையை யுடைய திவிட்டனுடைய இளமகார்கள் கிண்கிணி முதலிய ஒலிக்கும் அணிகலன்கள் ஆரவாரிக்கும்படி ஓடிப் போய் அப்பயாபதி வேந்தனை அடைந்தனர்.

அவ்வாறு அம்மக்கள் தன்னை வந்து அணுகிய பொழுது தேன்மணங் கமழும் பவழம் போன்ற சிவந்த வாயின்கண் ஊறுதலுடைய நகையுடனே கூடிய ஊறலாகிய நீரை மாந்தி இன்ப மிக்கு இவ்வுலகத்தே இச் செயல்போன்ற செயல்கள் பலவற்றை நிகழ்வித்து பேரின்பம் மிகும்படி முற்பிறப்பிற் செய்து நின்ற பெருகிய தவவொழுக்கத்திற்கு இனிமேலும் விதை வித்தற்பாற்று என்று கூறினான்.

ஒளிக்கதிருடனே திகழ்கின்ற அழகிய பொற்குடை நீழலிலே முகபடா மணிந்த அரச யானையின் பிடரின்கண் வீற்றிருந்து வேந்தர்கள் பலர் சூழ்ந்துவர உலகமெல்லாம் ஒருங்கே வணங்க பல குடைவேந்தரும் வணங்குமாறு ஊர்வலம் செல்ல நின்ற பண்புடைய இப்பேற்றை நமக்குக் கொடுத்தருளிய நன்மையைத் தன் கண்ணே உடையதாயிற்று அளிக்கும் தன்மையுடைய நம்முடைய நல்வினையாகிய ஊழ் அன்றே.

தன்னை ஒப்பற்ற மன்னனாகப் பிறப்பித்து அலைகடலாற் சூழப்பட்ட உலகத்தை ஆளும்படி செய்து இனிய உயிர்போன்று நிகழ்கின்ற நல்வினையென்று கூறப்படுகின்ற முன்னர் இத்தகைய உதவிசெய்த தொன்றனை வேரொடு அழிந்துபோமாறு முரண்நெறியிலே முயலுகின்ற சிறுமையுடைய நன்றி தேர்தல் இல்லாத அரசன் அல்லனோ நரகத்தை ஆளுதற்குரிய அரசனாகத் தக்கவன் .

கழிந்த நம் வாழ்நாட்கள் மீண்டும் வந்து நம்முடன் புணவர்வனவாயினும் செல்வப்பேற்றையும் அதனாலாய செருக்குடை மையையும் ஒருங்கே அளித்து எஞ்சிநின்ற நம் வாழ்நாள்கள் கழியாதே நிலைத்திருப்பன ஆயினும் யாம் தவநெறியிலே நின்று பொறியடக்குதல் முதலியவற்றால் வருந்தாமலே இற்றைக்கு இன்ப நுகர்ந்து வாழுமாறு போலவே எப்பொழுதும் வாழ்ந்திருக்கக் கடவேம் இவ்வாறே நிலைத்தலின்றி யாம் இறந்தொழியும் நாள் ஒன்று வந்தெய்துதல் ஒருதலை
ஆனால் இப்போது எய்தியுள்ள இந்நிலையுதலில்லாத வாழ்க்கையும் ஒரு சிறந்த பொருளாகப் போற்றற்பாலதன்றாம்.

தீப்பிழம்பை ஒத்த எழிலுடையதாகிய இளமையுடைய தளிர் இரண்டே நாள் அகவையின் முதிர்ந்து மரகதமணி நிறம்போன்ற பசிய உருவம் உடையதாகி அவ்விலைதானே அந்நிறம் மழுங்கி நிறங் கறுத்த இலையாய் மாறி உதிர்ந்து மக்கி மண்ணோடுமண்ணாய் மறைவதனைத் தாமே காட்சியளவையானே கண்டுவைத்தும் அவ்வழிவுபாட்டிற்கு அஞ்சாதவராய் இவ்வுலகத்தே இனிது அமர்ந்து வாழக்கடவேம் என்று முயல்வோருடைய பேதைமையை அகற்றல் கூடுமோ, கூடாதென்றபடி.

இவ்வுலகிலே பிறந்தார்கள் பிறந்தபின்னர் மிகவும் மக்களும் மனைவியும் பேருமாகிப் பெருகலுற்றனர் மீண்டும் இறந்தனர் என்று கூறப்படுவதையன்றி எத்திறத்தாரும் இவ்வுலகம் தோன்றிய நாள் தொடங்கி இற்றைவரையும் கூற்றுவன் அறியாவாறு ஒளிந்தேனும் உயிர் வாழ்வோர் இல்லை என் நெஞ்சமே! நீ வாழக்கடவை தவவொழுக்கத்தினும் மிக்கதாய் உயர்ந்ததொன்று மானிடர்க்கில்லை என்னும் இவ்வுண்மையை நீ நனி கருதக்கடவாய்.

நம்மொடு நாமாகவே பிறந்து நம்மால்பெரிதும் போற்றப்படுகின்ற அறிவிலதாகிய இவ்வுடலும் கழிந்த நாள்களிலே இருந்தபடியே இராததாகி இன்றிருப்பதாம் தன்மைகெட்டு நாளைக்கு வேறு தன்மைத்தாய் மாறி தேய்ந்து யாம் அதனை விடாதே பற்றிப் போற்றா நிற்பவும் அது நம்மைப் பற்றுதல் ஒழிந்து இறந்துபடுமானால் நமக்குச் சிறந்த உரிமையுடையார் இவ்வுடலினும் அயலில் உள்ள பிறர்கள்
யார்தாம் உளராவார் என் நெஞ்சே! நீ இதனை ஆராய்ந்து காணுதி என்று இயம்பினான்.

தொகுக்கப்பட்ட மலர்களாற் புனைந்த மாலைகளை அணிந்து தூய நறுமணங்கமழும் மணப் பொடிகளைத் திமிர்ந்து மணப் புகைகளை நன்கு மணங் கமழும்படி ஊட்டி போற்றப்பட்ட இவ்வுடல் ஒரு சிறு முள் தனது நுனியாலே குத்திய மாத்திரையானே ஊன்சிதைவுற்று சீழ் வடிதலையுடைத்தாம் எனின் இத்தகைய இழிந்த இவ்வுடலை யாம் பொருளாகக் கொண்டு இன்புறுதல் நாணுத் தகவுடைத்தாம் மேலும் இப் பேதைமை சான்றோரான் நகைக்கப்படுதலையும் மிக உடையதாகும்.

ஒழுகும் முறைமையுடைய மலமும் மூத்திரமும் முதலவாகிய இழிபொருள்கள் மிகுதியாக ஊறுதற்கு இடமான அழுகற் பண்டமாம் இந்த ஊன் சேற்றாலாய உடல் உட்புறம் வெளிப்புறமாமாறு ஆய்விட்டால் கைத்தடியை வைத்துக்கொண்டு பாதுகாத்தவிடத்தும் ஊன் கவர்ந்துண்ணும் கழுகு காக்கை முதலிய அழகுடைய உயிரினங்கள் ஆயிரவகைகள் புறம் போகாமற் சுற்றா நிற்கும்.

**பாட நூல்: கற்பகச்சோலை – தமிழ் ஏடு.**

கற்பகம் உயர்கல்வி கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு.

## இன்றியமையாத வினாக்கள்

## இரு மதிப்பெண் வினாக்கள்

1. “பெரும்பெயர்ப் புகாரென் பதியே” யார் கூற்று?. சூழலைச் சுட்டுக.
2. சேரன்செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் அமைத்த செய்தியினைக் கூறுக.
3. சேரன் செங்குட்டுவனுக்குக் கண்ணகி காட்சிதந்த செய்தியினை விளக்குக?

## பெரு மதிப்பெண் வினாக்கள்

1. கண்ணகியின் சிறப்பினை சிலப்பதிகாரக் காப்பியத்தின் வழி எடுத்துரைக்க.
2. கண்ணகி குறிப்பிடும் கற்புடைய பெண்டிர் எழுவர் குறித்து விவரி?
3. கண்ணகியின் சிறப்புப் பற்றி சிலம்பு கூறும் கருத்துக்களைக்கூறுக.

## பகுதி – அ ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. கற்புடை மகளிர் மேம்பாடு சிலப்பதிகாரத்தில் யாரால் காட்சிப்படுத்தப்படுகிறது?.

(அ). கோவலன் (ஆ). கண்ணகி (இ). தேவந்தி (ஈ). மாதரி

2. கண்ணகிக்குக் கோயில் எடுத்துச் சிறப்பித்தவன் யார்?.

(அ). சேரன் (ஆ). பாண்டியன் (இ). சோழன் (ஈ). கனகவிசயன்

3. ஆவின் கண்ணீர் துடைக்கஇ புதல்வனை ஆழியின் மடித்தோன் யார்?.

(அ).நெடுஞ்செழியன்(ஆ).செங்குட்டுவன்(இ).மனுநீதிச்சோழன்(ஈ).சிபிசக்கரவர்த்தி

4.' யாரையோ? நீ மடக்கொடியோய்' - யார் கூற்று?

(அ). சோழன் (ஆ). பாண்டியன் (இ). சேரன் (ஈ). பல்லவன்

5.பத்தினிக்கோட்டம் யாரால் அமைக்கப்பட்டது?

அ) கபிலர் ஆ) சேரர் இ) சோழர் ஈ) பாண்டியர்

6. கண்ணகி பிறந்த நாடு எது?

அ) கொங்குநாடு ஆ) சேரநாடு இ) பாண்டியநாடு ஈ) சோழநாடு

7. இளங்கோவடிகள் இயற்றிய நூல் எது?

அ)சீவகசந்தாமணி ஆ) மணிமேகலை இ) சிலப்பதிகாரம் ஈ) சூளாமணி

8. மாதரார் தொழுதேத்தி வணங்கியவர் யார்?

அ) கண்ணகி ஆ) மாதவி இ) தேவந்தி ஈ) மாதரி

9. இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட காப்பியம் எது?

அ) சீவகசந்தாமணி ஆ) மணிமேகலை இ) சிலப்பதிகாரம் ஈ) சூளாமணி

10. 'யாரையோ? நீ மடக்கொடி'- என்னும் தொடர் இடம்பெறும் நூல் எது?

அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ) கலித்தொகை ஈ) சூளாமணி

11. 'தவத்திற்கு மேலும் வித்திடுக!' என்று வலியுறுத்துகின்ற இலக்கியம் எது?.

(அ). சிலப்பதிகாரம் (ஆ). சூளாமணி (இ). புறநானூறு (ஈ). பதிற்றுப்பத்து

12. துறவு மேற்கொண்டதாகச் சூளாமணி யாரைக் குறிப்பிடுகிறது?.

(அ). பயாபதி (ஆ). திவிட்டன் (இ). அச்சுவகண்டன் (ஈ). சடி மன்னன்

13. கீழ்க் குறிப்பிடுவனவற்றில் ஐஞ்சிறுகாப்பியம் எது?

அ)சீவகசிந்தாமணி ஆ) மணிமேகலை இ) சிலப்பதிகாரம் ஈ) சூளாமணி

14. சூளாமணியின் ஆசிரியர் யார்?.

(அ) தோலாமொழித் தேவர் (ஆ) சேக்கிழார் (இ) நக்கீரர் (ஈ) இளங்கோவடிகள்

**UNIT-IV**

**SYLLABUS**

| அலகு – IV : சிறுகதை – தேர்ந்தெடுத்த சிறுகதைகள் ஆறு மட்டும் |
|---|

**சிறுகதை**

1. குளத்தங்கரைஅரசமரம்– வ.வே.சு.ஐயர்
2. காட்டில் ஒரு மான் - அம்பை
3. நாற்காலி – கி.ராஜநாராயணன்
4. நகரம்– சுஜாதா
5. எஸ்தர்– வண்ண நிலவன்
6. மரப்பாச்சி– உமா மகேஸ்வரி

## 1. குளத்தங்கரை அரசமரம்

**வ. வே. சு. ஐயர்**

**தொடக்க காலச் சிறுகதையின் போக்கு**

**விநோதரச மஞ்சரி கதைகள், பஞ்சதந்திரக் கதை, பரமார்த்த குரு கதை** முதலியன தமிழ்மொழியில் தோன்றிய பழைய சிறுகதைகளாகும். இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த எழுத்தாளர்களான **வ.வே.சு.ஐயர், புதுமைப்பித்தன், கு.ப.இராஜகோபாலன், ராஜாஜி, 'கல்கி' ரா.கிருஷ்ணமூர்த்தி, அழகிரிசாமி, அண்ணா** போன்றோர் தொடக்க காலத்திலிருந்தே சிறுகதை வளர்ச்சிக்குத் தொண்டாற்றியுள்ளனர். இவர்கள் தமக்கென்று ஒரு தனி நடையை வகுத்துக் கொண்டு சிறுகதைகளைப் படைத்தனர். இவர்களுடைய சிறுகதைகள் வாழ்க்கைச் சிக்கல்களைப் பிரதிபலிப்பதாய் அமைந்தன. மனித மனங்கள் மாற்றம் பெறவேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டின. ஏற்றத்தாழ்வுகளால் நிகழும் இடர்ப்பாடுகளைச் சுட்டின. வறுமையின் கொடுமையை மனத்தில் பதித்தன. சமூகப் பிரச்சனைகளை அறிந்துகொள்ள உதவின. நீதிக் கதைகள் மூலம் நெறிகளைப் போதித்தன. இங்ஙனம், இக்காலகட்டத்தில் தோன்றிய படைப்பாளர்கள் பல்வேறு சமூகம் மற்றும் ரசனைக்கு ஏற்ப, தம் படைப்புகளை அமைத்தனர். இச்சிறுகதைகளின் வழிப் பெறப்பட்ட சமூகப் பயன் மற்றும் இலக்கியப்பயனைக் காணலாம்.

**சமூகப் பயன்**

இக்காலகட்டத்தில் எழுந்த சிறுகதைகள் குழந்தை மணம், விதவைக் கொடுமை, வரதட்சணைக் கொடுமை, பொருந்தா மணம், மூடநம்பிக்கை, சாதிக்கொடுமை, தீண்டாமை, வறுமைக்கொடுமை ஆகிய சமூக இன்னல்களைத் தெளிவுபடுத்தின.

**இலக்கியப் பயன்**

இக்காலகட்டத்தில் தோன்றிய சிறுகதைகள் மக்கள் வாழ்வையும், காலத்தையும் உள்ளடக்கிப் பயனுள்ளதாகின்றன. உரைநடையை வளர்த்து, நவீன இலக்கியங்களாகத் திகழ்கின்றன. இதன் மொழிநடை இலக்கியத் தரத்திற்கும், இரசனைக்கும் இடமளிக்கின்றது. இவ்வகையில் காலம்காட்டும் கண்ணாடியாகச் சிறுகதைகள் விளங்கி, இலக்கியப் பயனுடையதாகின்றன. இப்பகுதியில் தொடக்ககாலத் தமிழ்ச் சிறுகதைகளுக்கு மூன்று எடுத்துக்காட்டுச் சிறுகதைகளைக் கூறி, அவற்றின் போக்கு ஆராயப்படுகிறது. இதன் வழிப் படைப்பாளரின் சிந்தனையும், இலக்கியத்தரமும் வெளிப்படுத்தப்படுகின்றன.

**வ.வே.சு.ஐயரின் சிறுகதை - குளத்தங்கரை அரசமரம்**

**வ.வே.சு.ஐயர்**

வ.வே.சு.ஐயர் திருச்சி வரகனேரியைச் சேர்ந்த வேங்கடேச ஐயருக்கும், சின்னாளப்பட்டி எனும் ஊரைச் சேர்ந்த காமாட்சியம்மாளுக்கும் 1881-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 02-ஆம் நாள் மகனாகப் பிறந்தார். வ. வே. சு. ஐயர் பிறந்தார். அவரது இயற்பெயர் வேங்கடேச சுப்பிரமணியம் என்பதாகும். இப்பெயரே நாளடைவில் அவரது

ஊர்ப்பெயருடன் சேர்ந்து வ.வே.சு.ஐயர் என்று மாற்றம் பெற்று அதுவே நிலைத்து நின்றுவிட்டது.

வ.வே.சு.ஐயர் கிரேக்கம், இலத்தீன், பிரெஞ்சு, ஆங்கிலம், வடமொழி, தமிழ் ஆகிய மொழிகளில் ஆழ்ந்த புலமை பெற்றவராய் விளங்கினார்.

சிறுகதை இலக்கிய முன்னோடி வ.வே.சு.ஐயர் “குளத்தங்கரை அரச மரம்“ என்ற பெயரில் சிறுகதையை வெளியிட்டார். இதுவே முதன்முதலில் தமிழில் வெளிவந்த சிறுகதையாகும். இச்சிறுகதையின் வாயிலாக தமிழ்ச் சிறுகதையின் முன்னோடி என்று அனைவராலும் அழைக்கப்பட்டார். 1917-ஆம் ஆண்டில் வெளிவந்த “மங்கையர்க்கரசியின் காதல், காங்கேயன், கமல விஜயம், குளத்தங்கரை அரசமரம் ஆகிய சிறுகதைகளைத் தொகுத்து மங்கையர்க்கரசியின் காதல் என்ற சிறுகதைத் தொகுப்பை கம்ப நிலையம் சார்பில் வெளியிட்டார். இதுவே தமிழில் வெளிவந்த முதலாவது சிறுகதைத் தொகுதியாகும். இந்நூல், வ.வே.சு.ஐயரை தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தின் முதல்வர் என்று தமிழ் இலக்கிய உலகிற்கு உணர்த்தியது. 1927-ஆம் ஆண்டில் வெளிவந்த பதிப்பிற்கு அளித்த முகவுரையில், “இக்கதைகளை ஒருவன் படித்துப் புத்தகத்தைக் கீழே வைக்கும் காலத்தில் அவன் மனதில் பரிசுத்தமான உணர்ச்சிகளும், உன்னதமான எண்ணங்களும் ததும்பும்,” என்று இராஜாஜி குறிப்பிடுவது வ.வே.சு.ஐயரின் படைப்பிலக்கியத்திற்கு சிறந்த திறனாய்வாக விளங்குகின்றது எனலாம். மறைதல் தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தின் முதல்வராகிய வ.வே.சு.ஐயர் பாபநாசம் அருவியில் தவறி விழுந்த தனது மகளைக் காப்பாற்ற முனைந்து 1925-ஆம் ஆண்டு ஜூன் 4-ஆம் நாள் மண்ணுலகை விட்டுப் பொன்னுலகை அடைந்தார்.

**கதைச் சுருக்கம்**

கதையை, குளத்தங்கரையில் இருக்கும் அரச மரம் ஒன்று கண்டும், கேட்டும் கூறுவதுபோல் படைப்பாளர் எழுதியுள்ளார். பிராமணக் குடும்பத்திலிருக்கும் சிக்கல், சமூகச்சிக்கலாய் வெளிப்படுத்தப்படுகிறது. கதைத்தலைவியின் அன்பு, பண்பு, அழகினை அரசமரம் ரசனையுடன் கூறுவதன் மூலம் நம் மனத்தில் பதிய வைக்கிறார் படைப்பாளர். கதைத் தலைவி ருக்மணிக்கு அவளின் 12ஆம் வயதில் நாகராஜனுடன் திருமணம் நிகழ்கிறது. அவளுக்குத் திருமண உறவு நிகழும் முன்னரே அவள் தந்தைக்குத் தொழிலில் நஷ்டம் ஏற்பட்டு ஏழையாகி விட, நாகராஜன் வீட்டார் அவளைத் தள்ளி வைத்துவிட்டு அவனுக்கு இரண்டாம் திருமணம் செய்துவைக்க ஏற்பாடுகள் செய்து விடுகின்றனர். இதுபற்றி ருக்மணி நாகராஜனிடம் பேசும்போது, ‘தாய், தந்தையின் வார்த்தைகளைத் தட்ட முடியாது. ஆனால் நான் உன்னைக் கைவிட மாட்டேன்’ என்று ஆறுதல் கூறுகிறான். ஆனால் நாகராஜனின் எண்ணமோ, பெற்றோரின் பேச்சை மதிப்பதுபோல் நடந்துகொண்டு, அந்தத் திருமணத்தை நிறுத்தி அவர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும் என்பதேயாகும்.

ஆனால் அவன் இந்தத் திட்டத்தைத் தன் நண்பனிடம் மட்டுமே கூறுகிறான். விளையாட்டிற்காக ருக்மணியிடம் கூறாமல் மறைத்து வைக்கிறான். இதையறியாத நிலையில், மென்மை உள்ளம் கொண்ட ருக்மணி அவன் கைவிட்டு விட்டான் என்று கருதிக் குளத்தில் மூழ்கி உயிரை விட்டு விடுகிறாள். இறுதியில் தன் விளையாட்டுத்தனத்தால் மனைவியை இழந்து விட்டோம் என்று வருந்தி நாகராஜன் சன்னியாசம் வாங்கிக் கொள்வதோடு கதை நிறைவடைந்துள்ளது.

படைப்பாளனின் மனத்தை நெருடிய செய்திகளே சிறுகதையாய் வெளிப்பட்டுள்ளன. படைப்பாளர் கதையின் இறுதியில் மென்மை உள்ளம் கொண்ட பெண்களுக்கு விளையாட்டிற்காகக் கூடத் துன்பம் ஏதும் செய்ய வேண்டாம் என்று அறிவுரை கூறியுள்ளார். இதிலிருந்து படைப்பாளர் இச்சிறுகதையைச் சமூக நோக்கோடு படைத்திருப்பதைக் காணமுடிகிறது. இவ்வாறாக, தமிழ்ச் சிறுகதையின் முதல் கதையின் போக்கு அமைந்திருந்தது.

**இலக்கியத்தரம்**

இக்கதையை அரசமரம் கூறுவதுபோல் அமைத்திருப்பது படைப்பாளரின் புதிய உத்தியைக் காட்டுவதாகிறது. இக்கதை காவிய ரஸம் பொருந்தி, கருத்தமைந்த கதையாகி, சமூகச்சிக்கலை வெளிப்படுத்துகிறது. பிராமணக் குடும்பத்திற்குரிய பேச்சு வழக்கு இடம்பெற்றிருப்பதால் எளிமையான தமிழ் வழக்கிற்கு இடமில்லாமல் போகிறது. இச்சிறுகதை இன்புறுத்தல் மற்றும் அறிவுறுத்தலுக்கும் இடமளிப்பதால் இலக்கியத் தரத்திற்கும் உரியதாகிறது.

## 2. காட்டில் ஒருமான் - அம்பை

ஆசிரியர் அம்பை, இயற்பெயர் சி.எஸ் லட்சுமி. பிறப்பு 1944 தமிழில் சிறந்த பெண்படைப்பாளிகளில் ஒருவர் பெண்ணிய சிகதைகளின் முன்னோடி. படித்த பெண்களின் வாழ்க்கையை மிக இயல்பாகப் படைப்பவர் பெண்களின் உறவுச்சிக்கல்கள், வாழ்வியல் சிக்கல்கள், உளவியல் சிக்கல்கல்கள் சமரசங்கள் என அனைத்தையும் கிண்டலான தொனியில் படைப்பவர். SARROW C SOUND AND PICTURE ACHIVES FOR RESEARCH ON WOMEN என்ற அமைப்பை நிறுவி அதன் இயக்குனராக செயல்பட்டு வருகிறார்.

**சமூகத்தில் பெண்ணின் அடையாளம்** :

பெண் என்பவள் சமூகத்தால் கட்டமைக்கப்படுகிறாள் அவளது உடலை மையமாகக் கொண்டே அவளுக்கான அடையாளம் என்பது அமைகிறது. திருமணமும், பிள்ளைப்பேறும் அவளுக்கு கட்டாயமாக்கப்படுகிறது. சமூகத்தில் அவளுக்கான மரியாதையும் இதனைச்சார்ந்தே அமைகிறது. தாய்மை அடைந்த பெண் மட்டுமே நூறு சதவிகித முழுமையான பெண்ணாக சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகிறாள் சமூகத்தின் மரியாதையும் அங்கீகாரமும் இவளுக்கு மட்டுமே. தாய்மை இவளுக்கு மட்டுமே. தாய்மை அடையாதது அவள் குற்றமல்ல, இறைவன்

படைப்பில் இதுவும் ஒருவிதம் என சமூகம் ஏற்க மறுக்கும் நிலைதான் இன்றளவும். சமூகத்தால் அவள் ஒதுக்கப்படுகிறாள், சமூகத்தினரின் பரிதாப பார்வைக்கு உள்ளாகிறாள்.

இயற்கையின் பிழையினால் தாய்மை அடைகின்ற வாய்ப்பை பெண் இழக்கும் பொழுது அவள் அடைகின்ற துன்பத்திற்கு அளவே இல்லை. யாரிடமும் பரிந்து கொள்ளாமல் அவளது துன்பத்தை தனது மனதிலேயே புதைத்திருப்பாள்.

**காட்டில் ஒருமான்**

இந்தக் கதையின் தலைமைக் கதாபாத்திரம் தங்கம். பெயருக்கு ஏற்றாற்போல நல்ல குணமுடையவள்., கைராசிக்காரி என அனைவராலும் பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரியவள்.

இயற்கையின் சதியால் பிள்ளைபெறும் தன்மையை இழந்தவள். சமுதாயத்தில் பலராலும் மலடி என பழிக்கப்படுபவள். வீட்டின் அனைத்து வேலைகளையும் எவ்வித குறையும் இன்றி செய்து முடிப்பவள். நான் பிள்ளைகளைப் பெறவில்லையெனினும் தன் கணவனின் இரண்டாம் மனைவியின் குழந்தைகளை தன் குழந்தைகள் போல் பாசம் காட்டுவதிலும் , உறவுக்கார குழந்தைகளுடன் எப்பொழுதும் கூடியிருந்து கதை சொல்லியும், தானும் ஒரு குழந்தையாக மாறி உயர்ந்து நிற்கிறாள்.

தனது துன்பங்களையும் சமூகத்தின் ஏச்சு பேச்சுக்களையும் தாங்கிக் கொண்டு சமூகத்தில் தன்னையும் ஒரு இயல்பான பெண்ணாகக் காட்டிக் கொள்கிறாள்.

**தங்கம்- மான்:**

தங்கம் குழந்தைகளுக்கு ‘காட்டில் ஒருமான்’ கதையைக் கூறுகிறாள் தன்னை மானாகவும் தன்னுடைய வாழ்க்கையைக் காடாகவும் பாவித்துக் கதை கூறுகிறாள். எல்லாப் பெண்களைப்போலவும் தொடங்கிய தனது வாழ்க்கைப் பயணம் எவ்வித வேறுபாடுமின்றி, மிரட்சியுமின்றி பயமற்று வாழ்ந்த தனது இளமைப்பருவ வாழ்க்கையை பழைய பழகிய காடாக உவமித்துக் கூறுகிறாள்.

திருமணத்திற்குப் பின்னர் தன்னுடைய உடல் குறைபாடானது உலகிற்குத் தெரியவருகிறது. தாய்மைக்கு முக்கியத்துவம் கொடுத்து அதன் அடிப்படையில் பெண்ணைக்காணும் இச்சமூகத்தின் ஏச்சு பேச்சுக்கள் , அவமரியாதைகள், அச்சுறுத்தல்கள் ஆகியவற்றை பாதை மாறிச் சென்ற, பழகாது, பயமுறுத்துகின்ற புதியகாடாக உவமிக்கின்றாள்.

சமூகத்தின் அவமரியாதைகள், அங்கீகாரமற்ற தன்மை இவற்றில் எவ்வித மாற்றமும் இல்லை. ஆனால் அவற்றையெல்லாம் தங்கம் பழகிப் போனாள். யாரிடமும் சொல்ல இயலாத, பகிர்ந்து கொள்ள இயலாத கலந்த இந்த மனவேதனையை யாரும் அறியாது தானே தனியாக அழுது தீர்த்தாள்.

### 3. நாற்காலி – கி. ராஜநாராயணன்

'நாற்காலி இல்லாததும் ஒரு வீடா?' எங்கள் வீட்டில் இப்படித் திடீரென்று எல்லோருக்கும் தோன்றிவிட்டது.அவ்வளவுதான்; குடும்ப 'அஜெண்டா'வில் வைக்கப்பட்டு இந்த விஷயத்தில் விவாதம் தொடங்கியது.

முதல் நாள் எங்கள் வீட்டுக்கு ஒரு குடும்ப நண்பர் விஜயம் செய்தார். அவர் ஒரு சப்ஜட்ஜ்.வந்தவர் நம்மைப் போல்வேட்டி சட்டை போட்டுக்கொண்டு வரப்படாதோ? சூட்டும் பூட்டுமாக வந்து சேர்ந்தார். எங்கள் வீட்டில் முக்காலிதான்உண்டு. அதன் உயரமே முக்கால் அடிதான். எங்கள் பாட்டி தயிர் கடையும்போது அதிலேதான் உட்கார்ந்து கொள்வாள்,அவளுக்கு பாரியான உடம்பு. எங்கள் தாத்தா தச்சனிடம் சொல்லி அதைக் கொஞ்சம் அகலமாகவே செய்யச்சொல்லியிருந்தார்.

சப்ஜட்ஜுக்கும் கொஞ்சம் பாரியான உடம்புதான். வேறு ஆசனங்கள் எங்கள் வீட்டில் இல்லாததால் அதைத்தான்அவருக்கு கொண்டுவந்து போட்டோம். அவர் அதன் விளிம்பில் ஒரு கையை ஊன்றிக்கொண்டு உட்காரப் போனார்.இந்த முக்காலியில் ஒரு சனியன் என்னவென்றhல் அதன் கால்களுக்கு நேராக இல்லாமல் பக்கத்தில் பாரம்அமுங்கினால் தட்டிவிடும்! நாங்கள் எத்தனையோ தரம் உறியில் வைத்திருக்கும் நெய்யைத் திருட்டுத்தனமாகஎடுத்துத் தின்பதற்கு முக்காலி போட்டு ஏறும் போது அஜாக்கிரதையினால் பலதரம் கீழே விழுந்திருக்கிறோம். பாவம்,இந்த சப்ஜட்ஜும் இப்பொழுது கீழே விழப்போகிறாரே என்று நினைத்து, அவரை எச்சரிக்கை செய்ய நாங்கள் வாயைத்திறப்பதற்கும் அவர் தொபுகடீர் என்று கீழே விழுந்து உருளுவதற்கும் சரியாக இருந்தது. நான், என் தம்பி, கடைக்குட்டித்தங்கை மூவருக்கும் சிரிப்பு தாங்க முடியவில்லை. புழக்கடைத் தோட்டத்தைப் பார்க்க ஓடினோம். சிரிப்புஅமரும்போதெல்லாம் என் தங்கை அந்த சப்ஜட்ஜ் மாதிரியே கையை ஊன்றிக் கீழே உருண்டு விழுந்து காண்பிப்பாள்.பின்னும் கொஞ்சம் எங்கள் சிரிப்பு நீளும்.

எங்கள் சிரிப்புக்கெல்லாம் முக்கிய காரணம் அவர் கீழே விழும் போது பார்த்தும் எங்கள் பெற்றோர்கள், தாங்கள்விருந்தாளிக்கு முன்னாள் சிரித்துவிடக்கூடாதே என்று வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டதை நினைத்துத்தான்! ஆக, நாங்கள் எல்லாருக்கும் சேர்த்துச் சிரித்துவிட்டு வீட்டுக்குள் பூனைபோல் அடி எடுத்து வைத்து நுழைந்துபார்த்தபோது அந்தப் பாரியான உடம்புள்ள விருந்தாளியை காணவில்லை.

அந்த முக்காலியையும் காணவில்லை. 'அதை அவர் கையோடு கொண்டு போயிருப்பாரோ?' என்று என் தங்கை என்னிடம் கேட்டாள்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னரே, எங்கள் வீட்டில் எப்படியாவது ஒரு நாற்காலி செய்துவிடுவது என்ற முடிவுஎடுக்கப்பட்டது. இந்த நாற்காலி செய்வதில் ஒரு நடைமுறைக் கஷ்டம் என்ன என்றால், முதலில் பார்வைக்கு எங்கள்ஊரில் ஒரு நாற்காலி கூடக் கிடையாது; அதோடு நாற்காலி செய்யத் தெரிந்த தச்சனும் இல்லை.

'நகரத்தில் செய்து விற்கும் நாற்காலியை வாங்கிக்கொண்டு வந்துவிட்டால் போச்சு' என்று எங்கள் பெத்தண்ணா ஒருயோசனையை முன் வைத்தான். அது உறுதியாக இராது என்று நிராகரித்துவிட்டார் எங்கள் அப்பா.

பக்கத்தில் ஒரு ஊரில் கெட்டிக்காரத் தச்சன் ஒருவன் இருப்பதாகவும் அவன் செய்யாத நாற்காலிகளே கிடையாதுஎன்றும், கவர்னரே வந்து அவன் செய்த நாற்காலிகளைப் பார்த்து மெச்சி இருக்கிறார் என்றும் எங்கள் அத்தைசொன்னாள்.

அத்தை சொன்னதிலுள்ள இரண்டாவது வாக்கியத்தைக் கேட்டதும் அம்மா அவளை, 'ஆமா, இவ ரொம்பக் கண்டா'என்கிற மாதிரிப் பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

அப்பா வேலையாளைக் கூப்பிட்டு, அந்தத் தச்சனுடைய ஊருக்கு அவனை அனுப்பிவிட்டு எங்களோடு வந்துஉட்கார்ந்தார். இப்போது, நாற்காலியை எந்த மரத்தில் செய்யலாம் என்பது பற்றி விவாதம் நடந்து கொண்டிருந்தது.

"தேக்கு மரத்தில் தான் செய்ய வேண்டும். அதுதான் தூக்க வைக்க லேசாகவும் அதே சமயத்தில் உறுதியாகவும்இருக்கும்" என்றாள் பாட்டி, தன்னுடைய நீட்டிய கால்களைத் தடவி விட்டுக் கொண்டே. (பாட்டிக்குத் தன்னுடையகால்களின் மீது மிகுந்த பிரியம். சதா அவற்றைத் தடவிவிட்டுக் கொண்டே இருப்பாள்!) இந்தச் சமயத்தில் எங்கள் தாய் மாமனார் எங்கள் வீட்டுக்குள் வந்தார். எங்கள் பெத்தண்ணா ஓடிபோய் அந்தமுக்காலியைத் தூக்கிக்கொண்டு வந்தான். சிறிதுநேரம் வீடே கொல்லென்று சிரித்து ஓய்ந்தது.

மாமனார் எங்கள் வீட்டுக்கு வந்தால் அவருக்கென்று உட்காரு வதற்கு அவரே ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்துவைத்திருக்கிறார். தலை போனாலும் அந்த இடத்தில்தான் அவர் உட்காருவார். பட்டக சாலையின் தெற்குஓரத்திலுள்ள சுவரை ஒட்டியுள்ள ஒரு தூணில் சாய்ந்துதான் உட்காருவார். உட்கார்ந்ததும் முதல் காரியமாகத் தம்குடுமியை

அவிழ்த்து ஒருதரம் தட்டித் தலையைச் சொறிந்து கொடுத்துத் திரும்பவும் குடுமியை இறுக்கிக்கட்டிக்கொண்டு விடுவார். இது அவர் தவறாமல் செய்கிற காரியம். இப்படிச் செய்து விட்டு அவர் தம்மையொட்டியுள்ளதரையைச் சுற்றிலும் பார்ப் பார். "தலையிலிருந்து துட்டு ஒன்றும் கிழே விழுந்ததாகத் தெரிய வில்லை" என்று அண்ணாஅவரைப் பார்த்து எக்கண்டமாகச் சொல்லிச் சிரிப்பான்.

அவர் எங்கள் வீட்டுக்கு வரும்போதெல்லாம் இப்படிக் காகித பாணங்களினால் துளைத்தெடுக்கப்படுவார்! 'சம்பந்திக்காரர்கள்; நீங்கள் பார்த்து என்னைக் கேலி செய்யாவிட்டால் வேறு யார் செய்வார்கள்' என்கிற மாதிரிதிறக்காமல் கல்லுப்பிள்ளையார் மாதிரி அவர் பாட்டுக்கு உட்கார்ந்து புன்னகையோடு இருப்பார். எங்களுடைய ஏடாகிப்பேச்சுக்களின் காரம் அதிகமாகும்போது மட்டும் அம்மா எங்களைப் பார்த்து ஒரு பொய் அதட்டுப் போடு வாள். அந்தஅதட்டிடு வாக்கியத்தின் கடைசி வார்த்தை "கழுதைகளா" என்று முடியும்.

மாமனார் வந்து உட்கார்ந்ததும், அம்மா எழுந்திருந்து அடுப்படிக்கு அவசரமாய்ப் போனாள். அவளைத் தொடர்ந்துஆட்டுக்குட்டியைப் போல் அப்பாவும் பின்னால் போனார்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஆளோடி வழியாக அம்மா கையில் வெள்ளித் தம்ளரில் காயமிட்ட மோரைஎடுத்துக்கொண்டு நடந்து வர, அம்மாவுக்குப் பின்னால் அப்பா அவளுக்குத் தெரியாமல் எங்களுக்கு மட்டும் தெரியும்படிவலிப்புக் காட்டிக்கொண்டே அவள் நடந்துவருகிற மாதிரியே வெறுங்கையைத் தம்ளர் ஏந்துகிற மாதிரிபிடித்துக்கொண்டு நடந்து வந்தார்! அவர் அப்படி நடந்து வந்தது, 'அவா அண்ணா வந்திருக்கானாம்; ரொம்ப அக்கறையாமோர் கொண்டுபோய்க் கொடுக்கிறதைப் பாரு' என்று சொல்லு கிறது மாதிரி இருந்தது. மோரும் பெருங்காயத்தின் மணமும், நாங்களும் இப்பொழுதே மோர் சாப்பிடணும் போல் இருந்தது.

மாமனார் பெரும்பாலும் எங்கள் வீட்டுக்கு வருகிறது மோர் சாப்பிடத்தான் என்று நினைப்போம். அந்தப் பசுமாட்டின்மோர் அவ்வளவு திவ்வியமாய் இருக்கும். அதோடு எங்கள் மாமனார் எங்கள் ஊரிலேயே பெரிய கஞ்சாம்பத்தி.அதாவது, ஈயாத லோபி என்று நினைப்பு எங்களுக்கு.

இந்தப் பசுவை அவர் தம்முடைய தங்கைக்காகக் கன்னாவரம் போய்த் தாமே நேராக வாங்கிக்கொண்டு வந்தார். இந்தக்காராம்பசுவின் கன்றுக்குட்டியின் பேரில் என்

தம்பிக்கும் குட்டித் தங்கைக்கும் தணியாத ஆசை. வீட்டைவிட்டுப்போகும்போதும் வீட்டுக்குள் வரும்போதும் மாமனார் பசுவை ஒரு சுற்றிச் சுற்றி வந்து அதைத் தடவிக்கொடுத்து (தன்கண்ணே எங்கே பட்டு விடுமோ என்ற பயம்!) இரண்டு வார்த்தை சிக்கனமாகப் புகழ்ந்து விட்டுத்தான் போவார். 'பால்வற்றியதும் பசுவை அவர் தம்மு டைய வீட்டுக்குக் கொண்டுபோய் விடுவார். கன்றுக்குட்டியும் பசுவோடு போய்விடும்'என்ற பெரிய பயம் என் சிறிய உடன் பிறப்புகளுக்கு.

பின்னால் ஏற்படப் போகிற இந்தப் பிரிவு அவர்களுக்குக் கன்றுக்குட்டியின் மெல் பிரீதியையும் மாமனாரின் பேரில்அதிகமான கசப்பையும் உண்டுபண்ணி விட்டது. அவர் ருசித்து மோரைச் சாப்பிடும்போது இந்தச் சின்னஞ்சிறுசுகள்தங்களுடைய பார்வை யாலேயே அவரைக் குத்துவார்கள்; கிள்ளுவார்கள்!

நாற்காலி விவாதத்தில் மாமனாரும் அக்கறை காட்டினார். தமக்கும் ஒரு நாற்காலி செய்ய வேண்டுமென்று பிரியம்இருப்பதாகத் தெரிவித்தார். எங்களுக்கும் ஒரு துணை கிடைத்தது மாதிரி ஆயிற்று.

வேப்ப மரத்தில் செய்வது நல்லது என்றும், அதில் உட்கார்ந்தால் உடம்புக்கு குளிர்ச்சி என்றும், மூலவியாதி கிட்டநாடாது என்றும் மாமனார் சொன்னார். வேப்பமரத்தைப்பற்றிப் பிரஸ்தாபித்தும் அப்பா மாமனாரை ஆச்சரியத்தோடுகூடிய திருட்டு முழியால் கவனித்தார். எங்கள் மந்தைப் புஞ்சையில் நீண்ட நாள் நின்று வைரம் பாய்ந்த ஒருவேப்பமரத்தை வெட்டி ஆறப்போட வேண்டுமென்று முந்தாநாள் தான் எங்கள் பண்ணைக்காரனிடம் அப்பாசொல்லிக்கொண்டு இருந்தார்.

பெத்தண்ணா சொன்னான், "பூவரசங் கட்டையில் செய்தால் ரொம்ப நன்றாக இருக்கும். அது கண் இறுக்கமுள்ள மரம்.நுண்மையாகவும் பளபளப்பாகவும் இருக்கும்; உறுதியுங்கூட" என்றhன்

அக்கா சொன்னாள், "இதுகளெல்லாம் வெளிர் நிறத்திலுள்ள வைகள். பார்க்கவே சகிக்காது. கொஞ்சநாள் போனால்இதுகள் மேல்; நமக்கு ஒரு வெறுப்பே உண்டாகிவிடும். நான் சொல்லு கிறேன், செங்கரும்பு நிறத்திலோ அல்லதுஎள்ளுப் பிண்ணாக்கு மாதிரி கறுப்பு நிறத்திலோ இருக்கிற மரத்தில்தான் செய்வது நல்லது; அப்புறம் உங்கள் இஷடம்."பளிச்சென்று எங்கள் கண்களுக்கு முன்னால் கண்ணாடி போல் மின்னும் பளபளப்பான கறுப்பு நிறத்தில் கடைந்தெடுத்தமுன்னத்தங் கால்களுடனும், சாய்வுக்கு

ஏற்றபடி வளைந்த, சோம்பல் முறிப்பது போலுள்ள பின்னத்தங் கால்களுடனும்ஒரு சுகாசனம் தோன்றி மறைந்தது.

எல்லாருக்குமே அவள் சொன்னது சரி என்று பட்டது. ஆக எங்களுக்கு ஒன்றும், எங்கள் மாமனார் வீட்டுக்கு ஒன்றுமாகஇரண்டு நாற்காலிகள் செய்ய உடனே ஏற்பாடு செய்யப்பட்டது.

இரண்டு நாற்காலிகளும் எங்கள் வீட்டில் வந்து இறங்கியபோது அதில் எந்த நாற்காலியை வைத்துக்கொண்டு எந்தநாற்காலியை மாமனார் வீட்டுக்குக் கொடுத்தனுப்புவது என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஒன்றைப் பார்த்தால்மற்றதைப் பார்க்க வேண் டாம். அப்படி ராமர் லெச்சுமணர் மாதிரி இருந்தது. ஒன்றை வைத்துக்கொண்டு மாமனார்வீட்டுக்கு ஒன்றைக் கொடுத்தனுப் பினோம். கொடுத்தனுப்பியதுதான் நல்ல நாற்காலியோ என்று ஒரு சந்தேகம்.

ஒவ்வொருத்தராய் உட்கார்ந்து பார்த்தோம். எழுந்திருக்க மனசே இல்லை. அடுத்தவர்களும் உட்கார்ந்துபார்க்கவேண்டுமே என்பதற் காக எழுந்திருக்க வேண்டியிருந்தது. பெத்தண்ணா உட்கார்ந்து பார்த்தான். ஆ...ஹா என்றுரசித்துச் சொன்னான். இரண்டு கைகளா லும் நாற்காலியின் கைகளைத் தேய்த்தான். சப்பணம் போட்டு உட்கார்ந்துபார்த்தான். "இதுக்கு ஒரு உறை தைத்துப் போட்டு விட வேணும். இல்லையென்றால் அழுக்காகிவிடும்" என்று அக்காசொன்னாள்.

குட்டித் தங்கைக்கும் தம்பிப் பயலுக்கும் அடிக்கடி சண்டை வரும், "நீ அப்போப் பிடிச்சி உட்கார்ந்துகிட்டே இருக்கியே?எழுந்திருடா, நான் உக்காரணும் இப்போ" என்று அவனைப் பார்த்துக் கத்துவாள். "ஐயோ, இப்பத்தானே உட்கார்ந்தேன்;பாரம்மா இவளை" என்று சொல்லுவான், அழ ஆரம்பிக்கப் போகும் முகத்தைப் போல் வைத்துக்கொண்டு.

தீ மாதிரி பரவிவிட்டது ஊருக்குள், எங்கள் வீட்டிற்கு நாற்காலி வந்த விஷயம். குழந்தைகளும் பெரியவர்களும் பெருங்கூட்டமாக வந்து வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். சிலர் தடவிப் பார்த்தார்கள். சிலர் உட்கார்ந்தே பார்த்தார்கள். ஒருகிழவனார் வந்து நாற்காலியைத் தூக்கிப் பார்த்தார். "நல்ல கனம், உறுதியாகச் செய்திருக்கிறான்" என்று தச்சனைப்பாராட்டினார்.

கொஞ்ச நாள் ஆயிற்று.

ஒரு நாள் ராத்திரி ரெண்டு மணி இருக்கும். யாரோ வந்து கதவைத் தட்டினார்கள். உள் திண்ணையில் படுத்திருந்தபெத்தண்ணா போய் கதவைத் திறந்தான். ஊருக்குள் யாரோ ஒரு முக்கியமான பிரமுகர் இப்பொழுதுதான் இறந்துபோய்விட்டாரென்றும் நாற்காலி வேண்டுமென்றும் கேட்டு எடுத்துக்கொண்டு போனார்கள். இறந்துபோன ஆசாமி எங்களுக்கும் வேண்டியவர் ஆனதால் நாங்கள் யாவரும் குடும்பத்தோடு போய் துட்டியில்கலந்துகொண் டோம். துட்டி வீட்டில் போய் பார்த்தால்...? எங்கள் வீட்டு நாற்காலியில் தான் இறந்துபோன அந்தப்'பிரமுகரை' உட்கார்த்தி வைத்திருந்தார்கள். இதற்குமுன் எங்கள் ஊரில் இறந்து போனவர்களைத் தரையில் தான் உட்கார்த்தி வைப்பார்கள். உரலைப் படுக்கவைத்துஅது உருண்டுவிடாமல் அண்டை கொடுத்து, ஒரு கோணிச் சாக்கில் வரகு வைக்கோலைத் திணித்து, அதைப்பாட்டுவசத்தில் உரலின் மேல் சாத்தி, அந்தச் சாய்மான திண்டுவில் இறந்துபோனவரை, சாய்ந்துஉட்கார்ந்திருப்பதுபோல் வைப்பார்கள். இந்த நாற்காலியில் உட்காரவைக்கும் புதுமோஸ்தரை எங்கள் ஊர்க்காரர்கள் எந்த ஊரில் போய் பார்த்துவிட்டுவந்தார்களோ? எங்கள் வீட்டு நாற்காலிக்குப் பிடித்தது வினை. (தரை டிக்கெட்டிலிருந்து நாற்காலிக்கு வந்துவிட்டார்கள்) அந்தவீட்டு 'விசேஷம்' முடிந்து நாற்காலியை எங்கள் வீட்டு முன்தொழுவில் கொண்டுவந்து போட்டுவிட்டுபோனார்கள். அந்த நாற்காலியைப் பார்க்கவே எங்கள் வீட்டுக் குழந்தைகள் பயப்பட்டன. வேலைக்காரனை கூப்பிட்டுஅதைக் கிணற்றடிக்குக் கொண்டுபோய் வைக்கோலால் தேய்த்துத் தேய்த்துப் பெரிய வாளிக்கு ஒரு பதினைந்து வாளிதண்ணீர்விட்டுக் கழுவி, திரும்பவும் கொண்டுவந்து முன் தொழுவத்தில் போட்டோம். பலநாள் ஆகியும் அதில் உட்காரஒருவருக்கும் தைரியம் இல்லை. அதை எப்படித் திரும்பவும் பழக்கத்துக்குக் கொண்டு வருவது என்றும் தெரியவில்லை.

ஒரு நாள் நல்ல வேளையாக எங்கள் வீட்டுக்கு ஒரு விருந்தாளி வந்தார். அந்த நாற்காலியை எடுத்துக்கொண்டு வந்துஅவருக்குப் போடச் சொன்னோம். அவரோ, "பரவாயில்லை, நான் சும்மா இப்படி உட்கார்ந்து கொள்கிறேன்" என்றுஜமக்காளத்தைப் பார்த்துப் போனார். எங்களுக்கு ஒரே பயம், அவர் எங்கே கீழே உட்கார்ந்து விடுவாரோ என்று.குடும்பத்தோடு அவரை வற்புறுத்தி நாற்காலி யில் உட்கார வைத்தோம். அவர் உட்கார்ந்த உடனே சின்னத் தம்பியும்குட்டித் தங்கையும் புழக்கடைத் தோட்டத்தைப்

பார்த்து ஓடினார்கள். மத்தியில் வந்து நாற்காலியில் உட்கார்ந்தவருக்குஎன்ன ஆச்சு என்று எட்டியும் பார்த்துக் கொள்வார்கள்!

மறுநாள் எங்கள் வீட்டுக்கு வந்த ஒரு உள்ளூர்க் கிழவனார் தற்செயலாகவே வந்து நாற்காலியில் உட்கார்ந்துஎங்களுக்கு மேலும் ஆறுதல் தந்தார். ('இப்போதே அவர் அந்த நாற்காலியில் உட்கார்ந்து பார்த்துக் கொள்கிறார்!' என்றுபெத்தண்ணா என் காதில் மட்டும் படும்படியாகச் சொன்னான்.) இப்படியாக, அந்த நாற்காலியைப் 'பழக்கி'னோம். முதலில் வீட்டிலுள்ள பெரியவர்கள் உட்கார்ந்தோம். குழந்தைகளுக்குஇன்னும் பயம் தெளியவில்லை. "கொஞ்சம் உட்காரேண்டா நீ முதலில்" என்று கெஞ்சுவாள், குட்டித் தங்கை தம்பிப்பயலைப் பார்த்து. "ஏன் நீ உட்காருவதுதானே?" என்பான் அவன் வெடுக்கென்று. எங்கள் வீட்டுக்கு வந்திருந்த பக்கத்துத் தெரு சுகந்தி தன்னுடைய ஒரு வயசுத் தம்பிப் பாப்பாவைக் கொண்டுவந்துஉட்காரவைத்தாள், அந்த நாற்காலியில். அதிலிருந்துதான் எங்கள் வீட்டுக் குழந்தைகளும் பயமில்லாமல் உட்காரஆரம்பித்தார்கள்.
திரும்பவும் ஒரு நாள் ராத்திரி, யாரோ இறந்துபோய்விட்டார்கள் என்று நாற்காலியை தூக்கிக்கொண்டுபோய்விட்டார்கள் இப்படி அடிக்கடி நடந்தது.

நாற்காலியை வருத்தத்தோடுதான் கொடுத்தனுப்புவோம். வந்து கேட்கும் இழவு வீட்டுக்காரர்கள் எங்கள் துக்கத்தைவேறு மாதிரி அர்த்தப்படுத்திக் கொள்வார்கள். தங்களவர்கள் இறந்து போன செய்தியைக் கேட்டுத்தான் இவர்கள்வருத்தம் அடைகிறார்கள் போலிருக்கிறது என்று நினைத்துக்கொள்வார்கள்!

தூக்கம் கலைந்த எரிச்சல் வேறு. "செத்துத் தொலைகிறவர்கள் ஏன்தான் இப்படி அகாலத்தில் சாகிறார்களோதெரியவில்லை?" என்று அக்கா ஒருநாள் சொன்னாள்.

"நல்ல நாற்காலி செய்தோமடா நாம்; செத்துப்போன ஊர்க் காரன்கள் உட்காருவதற்காக, சே!" என்றுஅலுத்துக்கொண்டான் அண்ணன்.

"நாற்காலி செய்யக் கொடுத்த நேரப் பலன்" என்றாள் அத்தை.

பெத்தண்ணா ஒரு நாள் ஒரு யோசனை செய்தான். அதை நாங்கள் இருவர் மட்டிலும் தனியாக வைத்துக் கொண்டோம்.

ஒரு நாள் அம்மா என்னை ஏதோ காரியமாக மாமனாரின் வீட்டுக்குப் போய்வரும்படி சொன்னாள்.

நான் அவருடைய வீட்டுக்குள் நுழைந்தபோது மாமனார் நாற் காலியில் அமர்க்களமாய் உட்கார்ந்து வெற்றிலைபோட்டுக் கொண் டிருந்தார். அவர் வெற்றிலை போடுவதைப்

பார்த்துக்கொண் டிருப்பதே சுவாராஸ்யமானபொழுதுபோக்கு. தினமும் தேய்த்துத் துடைத்த தங்க நிறத்தில் பளபளவென்றிருக்கும் சாண் அகலம், முழ நீளம், நாலுவிரல் உயரம் கொண்ட வெற்றிலைச் செல்லத்தை, 'நோகுமோ நோகாதோ' என்று அவ்வளவு மெல்லப் பக்குவ மாகத்திறந்து, பூஜைப் பெட்டியிலிருந்து சாமான்களை எடுத்து வைக்கிற பதனத்தில் ஒவ்வொன்றாக எடுத்து வெளியில்வைப்பார். வெற்றிலையை நன்றாகத் துடைப்பாரே தவிர, காம்பு களைக் கிள்ளும் வழக்கம் அவரிடம் கிடையாது. (அவ்வளவு சிக்கனம்!) சில சமயம் மொறசல் வெற்றிலை அகப்பட்டுவிட்டால் மட்டும் இலையின் முதுகிலுள்ளநரம்புகளை உரிப்பார். அப்பொழுது நமக்கு, "முத்தப்பனைப் பிடிச்சு முதுகுத்தோலை உறிச்சி பச்சை வெண்ணையைத்தடவி...." என்ற வெற்றிலையைப் பற்றிய அழிப் பாங்கதைப் பாடல் ஞாபகத்துக்கு வரும்.

களிப்பாக்கை எடுத்து முதலில் முகர்ந்து பார்ப்பார். அப்படி முகர்ந்து பார்த்துவிட்டால் 'சொக்கு' ஏற்படாதாம். அடுத்துஅந்தப் பாக்கை ஊதுவார்; அதிலுள்ள கண்ணுக்குத் தெரியாத பாக்குப் புழுக்கள் போகவேண்டாமா அதற்காக,ஆரம்பத்தில் மெதுவாக ஆரம்பிக்கும் இந்த முகர்ந்து பார்த்தலும் ஊதலும் வரவர வேகமாகி ஒரு நாலைந்து தடவைமூக்குக்கும் வாய்க்குமாக, கை மேலும் கீழும் உம் உஷ், உம் உஷ் என்ற சத்தத்துடன் சுத்தமாகி டபக்கென்று வாய்க்குள்சென்றுவிடும்.

ஒருவர் உபயோகிக்கும் அவருடைய சுண்ணாம்பு டப்பியைப் பார்த்தாலே அவருடைய சுத்தத்தைப் பற்றித்தெரிந்துவிடும். மாமனார் இதிலெல்லாம் மன்னன். விரலில் மிஞ்சிய சுண்ணாம்பைக் கூட வீணாக மற்றப்பொருள்களின் மேல் தடவமாட்டார். அவருடைய சுண்ணாம்பு டப்பியை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொள்ளலாம்.பதினைந்து வருஷத்துக்கு முன் வாங்கிய எவரெடி டார்ச் லைட் இன்னும் புத்தம் புதுசாக இப்போதுதான் கடையிலிருந்து வாங்கிக்கொண்டு வந்ததோ என்று நினைக்கும்படியாக உபயோகத்தில் இருக்கிறது அவரிடம். அதோடு சேர்த்துவாங்கிய எங்கள் வீட்டு டார்ச் லைட் சொட்டு விழுந்து நெளிசலாகி மஞ்சள் கலரில் பார்க்கப் பரிதாபமாக, சாகப் போகும்நீண்ட நாள் நோயாளி யைப் போல் காட்சியளிக்கிறது.

நாற்காலியை அவர் தவிர அந்த வீட்டில் யாரும் உபயோகிக்கக் கூடாது. காலையில் எழுந்திருந்ததும் முதல் காரியமாகஅதைத் துடைத்து வைப்பார். ஓர் இடத்திலிருந்து அதை இன்னோர் இடத் துக்குத் தாமே மெதுவாக எடுத்துக்கொண்டுபோய்ச் சத்தமில்லாமல்

தண்ணீர் நிறைந்த மண்பானையை இறக்கி வைப்பது போல் அவ்வளவு மெதுவாக வைப்பார்.

மாமனார் என்னைக் கண்டதும், "வரவேணும் மாப்பிள்ளைவாள்" என்று கூறி வரவேற்றார். "கொஞ்சம் வெற்றிலைபோடலாமோ?" என்று என்னைக் கேட்டுவிட்டுப் பதிலும் அவரே சொன்னார்: "படிக்கிற பிள்ளை வெற்றிலை போட்டால்கோழி முட்டும்!"

அம்மா சொல்லியனுப்பிய தகவலை அவரிடம் சொல்லிவிட்டு வீடு திரும்பினேன்.

ராத்திரி அகாலத்தில் கதவு தட்டும் சத்தம் கேட்டது. வீட்டில் எல்லாம் அயர்ந்த தூக்கம். நான் பெத்தண்ணாவைஎழுப்பினேன்.

நாற்காலிக்காக வந்த ஒரு இழவு வீட்டுக்காரர்கள் வெளியில் நின்றுக்கொண்டிருந்தார்கள். பெத்தண்ணா அவர்களைத்தெருப்பக்கம் அழைத்துக்கொண்டு போனான். நானும் போனேன். வந்த விஷ யத்தை அவர்கள் சொல்லி முடித்ததும்பெத்தண்ணா அவர்களிடம் நிதானமாகப் பதில் சொன்னான்.

"நாற்காலிதானே? அது எங்கள் மாமனார் வீட்டில் இருக்கிறது அங்கே போய்க் கேளுங்கள், தருவார். நாங்கள்சொன்னதாகச் சொல்ல வேண்டாம். இப்படிக் காரியங்களுக்கு இல்லை என்று சொல்ல முடியுமா? அங்கேகிடைக்காவிட்டால் நேரே இங்கே வாருங்கள்; அப்புறம் பார்த்துக்கொள்வோம்" என்று பேசி அவர் களை அனுப்பிவிட்டு,வீட்டுக்குள் வந்து இருவரும் சப்தமில்லாமல் சிரித்தோம்.

அப்பா தூக்கச் சடைவோடு படுக்கையில் புரண்டுகொண்டே, " யார் வந்தது?" என்று கேட்டார்.

"வேலை என்ன? பிணையலுக்கு மாடுகள் வேணுமாம்" என்றான் பெத்தண்ணா.

துப்பட்டியை இழுத்துப் போர்த்திக்கொண்டு மறுபுறம் திரும்பிப் படுத்துக்கொண்டார் அப்பா.

இப்பொழுது மாமனார் காட்டில் பெய்து கொண்டிருந்தது மழை!

ரொம்ப நாள் கழித்து, நான் மாமனாரின் வீட்டுக்கு ஒரு நாள் போனபோது அவர் தரையில் உட்கார்ந்து வெற்றிலைபோட்டுக் கொண்டிருந்தார். வழக்கமான சிரிப்புடனும் பேச்சுடனும் என்னை வரவேற்றார்.

"என்ன இப்படிக் கீழே? நாற்காலி எங்கே?" சுற்று முற்றும் கவனித்தேன். வெற்றிலையின் முதுகில் சுண்ணாம்பைத்தடவிக் கொண்டே என்னை ஆழ்ந்து பார்த்துப் புன்னகை

செய்தார். பின்பு அமைதியாக, "அந்தக் காரியத்துக்கே அந்தநாற்காலியை வைத்துக் கொள்ளும்படி நான் கொடுத்துவிட்டேன். அதுக்கும் ஒன்று வேண்டியதுதானே?" என்றார். எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. வீட்டுக்குத் திரும்பி வரும்போது இந்தச் செய்தியைச் சொல்லப்பெத்தண்ணா விடம் வேகமாக விரைந்தேன். ஆனால் வரவர என்னுடைய வேகம் குறைந்து தன் நடையாயிற்று.

## 4. நகரம்

**ஆசிரியர் - சுஜாதா**

**ஆசிரியர் குறிப்பு**

இயற்பெயர் - ரங்கராஜன்.தன் மனைவியின் பெயரதப் புனைப் பெயராகக் கொண்டவர். தமிழகத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களில் ஒருவர். தனிப்பட்ட கற்பனை மற்றும் நடையால் வாசகர்களை கவர்ந்தவர். பிறப்பு- 1935 மே 3

இறப்பு 2008 பிப்ரவரி 27, இவரதுமுதல் சிறுகதை'சிவாஜி'பத்திரிக்கையில் வெளிவந்தது. சிறகதை–புதினம், நாடகம், அறிவியல் நூல்கள்,கவிதைகள், கட்டுரைகள், திரைப்படவசனம், தொலைக்காட்சி நாடகம் எனப் பலத் துறைகளில் முத்திரை படைத்தவர். என் இனிய இயந்திரா, மீண்டும் ஜீனோ, கொலையுதிர் காலம் ஆகியன இவரதுபடைப்புகளில் குறிப்பிடத்தக்கது.

**மனிதநேயம்**

சகமனிதர்களிடம் அன்புகாட்டுவதை மனிதநேயம் எனக் கூறலாம். ஊயிர் இரக்கப்பண்பு பிறர்க்குத் துன்பம் இழைக்காமல் இருத்தல் இயலாதவர்களின் துன்பத்தைப் போக்குதல், இரக்கசுபாவமும் கொண்டிருத்தல் ஆகியன மனிதநேயத்தில் முக்கிய இடம் வசிக்கின்றனர். உலகிலுள்ள எல்லா உயிரினங்களிலும் ஆறறிவுள்ள மனிதனுக்கு மிக முக்கியமாக இருக்க வேண்டிய பண்பு மனிதநேயம் ஆகும். பிறர் உயிர்களின் துன்பத்தைப் பற்றி சிந்திப்பதாலும், வரலாறுகளைப் படிப்பதாலும்,தன் அனுபவத்தாலும் ஒருவன் மனிதநேயத்தைப் பெறுகின்றான். இதனைக் கருத்தில் கொண்டே சான்றோர்கள் இலக்கியங்களிலும், நீதிநெறி நூல்களிலும் மனிதநேயத்தை வலியுறுத்திஉள்ளனர்.

**சான்றோர்களின் மனிதநேயம்**

அன்பின் வழியதுஉயிர் நிலை அ.ஃதிலார்க்கு
எண்புதோல் போர்த்த உடம்பு

எனத் திருவள்ளுவர் மனிதநேயத்தின் அடிப்படைஅன்புஎனஉணர்த்தினார்.

கணியன் பூங்குன்றனார் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என மனிதர்களின் ஒற்றுமையை வலியுறுத்தினார்.

'வாடிய பயிராக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என வல்லளார் பிறர் உயிர்களின் மீதுநாம் கொள்ளவேண்டிய உயிர் இரக்கத்ததை வலியுறுத்தினார்.

விவேகானந்தர் அமெரிக்காவின் சிகாகோபாராளமன்றத்தில் நிகழ்த்திய உரையில் 'சகோதரசகோதரிகளே' என்றவார்த்தையின் வாயிலாக மனிதநேயத்தை மக்களிடையே எடுத்துரைத்தார்.

முன்பு நிகழ்ந்த போர்களாலும் மற்றும் குழந்தைகள் மீதுதாக்குதல் தவிர்க்கப்பட்டது. தனது எதிரியான ராவணனை கூட இராமன் 'இன்றுபோய் நாளைவா'என்றுகுறிப்பிட்டார்.

கண்ணுக்குத் தெரிந்த மனிதரை மதிக்காவிட்டால்
கண்ணுக்குத் தெரியாத கடவுளை
மதித்துப் பயன் இல்லை.

அன்னைத் தொரசா

இத்தகைய அடிப்படை பண்பாகிய மனிதநேயம் இல்லாத நிலையின் அவலத்தை நகரம் கதை எடுத்துரைக்கிறது.

**நகரம் சிறுகதையில் மனிதநேயம்**

இக்கதையின் தலைக் கதாப்பாத்திரம் வள்ளியம்மாள். கல்வியறிவு இல்லாத மதுரையைச் சேர்ந்த கிராமத்துப் பெண்மணி.கணவனை இழந்தவள்.கூலிவேலைக்குச் சென்று பிழைப்பை நடத்துபவள். விவரம் அற்றவள். நகரத்தின் வாசத்தை அறியாதவள். சூதுவாது அற்றவள்.

**நகரம் சிறுகதையில் மனிதநேயம்**

இக்கதையின் தலைமைக் கதாப்பாத்திரம் வள்ளியம்மாள். கல்வியறிவு இல்லாதமதுரையைச் சேர்ந்த கிராமத்து பெண்மணி கணவனை இழந்தவள். கூலிவேலைக்குச் சென்று பிழைப்பை நடத்துபவள் விவரம் அற்றவள் நகரத்தின் வாசத்தை அறியாதவள். சூதவாது அற்றவள்.

வள்ளியம்மாவின் மகள் பாப்பாத்தியின் குறையாத ஜீரத்திற்கு மூனாண்டி பட்டியின் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் பார்க்க இயலாது மதுரை நகரத்தில் உள்ள அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல பரிந்துரைக்கின்றார் மருத்துவர். நகரத்தின் அரசு மருத்துவமனையில் அவள் மருத்துவர்களாலும் ஊழியர்களாலும் மனிதநேயமற்ற முறையில் நடத்தப்படும் நிலையை நகரம் சிறுகதை எடுத்துக் கூறுகிறது.

விவர மற்ற கிராமத்துப் பெண்ணாகிய வள்ளியம்மாள் மகளைச் சிகிச்சைக்காக அனுமதிப்பதற்கு அங்குள்ள ஊழியர்கள் எவரும் உதவி செய்யவில்லை மாறாக அலைக்கழிக்கின்றனர். மனிதநேயத்தோடு அவளுக்கு உதவுவார் எவரும் இல்லை.

நகரம் மருத்துவத்திலும், இறிவியல் முன்னேற்றத்திலும், நாகரீத்திலும், கல்வியிலும் வளர்ந்திருத்தாலும் மனிதத்தினுடைய அடிப்படைப் பண்பாகிய மனிதநேயத்தில் வீழ்ச்சியுற்றே காணப்படுகிறது. ஒரு நகரத்தினுடைய, நாட்டினுடைய வளர்ச்சி என்பது அறிவு, பண்பு, மனிதநேயம் ஆகியவற்றின் ஒட்டு மொத்த வளர்ச்சியாகும்.

நகரத்தின் மனிதநேய மற்றநிலையைக் கண்டு வருந்தும் வள்ளியம்மாள் தன் மகளின் உயிருக்கே ஆபத்தான நிலையிலும் கூட, அடுத்தநாள் வரை காத்திருந்து சிகிச்சை மேற்கொள்ளவில்லை. இரக்க மற்ற அச்சூழலை எதிர்கொள்ள அவருக்குத் துணிவும் இல்லை, துணையும் இல்லை. கிராமத்தில் ஒருவருக்கு ஓர் உதவி தேவைப்படுமாயின் அங்கு ஊரே கூடி உதவும் அச்சூழலில் வாழ்ந்த வள்ளிம்மாளுக்கு இரக்க மற்ற நகரவாசிகளின் மத்தியில் அவள்காட்சிப் பொருளாகவே தென்பட்டாள்.

மகள் பாப்பாத்தியைத் தனியாக இவர்களிடம் விட்டுச்செல்லவும் அஞ்சினாள். பணத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கும் இம்மக்களுடன் மேலும் ஒருநாள் மட்டுமல்ல,ஒருநிமிடம் கூட செலவழிக்க முடியாதஎனத் தீர்மானமாக முடிவெடுத்தாள். எனவே கடவுள் மீது பாரத்தைப் போட்டுவிட்டு,தன் மகளுக்கு குணமாகிவிடும் என்ற நம்பிக்கையோ, ரிக்ஷாவில் ஊருக்குச் செல்வதற்காகப் பேருந்து நிலையத்தை நோக்கிப் பயணிக்கின்றாள் வள்ளிம்மாள். அவளின் அன்பும் நம்பிக்கையுமே அவளது மகளைக் காப்பாற்றும்.

நமது வாழ்வில் ஒவ்வொருநாளும் எதிர்கொள்ளும் இதுபோன்ற சூழலில் நாம் மனிதர்களாக இருப்போம்.

## 5. எஸ்தர் - வண்ணநிலவன்

**த**மிழ்ச் சிறுகதையின் வரலாறு இருபதாம் நூற்றாண்டில் சுப்பிரமணிய பாரதியிலிருந்தே தொடங்கிவிட்டது. ஆனால், சிறுகதை ஆற்றல் மிக்க வடிவமாக அந்த நூற்றாண்டின் மத்தியில்தான் வலுப்பெற்றது. தமிழ்ச் சிறுகதை முன்னோடிகளில் ஒருவரான புதுமைப்பித்தன்தான் அதைச் சாத்தியப்படுத்தினார். திருத்தமான வடிவம், திடகாத்திரமான உள்ளடக்கம், அலங்காரமற்ற விவரிப்பு மொழி எனத் தமிழின் முன்மாதிரியான நவீனச் சிறுகதைகளை உருவாக்கிக் காண்பித்தார்.

புதுமைப்பித்தனுக்குப் பிறகு அந்த மரபில் தமிழின் முன்னுதாரணக் கதைகளை உருவாக்கி வருபவர் வண்ணநிலவன்.

**வ**ண்ணநிலவனின் முதல் சிறுகதை 1970-ம் ஆண்டு 'தாமரை'இதழில் வெளிவந்தது. அவரது சமீபத்திய சிறுகதை 2011-ல் 'ஆனந்த விகட'னில் வெளிவந்தது. இந்த இடைவெளிக்குள் அவர் தொண்ணூற்றிரண்டு கதைகளை எழுதியிருக்கிறார். சில கதைகள் தொகுக்கப்படாமலிருக்கக்கூடும். அவரது முதல் கதையான 'யுகதர்ம'த்துக்கும் சமீபத்தியான கதையான 'மழைப் பயண'த்துக்கும் இடைப்பட்ட நாற்பது ஆண்டுக் காலகட்டத்தில் வெளியேயும் உள்ளேயும் நிகழ்ந்த மனப் பிரயாசங்களின் வெளிப்பாடுதான் அவரது கதைகளுக்கான ஆதாரம் எனலாம். இந்த இரு கதைகளுக்கும் இடையில் பல்வேறு விதமான பரந்துபட்ட வாழ்க்கை முறைகளையும் மனிதப் பாங்குகளையும் வண்ணநிலவனின் கதைகள் சொல்லிச் செல்கின்றன. இந்தச் சித்திரிப்பு மொழி வழியாக வறுமை என்னும் தீப்பந்தம் சூரியனைப் போல் பிரம்மாண்டமாக எழுகிறது. பல கதைகளில் சோறு அரிய பண்டமாக வருகிறது. அதற்காக மனிதர்கள் பெரும்பாடுபடுகிறார்கள். ஆனாலும் அவர்களுக்குக் கோதுமைக் கஞ்சியும், கேப்பைக் கூழும்தான் உண்ணக் கிடைக்கின்றன.

1970-களில் 80-களில் நிலவிய வேலையில்லாத் திண்டாட்டத்தின் மனக் கிலேசத்தை இவரது பல கதைகள் நேடியாகவும் மறைமுகமாகவும் சித்திரிக்கின்றன. இந்த வேலையில்லாத் திண்டாட்டம், ஜவுளிக் கடைகள் ஊழியர்கள் போன்ற உதிரித் தொழிலாளர்களின் வாழ்க்கையில் ஏற்படுத்திய மோசமான விளைவுகளையும் சில கதைகள் உணர்வுபூர்வமாகச் சித்திரிக்கின்றன. மேலும் இந்த வறுமையான காலகட்டத்தில் தென்பகுதியில் கிறிஸ்துவ சமயம் வேர் பிடித்ததும், அதனால் குடும்பங்களில் நடந்த சச்சரவுகளும் சில கதைகளில் உபதொழிலாக வெளிப்பட்டிருக்கின்றன.

**தொ**ழிலற்றுப் போன வெட்டியான், பனையேறும் தொழிலாளி, சாராயம் கடத்துபவர்கள், தலைமறைவுப் போராளி, சர்க்கஸ் போடுபவன் எனப் பலதரப்பட்ட மனிதர்களை வண்ணநிலவன் கதைகள் சித்தரித்தாலும் அவரது கதைகளின் பிரதான பாத்திரங்கள் மூன்று பத்தி வாடகை வீடுகளின் வசிக்கும் கீழ் நடுத்தர வீட்டு மக்கள்தான். தார்சாவிலிருந்து (வரவேற்பறை) காண முடியாத அவர்களின் பட்டாளைகளின்

(நடுப்பகுதி) சங்கதிகளை, மனக் கிலேசங்களை விவரிப்பின் வழியே இந்தக் கதைகள் மூலம் அவர் அம்பலப்படுத்துகிறார்.

## எஸ்தர்

'பஞ்சம் பிழைக்கப் போவது' என்பது சில பத்தாண்டுகள் முன்பு இங்கு நடந்த ஒரு துயரமான சமூக நிகழ்வு. அடுத்த மழைக்காலம்வரை சாகாமல் உயிரைப் பிடித்துக்கொள்வதற்கான இடப்பெயர்வு. சோறுதான் இதன் பிரதான நோக்கம். இதுபோல் பஞ்சம் பிழைக்கப்போகும் குடும்பம் ஒன்றை வண்ணநிலவன் 'எஸ்த'ரில் விவரிக்கிறார். எல்லோரும் பஞ்சம் பிழைக்கப்போய்விட்ட ஊரில் தனியாக இருக்கிறது அந்தக் குடும்பம். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என இருக்கும் அந்தக் குடும்பத்துக்கு ஓட மரமாக இருக்கிறாள் எஸ்தர். அவள் அவர்களுக்குச் சித்தி. படுத்த படுக்கையாக இருக்கும் பாட்டியைத் தனியே விட்டுவிட்டுப் போக முடியாததால் அவர்கள் இருக்கிறார்கள். கொஞ்சம் கம்பும் கேப்பையும் ஒரு தீப்பெட்டியும்தான் சேமிப்பில் இருக்கின்றன. தினமும் எல்லோருக்கும் அரை வயிற்றுக்குக் கஞ்சி காய்ச்சி ஊற்றுகிறாள். கால்நடைகளை அழித்துவிடுகிறார்கள். கடைசித் தீக்குச்சியும் தீர்ந்த பிறகு சுள்ளிகளைக் கொண்டு தீயைக் காப்பாற்றி வருகிறாள். நாளுக்குநாள் வெயில் கூடுகிறது. தண்ணீர்த் தட்டுப்பாடு. இரவில் இருட்டு அடர்த்தியாகிறது. இனியும் இங்கு இருப்பது நல்லதல்ல என நினைக்கிறாள். பாட்டியும் வேண்டும். பிள்ளைகளும் முக்கியம். இறுதியில் எஸ்தர் என்னதான் செய்வாள்? அவள் தைரியமான முடிவை எடுப்பதுடன் முடிகிறது கதை. மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தும் இந்தக் கதை, உணர்ச்சிகரமான குடும்ப உறவுகள், அதற்கான மதிப்பீடுகள் எல்லாவற்றையும் வறுமை பாளம் பாளமாகச் சிதறடிப்பதை அப்பட்டமாகச் சித்திரிக்கிறது.

## 6. "மரப்பாச்சி" - உமா மகேஸ்வரி

உமா மகேஸ்வரி 1971ஆம் ஆண்டு போடி நாயக்கனூரில் பிறந்தவர். ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர். தனது பதின் வயதிலேயே கவிதை எழுதத் தொடங்கியவர். 1985இல் கவிதை எழுதத் தொடங்கி, சிறுகதை, நாவல் என இலக்கிய உலகில் தமது தளத்தை உருவாக்கிக்கொண்டவர். நட்சத்திரங்களின் நடுவே(1990), வெறும்பொழுது(2002), கற்பாவை(2004), என மூன்று கவிதைத் தொகுதிகளும்

மரப்பாச்சி(2002), தொலைகடல் (2004), அரளிவனம்(2008) என்று மூன்று சிறுகதைத் தொகுதிகளும் யாரும் யாருடனும் இல்லை(2003) என்ற நாவலும் இவருடைய ஆக்கங்களாகும். கதா விருது, திருப்பூர் தமிழ்ச் சங்க விருது, இந்தியா டுடேயின் சிகரம் விருது, ஏலாதி, கணையாழி, இலக்கியச் சிந்தனை, கவிஞர் சிற்பி இலக்கியப் பரிசு எனப் பல விருதுகளையும் பரிசு களையும் தமது ஆக்கங்களுக்காகப் பெற்றிருக்கிறார். ஆண்டிப்பட்டி யில் வசித்து வருகிறார்.

மரப்பாச்சி தொடங்கி ரணகள்ளி வரை 14 கதைகள் மரப்பாச்சி தொகுதியிலும் மூடாதஜன்னல் முதல் தொலைகடல் வரை 14 கதைகள் தொலைகடல் தொகுதியிலும் அரளிவனம் முதற்கொண்டு கனகாம்பரத் திரைகள் வரை 14 கதைகள் அரளிவனம் தொகுதியிலு மாக 42 சிறுகதைகள் இடம்பெற்றிருக்கின்றன. இவரது சிறுகதை கள், ஆணுலகம் சார்ந்த கருத்தியல்கள் பெண்ணுக்கு எதிராக எவ்வாறு செயல்படுகின்றன? பெண்ணை எவ்வாறு செயல்படுத்து கின்றன? என்பதைக் கட்டவிழ்த்து வெளிப்படுத்துகின்றன. பெண்களின் தொலைந்துபோன வாழ்க்கையை இக்கதைகள் பேசுகின்றன. ஆணாதிக்கச் சமூகத்தின் ஒருதலைப்பட்சமான செயற்பாடுகள் கட்டவிழ்க்கப்படுகின்றன.

1.முதல் கதையான "**மரப்பாச்சி**"யில் உலகளாவிய , பெண்களுக்கெதிரான வன்கொடுமையான , பெண்குழந்தைகளுக்குச் செய்யப்படும் பாலியல் வன்முறையை கருவாகக் கொண்டுள்ளார். படிக்கும் ஏறத்தாழ அத்தனைப் பெண்களுக்குமே தங்கள் வாழ்விலோ அல்லது தமக்கு மிக நெருகியவருக்கோ, நடந்த அல்லது நடந்து விடுமோ என்று அஞ்சும் கொடுமை கண்ணில் நிழலாடுகிறது. அனு என்ற அந்தக் கதையின் நாயகியான சிறுமியின் வாயிலாக உலகப் பெண்டிர் அனைவருக்குமான அறைகூவலை விடுக்கிறார் உமா. சின்னஞ்சிறு பெண் குழந்தைகளுக்கான கற்பனா மாய உலகம் எத்தனை அழகானது?...பதின் பருவம் நோக்கி அது நகரும் போது அவளுள் நிகழும் மாற்றங்கள் எத்தனை நாசூக்கானவை, எத்தனை எத்தனை கனவுகள் ,எவ்வளவு ஏக்கங்கள், தாய்க்கும் கூட நாணும், பெண்மையின் அழகை எத்தனை எளிமையாக ஒரு கொடூரன் தன் உடல் வலிமையினால் சிதைத்து விட முடிகிறது?

இனிமேல் கனவுகள் காணும் உறக்கம் வாய்க்குமா அவளுக்கு?கற்பனையில் வரும் காதலனும் தேற்றி விட முடியுமா அவளை? சிறிது கூட அவிழாத ஒரு மொட்டை விரியவிடாமல் அழித்து விடும் காமுகர்களை என்ன செய்யலாம்? தன் உடல் குறித்த

அறுவெருப்பை, இம்மாதிரியான இன்னலை சந்தித்த பெண் ஒரு நாளும் மாற்றிக் கொள்ள இயலுவதில்லை.

**பாட நூல்: கற்பகச்சோலை – தமிழ் ஏடு.**

கற்பகம் உயர்கல்வி கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு.

## இன்றியமையாத வினாக்கள்

## இரு மதிப்பெண் வினாக்கள்

1. கி.ராஜநாராயணன் - குறிப்பு வரைக.
2. வ.வே.சு. ஐயர்- குறிப்பு வரைக?

## பெரு வினாக்கள்

1. குளத்தங்கரை அரசமரம் சிறுகதையின் மையத்தைத் திறனாய்வு செய்க.
2. நகரம் - நரகமான சூழலை சுஜாதாவின் சிறுகதை வழி விளக்குக.
3. பெண்களின் வாழ்வியல் சிக்கல்களை குளத்தங்கரை அரசமரம் சிறுகதை வழி ஆராய்க??
4. 'நகரம்'- கதையின் மையப் பொருள் குறித்துக் கட்டுரை வரைக?
5. நாற்காலி சிறுகதையின் மையக்கருத்தைக் கூறுக?
6. காட்டில் ஒருமான் - சிறுகதையில் பெண்ணியக் கூறுகளை ஆராய்க?
7. குளத்தங்கரை அரசமரம் - கருப்பொருள் குன்றாது கட்டுரை வரைக.
8. 'மரப்பாச்சி' சிறுகதை புலப்படுத்தும் கருத்துக்களை விவரி.
9. எஸ்தர் சிறுகதையின் மையப்பொருள் குறித்து விவரிக்க.

KAHE

## பகுதி –அ ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. ‘தமிழ்ச் சிறுகதைத் தந்தை’ என்று அழைக்கப்படுபவர்___________.

(அ). வண்ண நிலவன் (ஆ). சுஜாதா (இ). கி.ராஜநாராயணன் (ஈ). வ.வே.சுப்பிரமணியர்

2. ‘கரிசல் வட்டார அகராதி ’ உருவாக்கியவர் யார்?

(அ). வண்ண நிலவன் (ஆ). சுஜாதா (இ). கி.ராஜநாராயணன் (ஈ). வ.வே.சுப்பிரமணியர்

3. சுஜாதா அவர்களால் படைக்கப்பட்ட பாடப்பகுதி சிறுகதையின் பெயர் என்ன?

(அ). நகரம் (ஆ). நாற்காலி (இ). மரப்பாச்சி (ஈ). காட்டில் ஒரு மான்

4. ‘காட்டில் ஒரு மான்’ சிறுகதையின் மையப்பொருள் யாது?

(அ). நகைச்சுவை (ஆ). பெண்ணியம் (இ). குடும்பம் (ஈ). பக்தி

5. நகரம் சிறுகதையில் வள்ளியம்மாளின் மகள் பெயர் என்ன?.

(அ). தங்கம் (ஆ). அம்பை (இ). ருக்மணி (ஈ). பாப்பாத்தி

6. நாற்காலி சிறுகதையின் ஆசிரியார் யார்?

அ) கி.ராஜநாராயணன் ஆ) சுஜாதா இ) வ.வே.சு.ஐயர் ஈ) உமாமகேஸ்வாp

7. எஸ்தர் சிறுகதையின் ஆசிரியார் யார்?

அ) கி.ராஜநாராயணன் ஆ) சுஜாதா இ) வ.வே.சு.ஐயர் ஈ) வண்ண நிலவன்

8. தமிழ்ச்சிறுகதையின் தந்தை யார்?

அ) அம்பை ஆ) சுஜாதா இ) வ.வே.சு. ஐயர் ஈ) கி.ராஜநாராயணன்

9. ருக்மணி என்ற கதாபாத்திரம் இடம்பெறும் சிறுகதை எது?

அ) நகரம் ஆ) எஸ்தர் இ) நாற்காலி ஈ) குளத்தங்கரை அரசமரம்

10. காட்டில் ஒருமான் - சிறுகதையின் ஆசிரியார் யார்?

அ) கி.ராஜநாராயணன் ஆ) சுஜாதா இ) வ.சு.ஐயர் ஈ) அம்பை

11. கி.ராஜநாராயணன் எழுதிய சிறுகதையின் பெயர் என்ன?

அ) காட்டில் ஒருமான் ஆ) நாற்காலி இ) எஸ்தர் ஈ) மரப்பாச்சி

12. காட்டில் ஒருமான் சிறுகதையின் ஆசிரியார் யார்?

அ) வ.வே.சு ஆ) சுஜாதா இ) அம்பை ஈ) வண்ணநிலவன்

13. கரிசல் இயக்கத்தின் தந்தை யார்?

அ) கி.ராஜநாராயணன் ஆ) சுஜாதா இ) அம்பை ஈ) வண்ணநிலவன்

14. சுஜாதாவின் இயற்பெயர் யாது?

அ) சுரதா ஆ) ரங்கராஜ் இ) அம்பை ஈ) நிலவன்

15. வண்ணநிலவனின் சிறுகதை எது?.

(அ). காட்டில் ஒரு மான் (ஆ). மரப்பாச்சி  (இ). நகரம் (ஈ). எஸ்தர்

16. உமா மகேஸ்வாp எழுதிய சிறுகதையின் பெயர் என்ன?

அ) காட்டில் ஒருமான் ஆ) நகரம் இ) எஸ்தர் ஈ) மரப்பாச்சி

17. ‘மரப்பாச்சி’ - சிறுகதையின் ஆசிரியர் யார்?.

(அ) அம்பை (ஆ) வ.வே.சு.ஐயர் (இ) உமாமகேஸ்வரி (ஈ) சுஜாதா

18.  ‘அகஸ்டின்’  - கதாபாத்திரம் இடம்பெறும் சிறுகதையின் பெயர் என்ன?.

(அ) குளத்தங்கரை அரசமரம் (ஆ) காட்டில் ஒரு மான் (இ) நகரம் (ஈ) எஸ்தர்

## UNIT-V

## SYLLABUS

| |
|---|
| மொழிப்பயிற்சி – Creative writing practices – Self study |

### மொழிப்பயிற்சி

படைப்பிலக்கியப் பயிற்சிகள் (கதை, கவிதை,கட்டுரை, உரைநடை எழுதுதல்)
மொழிபெயர்ப்பு

**பாட நூல்: கற்பகச்சோலை – தமிழ் ஏடு.**
கற்பகம் உயர்கல்வி கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு.

### இன்றியமையாத வினாக்கள்

### பெரு வினாக்கள்

1. விடியல்'- என்னும் தலைப்பில் பத்து வரிகளுக்கு குறையாது கவிதை எழுதுக.
2. "இந்தியச் சமூகமும் இளைஞர்களும்" என்னும் தலைப்பில் இரண்டு பக்கங்களுக்குக் குறையாது கட்டுரை வரைக.
3. தன்னம்பிக்கை எனும் தலைப்பில் கவிதை எழுதுக.
4. தமிழ் இலக்கியங்களில் அகமும் புறமும் எனும் தலைப்பில் கட்டுரை வரைக
5. தன்னம்பிக்கை எனும் தலைப்பில் கவிதை எழுதுக.
6. 'தமிழர்களின் கலாச்சாரமும் பண்பாடும்' எனும் தலைப்பில் கட்டுரை வரைக. (அல்லது)
7. 'சுற்றுச்சூழலும் நீர்வளமும்' குறித்துக் கட்டுரை எழுதுக.